வாரவெளியீடு

# ஆதவன்

ஒளி: 6
23.07.2000
விலை ரூபா
12.00
Registered as a News Paper in Sri Lanka

ராவய வெளியீடு
ATHAVAN ආදවන්







# கறுப்பு ஜுலையின் சூத்திரதாரி யார்?

## கணக்கைக் கணி

அறிவியல் துறையில் சூழ்ந்து கற்றோர்
உலகில் அதிகம்
நெறியியல் துறையின் நீளம் அறிந்தோர்
உலகில் அதிகம்
சமயம் சார்ந்த மெய்யியல் அறிவில்
மிகைத்தோர் அதிகம்
பொருளியல் துறையைப் போதிக்குமளவு
பெருகியோர் அதிகம்
இத்தனை துறைகள் மட்டுமா பல்துறை
கற்றோர் அதிகம்!

அத்தனை இருந்தும் உலகம் அமைதி
பெற்றதா இல்லை
நித்திய உலகம் பெற்றுள்ள உயிரினம்
ஒற்றுமையானதா இல்லை
சித்தி பெற்றிடச் சிந்தனைத் தெளிவைச்
சிதறியோர் அதிகம்!

கணக்கியல் அறிந்தோர் கணக்கில் எடுத்திடும்
கணக்கினை ஏற்பீர்!
பிணக்குடன் நிற்கும் உலக உயிர்களின்
கூட்டுத்தொகையினைப் பார்ப்பீர்!
இணக்கமாய்க் குவிந்த செல்வக் குவியலை
உலகம் எங்கிலும் சேர்ப்பீர்!
உயிரினக் கணக்கைச் செல்வக் கணக்கொடு
உடனே கழித்துப் பார்ப்பீர்!
கணக்கு முடிந்ததும் மீதமாயிருக்கும்
செல்வக் குவியல் எடுப்பீர்!
உண்டு களித்த உலகில் உயிரினம்
ஊழிகாலமுமிருந்து
நின்று நிலைக்கும் செல்வக் குவியல்
நிலைத்திருப்பதை உணர்வீர்!
கண்டும் இதனைக் கணக்கில் எடுத்திடாக்
கற்றவர் மருளுதல் பார்ப்பீர்!

சமமாய்ப் பிரித்துத் தேவையைப் போக்கும்
சமத்துவம் எவரிடமுண்டு?
நமதாய் எல்லாப் பொருளையும் சேர்க்கும்
நலத்தினில்தானே நாட்டம்
இமையாப் பார்வை செலுத்திடும் உலகம்
அமைதியை இழக்கும்தானே!

-ஏ. இக்பால்-




## கவித்தடாகம்

### சுதந்திரம்

நாற்பத் தேழிலே..
நாடு விடிந்தது..
நமக்கு இன்னும்
தூக்கமா..?
எல்லாம் விதிப்படி
என்று இருந்தால்
இடுப்பில் வேட்டி
இருக்குமா..?

-கவிஞர் விதுரம்



### மனமொரு குரங்கு!

மனிதன்
நிறைவேறாக் கனவில்
மிதக்கிறான்!
கர்வம் கொண்டு
வாழ்கிறான்!
உள்ளத்தில் பேராசை
ஊறெடுக்க
மண்ணினில் அலைகிறான்!
விடைகள் இல்லாக்
கேள்வியைப் போல்
என்றும்
காட்சி தருகிறான்!
கோடி
செல்வம் தேடி
மாடி மாளிகைகட்ட
நினைக்கிறான்?
ஊத்தையான உள்ளத்தை
சலவை செய்ய
மறந்தான்!
மனித மனமொரு குரங்கு
அதற்குப்
போடவேண்டும்
விலங்கு!

கந்தளாய்யூர்
கவித்தென்றல்

### என்று மாறுமோ?

நிமிடம் ஓடி
நாளை அடையலாம்
வாரத்தை நோக்கி
வலம் வரலாம் நாட்கள்
மறையலாம் மார்கழி
மலரலாம் தை
மிலேனியங்கள்
மீண்டும் மீண்டும் வரலாம்
அப்போது
மலை சரியலாம்
மடு உயரலாம்
ஆனால்
புனிதம் இல்லாத
மனிதம் என்று மாறுமோ

மஞ்சுளா
கிருஷ்ணசாமி,
கம்பளை



### ஓதலும் மோதலும்?

புத்தர் சிலை சந்தியிலே
புதிதாக வைத்தபோது
அத்தனை "பஸ்"
பக்தருமே- எழுந்து
ஆம்! இருந்தே மரியாதை!
இரண்டேநாள் சென்றபின்னே
எல்லோரும் அசட்டையாக
இருந்ததேதாம்
பயணித்தே- ஆமாம்!
திரும்புகிறார் மறுபக்கம்?
சந்தியிலே புத்தர் சிலை
குந்தவைத்தால் சாலாது
அன்னாரின்
போதனையைப்- பின்பற்றி
ஆம்! ஒழுகல் நலம் மாதோ!
சிந்தனைத்தெளி வில்லாது
சிலைகளுக்குச் சேலைகட்டி
மந்திரம்
ஓ தல்நன்றோ? - சீச்சீ!
மடைமை என்றோதுமாதோ!
சந்திக்கும் சந்தியெல்லாம்
சாராய இறைச்சிக்கடை
சுந்தரமாய்
திறந்துவைத்தே- ஓதல்
"சுராமேரய"... பானாதிபா....?
பாலியிலே ஓதுவதால்
பாவையூரி யாததாலோ?
ஆழியிலே
கரைத்தபுளி- ஆழமாம்!
ஆனதுவோ? பௌத்தமங்கே!

கண்டி
எம்.ராமச்சந்திரன்



## வட்டிக்காரி சிந்தாமணி

சிந்தாமணியக்காவின்
பெயரைக் கேட்டால்
அழுத பிள்ளை வாய்
மூடும்...
அவ்வளவு காரம்
சிந்தாமணியக்கா வாய்
திறந்தால் ஊர் அடங்கும்
அவள் கணவன்
பரமசாது
தான் உண்டு தன்ர
பாடுண்டு
எவருடைய சோலி
சுரட்டுக்கும்
போகாதவர்.....
சிந்தாமணி சொல்வதை
கேட்டு
நடக்கும் நல்ல
பிள்ளை........
சிந்தாமணியக்காவின்
சொந்த வியாபாரம்
வட்டிக்கு கொடுத்தல்
வட்டியைப் போய்
வசூலிப்பது
கணக்குப் பிள்ளையான
கணவரின் வேலை........
ஒரு நாள் ஏதோ
முசுப்பாத்தியில
சிந்தாமணியக்காவின்
கணவர்
கார்த்திகேயர் கொஞ்சம்
தண்ணி போட்டுட்டார்
ஊசார்ல வீட்டுக்குப்
போக
சிந்தாமணியக்காவிற்கு
இந்த வாடபிடிக்க
ஓய் என்ன? நெருப்புத்
தண்ணியடிச்சிட்டு வார
எங்கால காசு
வட்டிப் பணத்த வாங்கி
எண்ணிப் பார்க்க
இருபது ரூபாய் குறை
நிற்குக்க
ஓய்
நல்ல.....நல்ல.......வார்த்தைகள்
சிந்தாமணியக்காவின்
வாயில் வந்தது.....
ஓய் கார்த்திகேசா இத
விட நல்லது
மூ..............த்த
குடிச்சா............
வேவலம் கேட்ட
மனுசா.........
நீ உழைக்கிற
உழைப்பில
குடிவேற உமக்கு........
சாப்பிடுறதே தண்டச்
சோறு..........
சிந்தாமணி கத்திக்
கொண்டு இருக்கேக்க
வட்டிக்கு பணம்
வாங்கின சோம பால
வந்து
அக்கா....
சிந்தாமணியக்கோ.........
நான் சோமபால
அவில்ல...........
இந்தாங்க வட்டியும்
சல்லியும்
சிந்தாமணி அக்காவின்
நா அடங்கியது
என்ன சோமபால........
கியபுவாகே ஆவனே.......
சோமபால சொல்ரது
மாறமாட்டாது அக்கா......
இந்தாங்க வட்டியும்
சல்லியும்
சிந்தாமணியக்கா எண்ணி
சரிபார்த்து
சிரித்த வாயுடன் ..........
ஹீ........ஹீ.......
அப்ப வாரன்
சிந்தாமணியக்கா.........
சிந்தாமணியக்கா திரும்ப

மகன் திருநாவுக்கரசன்
வருகிறான்
பெயர் தான் திருநாவுக்கர
சே தவிர
வாயில் ஒரு நல்ல
வார்த்தையும் வராது
தாயிடம் பணம் கேட்பான்
கொடுக்காவிட்டால்
சேரிப்புற வார்த்தைகளால்
திட்டுவான்
அம்மா.............
என்னடா திரு............
ஐந்நூறு ரூபா தா........
நாளைக்கு பிள்ளைஎல்ல
தாறன்.....
நேற்று வாங்கின
இந்நூறு எங்கடா
எல்லாவற்றையும் சேர்த்து
தாரேன் தா.......
இல்லாட்டு.........
தாய் ஐநூறை நீட்ட
திரு தெருபக்கமாய் போற
ான்.........
கார்த்திகேயர் என்னதான்
பெண்டாட்டிக்கு பயமாய்
இருந்தாலும்
நெஞ்சில் ஈர
முள்ளவர்........
போட்ட தண்ணி இன்னும்
இறங்கயில்ல
சும்மா இருக்க மாட்டாமல்
பாவத்தில சேர்த்த
பணம்.....
தண்ணியாய் கரையுதும்மா
என்று சொல்லி வாய்
மூடவில்லை.......
சிந்தாமணியக்கா ஆயிரம்
தலை வாங்கிய
சிந்தாமணியானாள்...........
கார்திகேயர் தப்பினோம்
பிழைத்தோம்
என தெருப்பக்கம்
போனார்........
கார்த்திசேன் அண்ண
ஆரம்பத்தில
சுருட்டு வியாபாரம்
செய்ய வந்த இடத்தில
சிந்தாமணிய சுருட்டு
வியாபாரம் வட்டிக்கு
கொடுக்கும்
மூலதனமாயிற்று
சிந்தாமணி வட்டிக்கார
அம்மாவானா
கார்திகேயர் நடுத்தெரு
நாராயணன்
ஆனார்.........
சிந்தாமணியக்காவிற்கு
வட்டியால் பணம்
சேரச் சேர,
கொடுகூரியானாள்
ஊரை மதிப்பதில்லை.
என்ன பேசுகின்றோம்
என தெரியாது
எல்லாமே பணம்,
பணம்.......
இரண்டு பொலிஸ்காரர்
வாசலில் வந்து நின்றனர்
ஏய் சிந்தாமணி மேவர
ங்........
ஐயோ ராலாமி..........
இந்த வடிவேலுவுக்கு ந
வட்டிக்கு பணம்
கொடுத்ததா
ஆமா ராலாமி........
அதில் கள்ளகாசு ஹொர
நோட்டு
வா பொலிசுக்கு..........
சிந்தாமணி தலையில்
கைவைத்தபடி பொலிஸ்
பின்
செல்கிறாள்
ஊரார் முகத்தில்
அனுதாபமே
இல்லை..........
பணம் பத்தும் செய்யும்
சிலவேலை
**சிந்தாமணி விசாரணை இல்லாமலும் வெளியே வரலாம்.**

-விகடகவி-

## வாசகர் குரல்

அன்பின் ஆதவனுக்கு,
நட்பான வந்தனங்கள்.
உனக்குள்ளான
திடமானதாய் தடுமாற்
றமின்றி
சஞ்சரிக்கின்ற
கருத்துக்களால்
கவரப்பட்டு
கிடக்கிறேன். நீ
நிதர்சனங்களின்
தூதுவனாய்
நிலையாயிருக்க
வாழ்த்துகின்றேன்.

**தண்ணியா வட்டவளை**

ஆதவன் நல்ல
விடியல்களைத்
தருகிறது. திரு.விக்டர்
ஐவன் அவர்களின்
ஆக்கத்தோடு
ஏனையோரின்
ஆக்கங்கள் பல
உண்மைகளை
சொல்கிறது. மெய்
வாழும் என்றும்.

**ரஸீனாபுஹார்,**
**லுனுகல**

ஆதவன், ஆரம்ப
இதழ் முதலே சிற
ப்பாக உள்ளது.
உரத்த சிந்தனை,
தமிழ்த் தேசிய
அரசியல்
அன்றிலிருந்து
இன்றுவரை அவன்விதி
போன்ற தொடர்
ஆக்கங்களும்,
நேர்காணல்களும் மிக
அருமை.
மேலதிகமாக,
பெண்ணியம் பற்றிய
ஆரோக்கியமான
வாதங்கள், மாற்றுக்
கலாச்சார சிந்தனைக்
கட்டுரைகள் போன்ற
வற்றையும் சேர்த்துக்
கொண்டால் மிக
சிறப்பாக மிளிரும்.

**ஜே.எம்.ஜெஸார்**
**அனுக்கன**
**ஹெட்டிபொல**

**ஆதவன் ஒளி**
**நான்கில்...**
**அத்தனை**
**அம்சங்களும் மிக**
**அருமை. அதில்...**
**"சுமை தூக்கும்**
**தொழிலாளர்களின்**
**ரூபாயுக்கான**
**போராட்டம்" பற்றி**
**எம்மால்**
**அறியமுடிந்தது.**
**ஆதவனில்**
**செ.யோகநாதன்**
**எழுதிய "அகதியின்**
**மரணம்" சிறுகதை**
**அருமையாக**
**இருந்தது. சிங்கள**
**சமூக அமைப்பில்**
**இன்றும் தொடரும்**
**"கன்னிப்**
**பரிசோதனை"யை**
**வாசித்த போது...**
**இலங்கைத்**
**திருநாட்டில்**
**இப்படியும் ஓர்**
**கொடுமையா...?**
**சே...வெக்கக்கேடு,**
**இறுதியாக சிறியாணி**
**பஸ்நாயக்க கூறிய**
**திருமணத்தின் போது**
**அந்த அத்தனை**
**ஆண்களுக்கும்**
**"கன்னி"ப்**
**பரிசோதனை**
**நடத்தப்பட்டால்,**
**எத்தனை பேர்**
**சித்தியடைவர்கள்?**
**என்ற கூற்று**
**பிரமாதம், இந்த**
**அம்சத்தை எமக்காக**
**அள்ளித்தந்த**
**ஆதவனுக்கும்**
**என்- சரவணனுக்கும்**
**எனது நன்றிகள்.**
**ஆதவனின் சேவை**
**என்றும்....எமக்குத்**
**தேவை....**

**என்.எல். முஸம்மில்**
**புதிய காத்தான்குடி- 06**


தங்கள்
பத்திரிகையின் தமிழ்
வெளியீட்டினை
வாசித்து வருகின்ற
ஏராளமான
வாசகர்களுள் நானும்
ஒருவன்.
நம் நாட்டில் அமுல்
படுத்தப்பட்டிருக்கும்
கடுமையான
தணிக்கைச்
சட்டத்திற்கு
மத்தியிலும்
ஆக்ரோஷமானதும்,
நடுநிலையானதுமான
பலவேறு
கருத்துக்களைச்
சுடச்சுடத் தாங்கிய
வண்ணம் வருகின்ற
பத்திரிகையாக
"ஆதவன்"
திகழுகின்றது.
உண்மையிலேயே
பெயருக்குப்
பொருத்த
மானதாகவே அதன்
செயற்பாடும்
உள்ளது என்பதைப்
பாராட்டாமல்
இருக்க முடியாது.
நிச்சயமாக இந்த
ஆதவன் ஏனைய
பத்திரிகைகளிலும்
பார்க்க
வித்தியாசமானதாக
அமையும் என்பது
எனது திடமான
நம்பிக்கை.
ஆக, இந்த ஆதவன்
பத்திரிகை
தொடர்ந்தும்
வீறுநடை போட்டு
உலாவர எனது
உளம் நிறைந்த
வாழ்த்துக்கள் பல.

**அமானுல்லாஹ்**
**ஏ.மஜீத்**
**மக்காமடி வீதி,**
**மருதமுனை.**

# ஜனாதிபதி மாளிகைக்கு ஊவா மாகாண தமிழ் அமைச்சர் அழைக்கப்பட்டது ஏன்

**மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் தடையுத்தரவு வழங்கப்பட்ட பதுளை போதனா வைத்தியசாலை விவகாரம் தொடர்பாக ஊவா மாகாண சபையின் தமிழ்க்கல்வி இந்துக்கலாசார தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் எம். சச்சிதானந்தன் ஜனாதிபதி மாளிகைக்கு அழைக்கப்பட்டு மனுவை வாபஸ் வாங்குமாறு வற்புறுத்தப்பட்டுள்ளார் எனத் தெரியவருகிறது.**





அம்பாறை, பதுளை, அனுராதபுரம் ஆகிய மூன்று வைத்தியசாலைகளையும் மாகாணசபை நிர்வாகத்தின் கீழ் இருந்து மத்தியஅரசின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவருவது தொடர்பாக கடந்தமார்ச் 29ம் திகதி சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவினால் அமைச்சரவை அங்கிகாரத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு ஏப்ரல் 7ம் திகதி அங்கிகாரம் அளிக்கப்பட்டது.

பதுளை போதனா வைத்தியசாலை மத்திய அரசின் நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருவதை ஆட்சேபித்து மாகாணசபை அமைச்சர் எம்.சச்சிதானந்தம் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்கொன்றை தாக்கல் செய்திருந்தார்.

அரசியல் யாப்பின் 13 வதுதிருத்தச் சட்டத்தின் மூலம் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களை மீறும் வகையில் அமைச்சரவையில் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளன. இது அரசியல் யாப்பிற்கு முரணான நடவடிக்கையாகும். எனவே பதுளை அம்பாறை அனுராதபுரம் வைத்தியசாலைகளை மத்திய அரசின் கீழ் கொண்டு வரும் நடவடிக்கை அரசியல் யாப்பிற்கு முரணானது. என தடையுத்தரவு விதித்து மேல்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி அசோகாத சில்வா தீர்ப்பளித்துள்ளார். இந்த தீர்பளிக்கபட்ட கடந்த ஜூன் 29ம் திகதி அன்று மாகாண சபை அமைச்சர் எம்.சச்சிதானந்தம் அமைச்சர் ஆறுமுகம் தொண்டமான் மூலம் ஜனாதிபதி மாளிகைக்கு அழைக்கப்பட்டு மனுவை வாபஸ் பெறுமாறு வற புறுத்தப்பட்டுள்ளார். இந்தச் சந்திப்பின் போது சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவும் அங்கு பிரசன்னமாயிருந்துள்ளார். இதையடுத்து இந்த மனு இந்த மாதம் 7ம் திகதி வாபஸ் பெறப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா எதிர்வரும் பொதுத்தேர்தலில் பதுளை மாவட்டத்தில் ஆளும் கட்சியின் முதன்மை வேட்பாளராக போட்டியிடவுள்ளார். குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகவே இந்த மூன்று மாகாண வைத்தியசாலைகளும் மத்திய அரசின்கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது.

## தமிழீழ மக்கள் கட்சி

அரசியல் பேச்சுவார்த்தை என்பது போராட்ட வடிவங்களில் ஒன்றே எனவே எமது மக்களின் நலனில் உறுதியாக நின்று எமது தேசிய அபிலாசைகளை பிரதிபலிக்கும் வகையில் அணுகுமுறைகளை கையாளுதல் வேண்டுமென தமிழீழ மக்கள் கட்சியின் பிரசுரமொன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயர் தொழில்நுட்பங்களை போர்நடவடிக்கையில் மாத்திரமல்ல எமது அரசியல் பேச்சு வார்த்தைஅரங்கை வெற்றிகரமாக முன்னெடுத்துச் செல்வதறகும் பயன்படுத்த வேண்டுமென அந்தப் பிரசுரத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

லண்டனை தலைமையகமாக கொண்டு செயல்படும் தமிழீழ மக்கள் கட்சியைச் சேர்ந்தவர்களில் பெருமளவிலானோர் தமிழீழ மக்கள் விடுதலை கழக (புளொட்) த்தின் ஆரம்பகாலங்களில் அரசியல் முரண்பாடுகளால் பிரிந்து செயல்பட்ட தீப்பொறி குழுவினர் மற்றும் ஏனைய தமிழ் இயக்கங்களிலிருந்து அரசியல் கருத்து முரண்பாடுகளால் வெளியேறியோரையும் இணைத்து செயல்படுவதாக தெரியவருகிறது.

இதைவிட இவர்கள் தமிழீழம் என்ற மாதாந்த செய்தி மடலையும் வெளியிட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## தாலியைக் கழட்டிய கொம்பனித்தெரு பொலிசார்

கொழும்பு கொம்பனித்தெரு பொலிஸ்நிலையத்தில் கடந்தபுதன்கிழமை சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்ட நவசமசமாஜக்கட்சியின் முக்கியஸ்தரும் கொழும்பு மாநகரசபை உறுப்பினருமான வி. திருநாவுக்கரசின் மகள் வாசுகியின் தாலியைக் கழட்டி பொலிசார் துன்புறுத்தியுள்ளனர்.

கொம்பனித்தெரு கங்காராம பொலிஸ் சோதனைச்சாவடியருகே 112 ஆம் இலக்க பஸ்சிலிருந்து இறக்கப்பட்ட இவர் ஆட்டோ ஒன்றில் கொம்பனித்தெரு பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டு 3 மணிநேரமாக விசாரிக்கப்பட்டுள்ளார்.

சிங்கள மொழியில் எழுதப்பட்ட வாக்குமூலமொன்றில் ஒப்பமிடுமாறு கூறியதை இவர் நிராகரித்ததையடுத்தே இவரின் கழுத்திலிருந்ததாலி கழட்டப்பட்டு, மிரட்டப்பட்டு கூட்டில் அடைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தை அறிந்த நவசமசமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணாரத்னாவும் நவசமசமாஜ கட்சி உறுப்பினர்களும் தலையிட்டதன் பேரிலேயே இவர் அன்றைய தினம் மாலை விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

கடந்தசில மாதங்களுக்கு முன்னர் இதே கங்காராம பொலிஸ் சோதனைச் சாவடியில் வைத்து சிங்கள யுவதியொருவர் துகிலுரியப்பட்டு சோதனையிடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

## மேஜர் ஜெனரல் வீரசேகரவின் கைதும் சிஹல உறுமயவும்

1990களில் ஜனாதிபதி பிரேமதாசாவின் ஆட்சிக்காலத்தின் போது அநுராதபுரம் பகுதியில் இடம் பெற்ற மனித உரிமை மீறல் சம்பவங்கள், இளைஞர் யுவதிகள் காணாமல் போன சம்பவங்கள் தொடர்பாக மேஜர் ஜெனரல் ஆனந்த வீரசேகரவும் ஏனைய இருவரும் கைதுசெய்யப்பட்டு இம்மாதம் 31ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் காணாமல் போனவர்கள் தொடர்பாக ஜனாதிபதி ஆணைக்குழுவிற்கு கிடைத்த தகவல்களின் அடிப்படையிலேயே விசாரணை மேற்கொள்ளப்பட்டு குற்றப்புலனாய்வு திணைக்களத்தினால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

மேஜர் ஜெனரல் ஆனந்த வீரசேகர கைது செய்யப்பட்டமையை "சிஹல உறுமய" கட்சியின் செயலாளர் திலக்கருணாரத்ன கண்டித்துள்ளார்.

சிங்கள மக்களின் உரிமைகளை வென்றெடுக்கப்போவதாக அறை கூவல் விடுக்கும் "சிஹல உறுமய" கட்சியினருக்கு உண்மை விளங்கவில்லை போல் ஏனெனில் அநுராதபுரப் பகுதியில் வன்செயல் இடம்பெற்ற காலங்களில் நூற்றுக்கணக்கான சிங்கள இளைஞர், யுவதிகள் கடத்தப்பட்டு காணாமல் போனமை தொடர்பாகவே இவர் மீது குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

மேஜர் ஆனந்த வீரகேசரி "சிஹல உறுமய" சிரேஷ்ட உறுப்பினராவர். இதைவிட சிஹல உறுமயவில் படைகளிலிருந்து தப்பிவந்த நூற்றுக்கணக்கானோர் உறுப்பினர்களாக உள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## மட்டுநகரிலும் மல்ரிபரல்?

மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட நவீனரக பல்ரிபரல் ஆட்லறிகள் கடந்தவாரம் எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

ஒரு குறிப்பிட்ட பகுதியை நோக்கி ஒரே நேரத்தில் 40 குண்டுகளை ஏவக்கூடிய இந்த நவீனரக ஆட்லறிகள் குடாநாட்டின் போர்முனைகளில் தறபோது அரச படையினரால் பயன்படுத்தப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

## இந்திய விசா விலை என்ன.....?

இலங்கை அரசாங்கத்தினால் உத்தியோகபூர்வமாக விநியோகிக்கப்பட்ட "எல்" கடவுச் சீட்டுகளுக்கு விசா வழங்கமுடியாதென இந்தியத்தூதரக விசா வழங்கும் பிரிவு அதிகாரிகள் நிராகரித்துள்ளனர்.

கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் தமிழ்நாடு தூத்துக்குடி பனிமயமாதா தேவாலய உற்சவத்திற்கு செல்லும் யாத்திரிகர்களால் விசா பெறுவதற்கு வழங்கப்பட்ட "எல்" கடவுச்சீட்டுக்கள் நிராகரிக்கப்பட்ட விடயம் இலங்கைப் பாராளுமன்றத்திலும் கடந்த சில தினங்களுக்கு முன்னர் கொண்டு வரப்பட்டு சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

கொழும்பிலுள்ள இந்தியத்தூதரகத்தில் இலங்கையர்களுக்கு விசா வழங்குவதற்கு பொதுவான ஒரு நடைமுறையுள்ள போதும் வடக்கு கிழக்கு தமிழர்கள் இந்திய விசாவைப் பெறுவதில் பெரும் நெருக்கடியையும் பல்வேறு சிரமங்களையும் பெற்றுவருகின்றனர்.

தொடரும் இவ்வாறான கடும் நெருக்குதல்களால் தமிழகத்தில் தங்கியுள்ள தமது உறவினர்களை சந்திக்கவோ திருமண வைபவத்திற்கு செல்லவோ அல்லது அவசர வைத்திய சிகிச்சைக்கு செல்லவோ இயலாதநிலையில் திண்டாடுகின்றனர்.

இவ்வாறு முறையாக இந்தியத் தூதரகத்திற்கு விசாவிற்கு விண்ணப்பித்து அங்குள்ள விசாவழங்கும் பிரிவு அதிகாரிகளால் விசா மறுக்கப்பட்ட வடக்கு கிழக்கு தமிழர்கள் ஆயிரக்கணக்கில் முகவர் நிலையங்களுக்கு பணம் கொடுத்து விசா பெறும் நிலைமையே கடந்தபல வருடங்களாக தொடர்கின்றது.

இந்தியத்தூததரகத்திலுள்ள விசா வழங்கும் பிரிவு முக்கிய அதிகாரிகளுக்கும் கொழும்பிலுள்ள முகவர் நிலையங்களைச் சேர்ந்தமுக்கியஸ்தர்களுக்கும் நெருங்கிய தொடர்புள்ளதாகவும் தெரியவருகிறது.

இலங்கையின் இன நெருக்கடி விவகாரத்தில் இந்தியாவின் அரசியல் அணுகுமுறையில் மாற்றங்கள் ஏற்பட்டுள்ள போதும் இலங்கையிலுள்ள இந்தியத்தூதரகத்திலுள்ள விசாவழங்கும் பிரிவு அதிகாரிகளின் மனோநிலையில் மட்டும் மாற்றம் ஏற்படவில்லை.

தற்போது இந்திய விசா ஒன்றுக்கு 10 ஆயிரம் ரூபாவிலிருந்து 15 ஆயிரம் ரூபாவரை கொழும்பிலுள்ள முகவர்களால் பெறப்படுகிறது. இதில் ஒரு பகுதி இந்தியத்தூதரக அதிகாரிகளுக்கும் கொடுக்கப்படுவதாக தெரியவருகிறது.

பணமிருந்தால் இலங்கையிலுள்ள இந்தியத் தூதரகத்தில் விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுக்கு விசா எடுக்க முடியுமாம் உண்மையா?



அத்தியாவசிய பொருட்களின் விலையேற்றத்திற்கு எதிராக 18ம் திகதி கொழும்பில் ஐக்கிய தேசியக் கட்சி நடாத்திய ஆர்ப்பாட்ட ஊர்வலம்.
படம் – அஜித் செனவிரத்ன.

# யாழ் வாசிகளின் நிவாரணங்களுக்கு நடந்தது என்ன?

யாழ். குடா நாட்டில் போர் இன்னும் ஓயவில்லை. இன்னும் தொடரத் தான் போகின்றது என்ற அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. அரசாங்க மட்டத்திலும் சர்வதேச மட்டத்திலான நிறுவனங்கறும் கூட எதிர் காலத்தில் நடக்கப் போகின்ற போர் நடவடிக்கை யினால் மக்கள் நிர்கதிக்குள்ளாகப் போகின்றார்கள். என்பதை கருதி பல திட்டங்களை முன் கூட்டியே மேற கொண்டுள்ளனர். இது எவ்வளவு தூரம் சாத்தியபடும் என்பது பெரிய கேள்விதான். இருந்தாலும் பரிதவிக்கும் மக்களுக்கான உடனடியான நடிவடிக்கை மேற்கொண்டு வந்துள்ள விடயமானது இதுவரை யாழ்ப்பாணத்தில் மேற்கொள்ள படாத ஓர் திட்டமாகும்.

1980களில் இருந்து இன்று வரை வடக்கு- கிழக்கு மாகாணங்களில் மக்கள் தொடர்ந்து இடம்பெயர்ந்து கொண்டுதான் இருக்கின்றனர். பலர் காடுகளில் தஞ்சம் அடைந்து காட்டு இலை குழைகளை கூட உண்டு உயிர் வாழ்ந்த பலரை வடக்கு கிழக்கு மாகாணங்கள் உள்ளடக்கி இருக்கின்றது என கூறினால் அது மிகையாகாது. மன்னார், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா (நகர் தவிர்ந்த) மாவட்டங்களில் வாழ்கின்ற ஒவ்வொரு குடும்பத்தினரும் ஆகக் குறைந்தது பத்துக்கும் மேற்பட்ட தடவைகள் இடம் பெயர்ந்தவர்கள். இதே போன்று கிழக்கு மாகாணத்திலும் படையினரின் கட்டுப் பாட்டுக்கு உட்படாத மக்களும் பல இடப்பெயர்வுகளை தொடர்ந்து சந்தித்தவர்கள். பல இராணுவ நடவடிக்கையின் போது இறந்தவர்களின் விபரம், காணாமல் போனவர்களின் விபரங்கள் திரட்டப்படமுடியாத ஓர் இக்கட்டான நிலை முன்னைய காலங்களில் ஏற்பட்டிருந்தது.

ஆனால் முன்னைய காலங்களின் அனுபவங்களை கருத்தில் கொண்டு இம்முறை அனர்த்தம் ஏற்படமுன்னர் அதனை திட்டமிட்டு எவ்வாறு முகம் கொடுத்து மக்களின் இன்னல்களை குறைக்க முடியும் என்பதன் தொடர்பாக தற்போது யாழ் குடா நாட்டில் திட்டங்கள் வரையப்பட்டு ஒவ்வொரு நிறுவனங்களுக்கும் ஒவ்வொரு பொறுப்புகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது. பரிதவிக்கும் மக்களுக்கு நிரந்தர தீர்வ ஒன்றைக் காண்பது தொடர்பாக திட்டங்கள் தற்போது வகுக்கப்பட்டு வருகின்றது. வெள்ளம் வரும் முன்னர் அணைக்கட்டுவதன் மூலம் மக்களின் இன்னல்களை ஓரளவுக்கேனும் குறைக்க முடியுமே தவிர அதனை தடுக்க முடியாது என்பதே உண்மை.

அனர்த்தங்களை குறைக்கும் வகையில் மக்கள் இடம்பெயர்ந்து சென்று அபயம் பெறும் என எதிர் பார்க்கும் வலிகாமம் மேற்கு (சங்கானை) வலிகாமம் தென் மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவுகளில் ஏற்படும் அனர்த்தத்தில் ஓடி வரும் மக்களுக்கு உதவும் வகையில் ஆறு செயலணிக் குழுக்கள் அமைக்கப் பட்டுள்ளது. இச் செயலணிக் குழுக்கள் மூலம் மக்களின் உடனடியான அவசர தேவைகளை நிறைவு செய்ய கூடியதாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் பாரிய அளவில் இடம்பெயரப்போகும் மக்களுக்காக அமைக்கப்பட்டுள்ள செயலணிக்குழுவில் இப்போதைக்கு யாழ். செயலக அதிகாரிகளும் சர்வதேச செஞ்சிலுவை சங்க குழுவின் அதிகாரம் அளிக்கப்பட்ட பிரதிநிதிகளும் செயல் ஆற்றுவார்கள். தேவைக்கு ஏற்ப இதற்கு தேவைப்படும் தொண்டர்களை இக்குழுவுடன் இணைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. இவ் விஷேட செயலணிக் குழுவின் செயற்பாட்டின் முக்கிய நோக்கம் தற்போது இடம்பெயர்ந்தவர்களுக்கு உதவுவதற்கு காட்டப்படும் தாமதம் இல்லாத நிலையில் மக்களுக்கான உதவியை செய்வதாகும். ஆனால் அது எவ்வளவு தூரம் சாத்தியமானது என்பதை காலம் நேரம் தான் பதில் சொல்ல வேண்டுமே தவிர இப்போதைக்கு ஒன்றும் கூறமுடியாது.

அமைக்கப்படும் ஆறு செயலணிக்குழுக்களும் இடம் பெயர்ந்த மக்களுக்கு இருப்பிட வசதிகளை மேற்கொள்ளவும், உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்விநியோகம், உணவல்லாத பொருட்கள் விநியோகம், சுகாதாரம் மற்றும் மருத்துவ வசதிகுறித்து இடம்பெயர்ந்த நிலையில் வருபவர்களை ஓரிடத்தில் இடைத்தங்கல் மூலம் தங்க வைத்து அவர்களை பின்னர் ஓரிடத்தில் தங்க வைக்கவும், மாணவரின் கல்வி வசதியை தடையின்றி மேற்கொள்ளவும் ஆறு செயலணிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது.




போர் அனர்த்தங்களின் போது உயிரை கையில் பிடித்துக் கொண்டு உடைமைகளை இழந்த நிலையில் இருக்க இடம் இன்றி நிற்க நிழல் கூட இல்லாது வரும் மக்களை முதல் ஓரிடத்தில் இருத்தி அவர்களின் தேவைகளை ஓரளவு வழங்க கூடியதாக இருக்க வேண்டும். இதனை மேற்கொள்ளும் வகையிலே இதற்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது. தென்மராட்சியின் சிலபகுதியில் இருந்து அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டு கையிலே எடுத்து வரக்கூடிய பொருட்களுடன் மட்டும் நடந்து வந்த மக்களை அவர்களுக்கு உண்ண உணவோ, குடிக்க நீர் கூட வழக்காத நிலையில் நீர்வேலி அக்கியாள் இந்துக் கல்லூரியில் இருந்த சில அதிகாரிகள் வந்தவர்களின் பெயர் விபரம் அடையாள அட்டை இலக்கம் மட்டும் பதிந்து விட்டு "இனி நீங்கள் இப்பாடசாலையை விட்டு வெளியேறுங்கள். என கூறியதுபோல இனிமேல் கூறாமல் இருந்தால் போதும். இது விடயத்தில செயலணி கவனம் செலுத்த வேண்டும்.

> "போர் அனர்த்தங்களின் போது உயிரை கையில் பிடித்துக் கொண்டு உடைமைகளை இழந்த நிலையில் இருக்க இடம் இன்றி, நிற்க நிழல் கூட இல்லாது வரும் மக்களை முதல் ஓரிடத்தில் இருத்தி அவர்களின் தேவைகளை ஓரளவு வழங்க கூடியதாக இருக்க வேண்டும்."

உணவு மற்றும் அத்தியவசிய பொருட்களுக்கான விநியோகம் தற்போது இடம்பெயர்ந்த மக்களுக்கு ஒழுங்காக நடக்கவில்லை என்பது உண்மை. இடம் பெயர்ந்த மக்களில் சுமார் இருபது சதவிகிதமான தென்மராட்சி, பளை, யாழ்ப்பாணம், கோப்பாய், நல்லூர் ஆகிய பிரதேச செயலகங்களை சேர்ந்தவர்களுக்கு மே மாதஉலர் உணவு விநியோகம் வழங்கப்படவில்லை. இந் நிவாரண பொருட்களுக்கு என்ன நடந்தது என கூட தெரியாமல் இருக்கின்றது. ஜூன் மாத நிவாரணமும் இதே போன்று சீரழிந்த நிலையில் இருக்கின்றது. தமது கணக்கீட்டின் படி இடம் பெயர்ந்த மக்களுக்கு மேலதிகமாக நிவாரணம் வழங்கப்பட்டுள்ளதாக பிரதேச செயலர்கள் தெரிவிக்கின்றனர். இது மக்களின் பிழையல்ல. வழங்கிய அதிகாரிகளின் பிழை எனவே இதனை மீளாய்வு செய்ய வேண்டும். அதோடு ஜூலை மாத நிவாரணம் ஜூலை 15ம் திகதி வரை இன்னும் வழங்கப்படவில்லை. எப்போது வழங்கப்படும் என யாருக்கும் தெரியாது.

உணவு விநியோகதத்தில் துஷ்பிர யோகமும் நடைபெறுகின்றது. இது அதிகாரிகளின் பலவீனத்தால் ஏற்படுகின்ற விடயம். இதனால் இன்று பாதிக்கப்படும் மக்கள் நாளைய பாரிய இடப்பெயர்வின் போதும் பாதிக்க கூடாது. பல நோக்கு



கூட்டுறவை பொறுத்த மட்டில் பல சுரண்டல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. சுரண்டல் என்பது பலநோக்கு கூட்டுறவுடன் கூடி பிறந்த ஒன்று. எனவே எமது தற்போதைய அனுபவங்களை கருத்தில் கொண்டு சிலமாற்று திட்டங்கள் உணவு விடயத்தில் முன் கொண்டுவரப்பட வேண்டும்.

உணவல்லாத பொருள் விநியோகத்தை பொறுத்தமட்டில் பாரிய முகாம்களில் தங்கியுள்ளவர்களுக்கு வழங்கப்படுகின்றது. இடம் பெயர்ந்த மக்களில் பத்து சதவீதமானவர்கள் மட்டுமே முகாமில் தங்கி வாழுகின்றனர். ஏனையவர்கள் பல இடங்களில் சிறு குடிசைகளை அமைத்து வாழ்க்கை நடத்தி வழுகின்றனர். இவர்களுக்கு இவ் உணவல்லாதபொருட்கள் வழங்கப்படவில்லை. இடம் பெயர்ந்தவர்களுக்கு அவர்களின் நிலைக்கு ஏற்ப பொருட்கள் வழங்கப்பட வேண்டும். இதனை விட்டு விட்டு உள்ள பொருட்களை வழங்கி கணக்கு காட்டினால் சரி என்ற முடிவுக்கு வந்து விடக் கூடாது.

சுகாதாரமும் மருந்து வசதியின்மையினையும் பொறுத்தமட்டில் கழிவகற்றும் மலசலகூடம், குப்பை கூளங்கள் வெளியேற்றங்கள் விடயத்தில் உரிய வசதிகள் இல்லை. பல தொற்று நோய்களும், வயிற்றோட்டம், வாந்திபேதி போன்ற நோய்கள் சுகாதார சீர்கேட்டினால் ஏற்பட்டுள்ளது. எனவே சுகாதார தொண்டர்கள் பொது நல சுகாதார அதிகாரிகளின் நடவடிக்கை மிக முக்கியமானதாக கருதப்படுகின்றது. இவற்றிற்கு தேவையான மருந்தை பெற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

இடைத் தங்கல் வசதியை பொறுத்தமட்டில் உறவினர் நண்பர்கள் எவரும் இல்லாத நிலையில் யாரிடம் சொல்வது என தெரியாமல் வருவோரை ஓரிடத்தில் தங்க வைத்து அவர்களுக்கு வதிவதற்கு ஓர் இடத்தை வழங்கும் வரை அவர்களைத் தற்காலிகமாக தங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மாணவர்களின் கல்வி வசதியை பொறுத்த மட்டில் அது எமக்கு அசைக்க முடியாத அழிக்க முடியாது சொத்து. யாழ் பாடசாலைகளில் இடம் பெயர்ந்த பலர் தங்கியுள்ளர். இருந்த போதும் ஒரு சில பாடசாகளில் இடம்பெயர்ந்த மக்களுக்கும் பாடசாலைகளில் நிர்வாகத்திற்கும் இடையே கைகலப்புகள் ஏற்பட்டிருக்கின்றது. இதற்கு முக்கிய காரணமாக அமைந்தது பாடசாலை அதிபர்கள் இவ் இடம் பெயர்ந்த மக்களை வெளியேற்ற எடுத்த பல சூழ்ச்சிகளாகும். ஒழுக்கதையும், நன் நடத்தையையும் போதிக்க வேண்டிய ஆசிரியர்கள் மாணவர்களை ஏவி விட்டு அவர்களை மோத விட்டதால் இவை நடைபெற்றுள்ளன.

இம் மோதலை சமரசம் செய்ய சென்ற அதிகாரிகளின் முன்னிலையிலே அதிபர்கள் ஆசிரியர்கள் மாணவர்களை ஏவிவிடும் வகையில் நடந்து கொண்டமை அங்கு சுட்டி காட்டப்பட்டது. எனவே இனி வரும் காலத்தில் இவ் அதிபர்கள், ஆசிரியர்கள் இனம் காணப்படவேண்டியது மிக மிக அவசியமாகும். எனவே தற்போது எமக்கு கிடைக்க பெற்றுள்ள இவ் அனுபவங்களின் அடிப்படையில் எதிர்கால நிகழ்வுகளுக்கு இனி வித்திடப்பட வேண்டும்.

ஆகவே இப் பணியை அரசாங்க செயலகமும், சர்வதேச செஞ்சிலுவை சங்கமும் மட்டும் இணைந்து மேற்கொள்வது என்பது மிக கடினமானது. ஏனெனில் இப்பணியானது பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதாகும். இனியும் மக்கள் பாதிக்கப்பட கூடாது. ஆகவே இதற்கு தேவையான நிதி மற்றும் வேலைப்பளு என்பவற்றை இவை இரண்டும் மேற்கொள்ள முடியுமா? என்ற கேள்வி எழுகின்றது. எனவே இதில் பலரின் ஒத்துழைப்பு பெற வேண்டியது அவசியமானது.

அரச திணைக்களங்களும், அரச சார்பற்ற நிறுவனங்களின் திட்டத்தில் இணைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. இவற்றின் நிதி, மனித வளங்கள் என்பனதவற்றை பெற்று மக்கள் துன்பங்களை இயன்ற அளவு தீர்ப்பதற்கான திட்டம் தற்போது வகுக்கப்பட வேண்டும். இதை தவிர மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல் நடப்பதற்கு அனுமதிக்க கூடாது.

நி. நிவேதா

ஆதவன்

இல-83, பிலியன்தல வீதி மஹரகம
தொலைபேசி எண் - 851672.851814
விநியோகப் பிரிவு - 842064
தொலைமடல் - 851814

### வாசகர் உரிமை!

தம்மைப் பாதிக்கும் விதத்தில் ஆதவனில் ஏதாவது பிரசுரிக்கப்பட்டதாக நபரொருவர் அல்லது நிறுவனமொன்று கருதும் பட்சத்தில் உரிய கருத்துத் தெரிவிக்கும் உரிமை அந்த நபருக்கோ அல்லது நிறுவனத்திற்கோ உண்டு என்பதை "ஆதவன்" ஏற்றுக் கொள்கின்றது.

அது தொடர்பாக அந்த நபர் அல்லது நிறுவனம எழுதி அனுப்பி வைக்கும் கருத்துக்களை வெளியிட "ஆதவன்" கடப்பாடுடையது.

# கறுப்பு ஜூலையும் படிப்பினைகளும்

1983 கறுப்பு ஜுலை இலங்கையின் நீண்டகால அரசியல் வரலாற்றில் ஏற்படுத்திய கொடூரமிக்க வரலாற்றுப் படிப்பினைகள் இன்னமும் உணரப் படாத நிலையில் கடினபோக்குகளை அவை கொண்டிருப்பதுடன், விட்டுக்கொடுப்புகளுக்கு முன்வராத பேரினவாத நிலைப்பாடுகளையுமே அவை இன்னமும் கொண்டிருக்கின்றன.

1983 இல் 13 படையினர் யாழ் குடாநாட்டில் கொல்லப்பட்டதை சாட்டாக வைத்து நாடு முழுவதும் பற்றியெரிந்த இனவாதத்தீயில் ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் உயிருடன் தீமூட்டப்பட்டும் கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான தமிழ் மக்களின் சொத்துக்களும் அழித்தொழிக்கப் பட்டதுடன், தமிழர் தாயகப்பிரதேசமான வடக்கு கிழக்கிற்கும் அயல் நாடான இந்தியாவிற்கும் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் அகதிகளாக விரட்டியடிக்கப் பட்டனர். ஆனால் அதற்கு பின்னரான இதுவரை கால நிகழ்வுகள் எதைவெளிக்காட்டி நிற்கின்றன?

இதையெல்லாம் விட பூட்டிய சிறைக்குள் அடைக்கப்பட்டிருந்த 53 தமிழ்ப்போராளிகள் குரூரமாக கொல்லப்பட்டனர். இதை தொடர்ந்து இனவாத அடக்குமுறையின் வெளிப்பாடாக கொதித்தெழுந்த தமிழ்ச் சமூகம் தீவிர ஆயுதப் போராட்டத்தை முன்னோக்கி சென்றது.

சர்வதேச சமூகம் சிங்கள பௌத்த சமூகம் மீது வெறுப்படைந்தது. போரின் தீவிரப்போக்குகள் முனைப்படைய மேன்மேலும் படைபலமும் நவீன ஆயுதங்களும் குவிக்கப்பட்டு மீள முடியாத அழிவுகளின் விழிம்பில் இந்த நாடு இன்று தத்தளித்துக் கொண்டிருக்கிறது.

13 படையினருக்காக நாடு முழுவதும் இனவாதப் பிசாசுகளை திறந்து விட்டவர்கள் மாங்குளம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வெலிஓயா, புளுக்குனாவை, ஆனையிறவு போன்ற முக்கியத்துவம் வாய்ந்த போர் முனைகளை இழந்ததோடு மேலும் ஆயிரக்கணக்கான படை வீரர்களை இழக்கும் யுத்தகளமாக வடகிழக்கு யுத்தம் பரிணாமெடுத்துள்ளதே இன்றைய நிலைமை ஆகும்.

அதேபோல் தமிழ் மக்களின் விடுதலை நோக்கிய தமிழ் ஆயுதப் போராட்ட அமைப்புகள் ஒருவரையொருவர் அழித்தும், அரசியல் நோக் கற்ற வரட்சிச் சிந்தனைகளுடன் தமது தலைமைத்துவ இருப்புகளுக்காக வழிசமைக்கும் போக்குகளும் தலையெடுக்கத் தொடங்கிய அவல நிலைமையும் மேலும் தமிழ் மக்களின் துயர வாழ்விற்கு வழியமைத்துள்ளன.

கடந்த இரு தசாப்த காலமாக தீவிரமடைந்துள்ள இந்த நாட்டின் மிக முக்கியமான பிரச்சினையான இனநெருக்கடியை தீவிரப்படுத்திய கறுப்பு ஜுலையின் படிப்பினைகளை வெறுத்தொதுக்கிய போக்கில் செயற்படத் தொடங்கும் சிங்கள பௌத்த பேரினவாதக் கட்சிகள் இன்னமும் யுத்தத்தை தீவிரப்படுத்தும் போக்கிலேயே காலங்கடத்துவதிலும் அதற்கான இழுத்தடிப்புகளிலும் அரசியல் நடத்துகின்றன.

தமிழ்- சிங்கள- முஸ்லிம் மக்களின் இனசௌஜன்யத்தை குழிதோண்டிப் புதைத்து இந்த நாட்டின் எதிர்கால இளம் தலைமுறையினரின் வாழ்வினை அழித்துக் கொண்டிருக்கும் சகல பேரினவாதப் போக்குகளும் களைந் தெறியப்படாதவரை படிப்பினைகள் என்பது இந்த நாட்டில் சுடுகாட்டில் தூங்குவது போன்றதாகவே அமையும்.

ஆசிரியர்.



# தொடரும் கைதுகளும் படுகொலைகளும்

செந்தணலோன்

தொடரும் போர் நடவடிக்கைகளால் அழிவுகளை மட்டுமே அள்ளியிறைத்துக் கொண்டிருக்கும் இன நெருக்கடி விவகாரத்திற்கு தீர்வொன்றைக் காண்பதற்காக இணக்கப்பாடுகளிலும் கருத்தொருமிப்பிலும் காலங் கடத்துவதிலேயே அரசு குறியாக உள்ளது சர்வதேச சமூகத்தைமட்டுமன்றி நாட்டையும் மக்களையும் ஏமாற்றிக் கொண்டிருக்கும் இரு பெரும் பேரினவாதக் கட்சிகளின் நிலைப்பாடு ஒரு புறமிருக்க, இன நெருக்கடியை மேலும் சிக்கலாக்குவதிலும் தீவிரப்படுத்துவதிலும் செயற்படும் பௌத்த மதமபீடங்களதும் சிஹல உறுமய சிங்கள வீரவிதான போன்ற தீவிர கடும் போக்குடைய இனவாத வெறிகொண்ட அமைப்புகளின் ஆதிக்கம் இன்னொரு புறம் சமாதானத்திற்கு எதிர்மாறான தாகவும் யுத்தமே ஒரேவழி என்ற கோஷத்ததையும், உரத்து ஒலித்துக் கொண்டிருக்கிறன. அது வடக்கு கிழக்கில் தொடரும் தீவிர போர்முன்னெடுப்பு களின் தாக்கம் கடந்தஇருமாதங்களிற்கு மேலாக தமிழர் தாயகப் பிரதேசங்களில் கைதுகளும் காணாமல் போதலும் படுகொலைகள் இடப்பெயர்வு என்பவற்றை அதிகரித்துள்ளது. இன்றைய காலகட்டத்தில் வடக்கு கிழக்கில் தினமும் சராசரி 5 பேர் கொல்லப்பட்டும் 10 பேரளவில் கைது செய்யப்படுவதாகவும் பெயர் குறிப்பிட விரும்பாதஅரசசார்பற்ற நிறுவனமொன்றின் முக்கியஸ்தர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

வவுனியாவிலும் மன்னாரிலுமே அதிகளவிலானனோர் கடந்த இருமாதங்களில் கைது செய்யப்பட்டும் காணமாலும் போயுள்ளனர். இப்பகுதிகளில் கடந்த இரு மாதங்களில் 10க்கு மேற்பட்டோர் சுட்டுக் கொல்லப்பட்டுமுள்ளனர்.

இதற்கெல்லாம் அப்பால் மன்னாரிலிருந்து தென்னிந்தியாவிற்கு தப்பிச் செல்லும் அகதிகள் படகோட்டிகளினால் பாக்கு நீரிணைக்கு அப்பாலுள்ள மண் திட்டைகளில் கைவிடப்படுவதும் நடுக்கடலில் தூக்கிவீசப் படுவதும் அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது.

குமுதினி என்ற இளம் குடும்பப்பெண் அகதியாய் தஞ்சம் புகுந்த அதே மண்ணின் இந்திய மீனவர்களினால் கடத்திச் செல்லப்பட்டு பாலியல் பல்லுறவுக்குள்ளாக்கப்பட்டு . படுகொலை செய்யப் பட்டுள்ளார். அதைவிட கடந்தசெவ்வாய்க்கிழமை பேசாலை கடற்பகுதியில் இலங்கைப் படகோட்டிகளால் கைவிடப்பட்டு இந்திய மீனவர்களால் கடலில் தத்தளிக்க விடப்பட்ட 12பேரில் 4 பெண்கள் மட்டுமே தப்பிக்கரை சேர்ந்துள்ளனர் ஏனை யோருக்கு நடந்த கொடூரம் என்னவென்று தெரியவில்லை.

வவுனியா,யாழ்ப்பாணம், திருகோணமலை ஆகிய பகுதிகளில் பாடசாலை மாணவர்கள் கைது செய்யப்படும் சம்பவங்கள் அதிகரித்துள்ளது. கடந்த வியாழக்கிழமை மாலை விளையாட்டு மைதானதிற்கு சென்றுவிட்டு வீடு திரும்பிவரும் வழியில் யாழ் இந்துக்கல்லூரி மாணவன் எஸ்.சஞ்சீவன் என்பவர் எவ்விதவிசாரணைகளுமின்றி சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.



இச்சம்பவத்தை நேரில் கண்ட பனைஅபிவிருத்திசபை அதிகாரியொருவரும் இன்னுமொருவரும் காணாமல் போயுள்ளதாகவும் தெரியவருகிறது.

இதைவிட திருக்கோவில் பகுதியில் விநாயகபுரம் பகுதியிலுள்ள 25க்கு மேற்பட்ட சிறுவர்த்தக நிலையங்கள் சாப்பாட்டுக்கடைகளை முடிவிடுமாறு விசேட அதிரடிப்படையினர் உத்தர விட்டுள்ளனர்.

விசேட அதிரடிப் படையினரின் தடையினால் 6 மாதகாலமாக மூடப்பட்டிருந்த இந்தக்கடைகள் கடந்தஒரு மாதகாலமாகத்தான் திறக்கப் பட்டிருந்தமை குறிப் பிடத்தக்கது. இப்பகுதியிலிருந்து விடுதலைப்புலிகளுக்கு உணவுப்பொருட்கள் கடந்திச்செல்லப்படுகின்றது எனக்கூறியே இத்தடையுத்தரவ பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஆனால் அன்றாடம் உழைத்துவாழும் இப்பகுதியைச் சோர்ந்த3500க்கு மேற்பட்ட குடும்பத்தினர் 3 கிலோமீற்றர் தொலைவிலுள்ள திருக்கோவில் பகுதிக்கு மாலை வேளையில் வந்து பொருட்களை பெற்றுக் கொள்ள வேண்டிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளனர். சிவில் நிர்வாகம் என்ற போர்வையில் இப்பகுதியின் முழுநடவடிக்கையும் விசேட அதிரடிப் படையினரின் கட்டுப்பாட்டிலேயேயுள்ளது குறிப்பிடத்தக்கது.

மேற்குறிப்பிடப்பட்ட இந்தவிடயங்களையெல்லாம் இங்கு சுட்டிக்காட்டுவதன் நோக்கம் யாதெனில் இது இன்றைய வடக்கு கிழக்கு மக்களை சுற்றிப் பிணைத்துள்ள கொடூரவலை இதை விளங்கிக்கொள்ள முடியாதவர்களைப் போல் தமது அரசியல் சுயநல இருப்புகளுக்காக போட்டி போடுவதிலேயே தமிழ்க்கட்சிகள் கண்ணும் கருத்துமாக உள்ளன.

ஆளும் பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐக்கிய தேசிய கட்சி என்பவற்றை விட தேர்தல் ஒன்றை எதிர்கொள்வதற்கும் அதில் எவ்வாறு (வெட்டிக்கொத்தி வெடிவைத்து கள்ளவோட் போட்டு) வெல்லலாம் என்ற தீவிர செயற்பாடுகளில் தமிழ்க்கட்சிகள் வியூகம் வகுத்து வருகின்றன.

தேர்தல் ஒன்றை நோக்கிய பொதுக்கூட்டு



என்பதற்கு அப்பால் தேர்தல் குழிபறிப்புகளுக்கான மும்முர மான செயற்பாடுகளிலேயே தமிழ்க்கட்சி வட்டாரங்கள் ஈடுபட்டுவருவதாக தெரியவருகிறது.

இத்தேர்தலில் தமிழர் விடுதலைக்கூட்டணியும், ஈழமக்கள் ஜனநாயக கட்சி (ஈபிடிபி)யும் தனித்து போட்டிபோடுமென்றே எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியில் தற்போது சம்பந்தன் ஆனந்தசங்கரி மற்றும் ஜோசப்பரராஜசிங்கம் மாவை சேனாதிராஜா என்ற பிரிவுகளில் முரண்பட்டு தேர்தல் களத்தில் இளம் புதுமுகங்கள் பலவும் இறங் கவுள்ளதாகவும் தெரிய வருகிறது.

இதைவிட ஆளுங்கட்சியின் சார்பில் முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண முதல்வர் வரதராஜப் பெருமாள், பிரதிப் பாதுகாப்பமைச்சர் அனுருத்தரத்வத்தையின் பொதுசன தொடர்பு அதிகரியாவுள்ள தங்கராஜா ஆகியோர் யாழ்மாவட்டத்தில் போட்டியிடவுள்ளதாகவும் தெரிய வருகிறது.

வன்னித் தேர்தல் தொகுதியில் ரெலோ பாராளு மன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் புளொட் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான த.சித்தார்த்தன்,ஈ.பி.ஆர்.எல்.எவ் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் உட்பட பல முக்கியஸ்தர்கள் குதிக்கலாமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதையெல்லாம் விட கடந்தகாலங்களில் அரசியல் சுகபோகங்களை முழுமையாக அனுபவித்தபலரும் இம்முறை சுயேச்சையாகவும் ஏனைய கட்சிகளுடன் ஒட்டிக்கொண்டும் தேர்தல் களத்தில் குதிக்கவுள்ளனர்.

கிபீர் குண்டு வீச்சு விமானங்கள் ஒரேநேரத்தில் 40 குண்டுகளை வீசக்கூடிய மல்ரிபரல் ஆட்லறிகள் தமிழ் மக்களை குறிவைத்துக் கொண்டிருக்கும் போர் நிலவரமும் கைதுகளும், காணாமல் போதலும் மனித அபாயங்களும் மிக மோசமடைந்திருக்கும் இவ்வேளையில் மக்களை மீட்பதற்காக தேர்தல் களத்தைநோக்கி முண்டியடித்துக் கொண்டிருக்கும் தமிழ்க்கட்சிகளை நோக்கி என்ன சொல்ல முடியும்?

# கறுப்பு ஜூலையினுள் மறைந்திருக்கும் புகை

**விக்டர் ஐவன்**

1983 கறுப்பு ஜூலைச் சம்பவங்கள் ஏற்படாவிடின் இலங்கையின் இனப்பிரச்சினை பயங்கர யுத்தமாக மாறும் சந்தர்ப்பங்களை இல்லாமல் தவிர்த்திருக்கலாம். இச்சம்பவம் நடைபெறும் வரையில் தமிழ் மக்களிடையே விரக்திநிலை வளர்ந்திருக்கவில்லையென்பது அதன் அர்த்தமல்ல. அவர்கள் விரக்தி நிலைக்கு உள்ளாக்கப்பட்டிருந்தாலும் பயங்கரமான எதிர்தாக்குதல் நிலைக்குத் தள்ளப் பட்டிருக்கவில்லை. அக்கால கட்டத்தில் தமிழ் இளைஞர் சமுதாயத்தினரில் ஒரு பகுதியினரிடம் வன்செயல்களுடன் கூடிய கிளர்ச்சி நிலையிலான போக்கொன்று இருந்தது உண்மைதான். இருந்தாலும் அந்தநிலையிலிருந்தஇளைஞர்களின் அளவு குறைவாகவே இருந்தது. தமிழ் சமுதாயத்தில் அவர்களுக்கான அரசியல் வரவேற்பும் இருக்கவில்லை.

83 கறுப்பு ஜூலை வன்செயற் சம்பங்கள் மீண்டும் நினைத்துப் பார்க்க முடியாதளவு கோர மானவைகளாகும். பயங்கர மானவைகளாகும். ஆரம்ப ஏழு நாட்களுள் கொலை செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 471 ஆகவும், காயமுற்றவர்கள் 3769 பேராகவும் இருந்தது. 3835 கொள்ளை சம்பங்கள் நடந்துள்தோடு தீ வைப்புச் சம்பவங்கள் 8077உம் நடை பெற்றுள்ள கொழும்பு நகரத்தில் மட்டும் அகதியானவர்களின் தொகை 64,000 மாக இருந்ததோடு மற்றைய சிங்களப் பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மக்கள் அனைவரும் அகதிகளின் நிலைக்குத் தள்ளப்பட்டனர். இரண்டு சந்தர்ப்பங்களில் சிறையில் அடைப்பட்டிருந்த குட்டிமணி உட்பட 51 பேரின் கோரப்படுகொலைகள் மனிதாபிமானமற்ற கொடூர படுகொலைகளாக கருதப்படுகின்றன.

தமிழ் மக்களின் பாதுகாப் பிற்காக ஒரு அரசாங்கத்தை உருவாக்கிக் கொள்ளவோ அல்லது தமக்கு ஏற்படுத்திய இன்னல்களுக்காக பழிதீர்த்துக் கொள்ளவோ தமக்கான ஒரு ஆட்சி தேவை என்ற நிலைக்கு தமிழ் மக்கள் தள்ளப்படக் காரணம் 1983 கறுப்பு ஜூலைச் சம்பவங்கள் என்பதில் சந்தேகமில்லை தமிழர் விடுதலைக் கூட்டணி போன்ற ஜனநாயக அரசியல் பிர வேசத்தில் கலந்திருந்தஅரசியல் கட்சிகளுக்கிருந்த வரவேற்பு குறைந்து வன்செயல்கள் முறை யிலான கிளர்ச்சிகளை முன்னெடுக்கும் போராட்ட தமிழ் குழுக்கள் மீது நம்பிக்கை ஏற்பட கறுப்பு ஜூலை வழிவகுத்தது.

83 கறுப்பு ஜூலைச் சம்பவம் சிங்கள மக்களிடையே, தமது இராணுவ வீரர்களை இலக்காகக் கொண்டு நடாத்தப் பட்ட தாக்குதல்கள் காரணமாக எழுந்த எதிர்பாராத கோபத்தின் பிரதிபலிப்பா? அல்லது அதனையும் விடத்திட்டமிட்டு நடாத்தப்பட்ட ஒரு வன்செயலா? இது சம்பந்தமான கருத்து நிலைப்பாடுகள் பலவாகும். அனைத்துச் செயற்பாடுகளுக்கும் அரசினதும் சில சிங்களத் தலைவர்களினதும் தொடர்பு உண்டென்பது சில தமிழ்த் தலைவர்களின் கருத்தாகும். இச்சம்பவங்கள் பற்றிக் கருத்துக் தெரிவித்துள்ள, ஜெனாதன் ஸ்பென்ஸர், கனனாதஒபே சேகரா, ஜேமிஸ் மேனன் போன்ற புத்தி ஜீவிகளும் இதனையே தெரிவித்துள்ளனர் பொதுவாக கறுப்பு ஜூலை சம்பவங்களுக்கு அரசாங்கத் திலுள்ள துவேஷத் தலைவர்க ளின் ஒத்துழைப்பும் ஆசீர்வாதமும் இருந்தது என்பது உண்மையாகும். எனது கருத்து இவையனைத்தையும் விட அர சாங்கம் மிகவும் திட்டமிடப்பட்டு இதனை ஒழுங்காக செய்து முடித்தது என்பதாகும். அன்றைய அரசாங்கக் கட்சியின் தமிழ்த் தலைவர் ஒருவர் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் கூறிய விடயமொன்றை இச்சமயம் கூறவேண்டியுள்ளது. இதனை குறிப்பிட்டு எழுத வேண்டாமென அவர் என்னிடம் வேண்டியிருந்தாலும் பொதுமக்களின் நன்மை கருதி இதனை இங்கு குறிப்பிட வேண்டியுள்ளது.

இந்தத் தமிழ்த் தலைவர் என்னிடம் கூறியவைகளை சுருக்கமாக கூறுகின்றேன். ஒரு நாள் மாலையில் எனது தமிழ் நண்பர் ஒருவரோடு கொழும்பில் வாழும் வெளிநாட்டு தூதுவர் ஒருவரின் வீட்டில் நடந்தவிருந்துபசார த்தில் கலந்து கொண்டேன். நாங்கள் அங்கு செல்லும் போது அங்கு இன்னும் இரண்டு இலங்கை நண்பர்களும் இருந்தனர். அவர்கள் எனது நண்பருக்கு அறிமுகமானவர் களாக இருந்தாலும் அவர்களுள் ஒருவர், ஐ.தே.கட்சி பொருளாளரும் கொழும்பு நகர சபையின் பிரதி மேயருமான கே. கணேசலிங்கம் எனக்குப் புதியவராக இருந்தார். நான் கணேசலிங்கத்தைச் சந்தித்தமுதல் தடவை அது. அவர் காலஞ்சென்ற சிறில் மத்தியூ அவர்களின் நெருங்கிய நண்பர் என்பதையும் நான் தெரிந்து வைத்திருந்தேன். கணேசலிங்கம் போன்ற ஒரு தமிழ் மனிதர் சிறில் மத்தியு போன்ற தமிழ் தீவிர விரோத சிங்களத் தலைவர் ஒருவரின் நெருங்கிய நண்பாரானது எவ்வாறு என்பது பற்றியறிய எனக்குத் தேவையிருந்ததினால் ஒருவருக்கொருவர் அறிமுகமான தின் பின் அதற்கான சந்தர்ப்பத்திற்காக காத்திருந்தேன்.

அது மிகவும் உயிரோட்டத் துடன் கூடிய அரசியல் கலந்துரையாடலொன்றாக இருந்ததோடு வெளிநாட்டுத் தூதுவர்கள் வழங்கிய குடிவகைகளை அருந்திய வண்ணம் கணேசலிங்கம் மனதைத் தொடும்படியாக சிறில் மத்தியூவுடன் தனக்கிருந்த தொடர்புகளைப் பற்றி விபரித்தார்.

கணேசலிங்கம் ஒரு தமிழ ராயினும். தமிழ் விரோத தீவிர சிங்களப் போக்குடைய ஒரு தலைவராக நானறிந்திருந்தசிறில் மத்தியூவை பற்றி கணேசலிங்கம் மிகவும் கௌரவமாக கூறினார்.

சிறில் மத்தியூ தமிழ் விரோதஇனவாதியொருவர ல்லவென அவர் உறுதியாகக் கூறியதோடு அவரது சிங்களச் சமூகத்தவரிடமிருந்து அவருக்குத் தேவையான வரவேற்பு கிடைக்காத காரணத்தால் சமுதாயத்தில் ஒரு அங்கீகாரத் தினைப் பெற்றுக் கொள்ள தமிழ் எதிர்ப்புச் சிங்கள இனவாதியாக தன்னைக் காட்டிக் கொண்டாலும் அவர் உறுதியான தமிழ் விரோதமனப் போக்கு கொண்டு இருக்கவில்லையென அவர் திடமாக கூறினார். சிறில் மத்தியு எழுதிய பல தமிழ் விரோதப் புத்தகங்கள் என்னிடம் உள்ளதென நான் கூறிய போது, நான் அறிந்த அளவில் அவருக்கு கடிதமொன்றேனும் எழுதத் தெரியாதென்றும், வேறொருவர் எழுதியவைகளைத் தனது பெயரில் வெளியிட்டிருக்கலாம் எனவும் கூறினார்.

அதன் பின்பு நான் 1981 ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அபிவிருத்தி சபை தேர்தலின்போது நடந்தஅசம்பாவித சம்பவங்களில் சிறில் மத்தியுவின் பங்கு பற்றி வினவினேன்.

அந்த தேர்தல் நடவடிக்கைகளுக்கு கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் சென்ற குழுவிற்குள் தானும் அடங்கியிருந்தாகவும், அக்குழுவினர் யாழ்ப்பாணத்தில் தவறான முறையிலான தேர்தல் நடவடிக்கைகளில் ஈடுபட்டது உண்மையாயினும், யாழ்ப்பாண நூல்நிலையத் தீ வைப்புச் சம்பவத்திற்கு சிறில் மத்தியுவோ, காமினி திசாநாக்காவோ அல்லது கொழும்பில் இருந்து சென்ற குழுவினரோ தொடர்பில்லையெனவும், அந்தக் காரியத்தை அச்சந்தர்ப்பத்தில் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றிய எட்விட் குணவர்த்தனாவால் மேற்கொள்ளப்பட்ட தொன்றெ னவும், நூல் நிலையத்திற்குத் தீ வைக்கப்பட்ட சம்பவத்தைக் கேட்டவுடன் சிறில் மத்தியு காமினி திசாநாயக்கா போன்ற வர்கள் மிகவும் அதிர்ச்சிக்குள்ளாயினர் எனவும் கூறினார்.


அதன் பின்னர் ஜூலைச் சம்பங்களுக்கு சிறில் மத்தியூவின் தொடர்பு பற்றி வினவினேன். அதற்கு கணேசலிங்கம் கூறிய பதில், அவைகளுக்கு சிறில் மத்தியு மட்டுமன்றி அன்றைய அரசாங்கத்தின் எல்லா முக்கிய தலைவர்களும் தொடர்பு கொண்டிருந்தனர் எனவும் 83 ஜூலைச் சம்பவம் அரசாங்கம் திட்டமிட்டு மேற்கொள்ளப் பட்டவைகள் என்பதை தான் தெரிந்து வைத்திருப்பதாகவும் கூறினார்.

அரசாங்கத்திற்கு அதுபோன்ற ஒரு சம்பவத்தை ஏற்படுத்துவதற்கான தேவை என்ன எனக் கேட்டபோது அதற்கு அவர் தந்த பதில், அக்கால கட்டத்தில் வடக்கில் நடந்து கொண்டிருந்த சம்பங்கள் காரணமாக சிங்கள மக்களிடையே வளர்ந்து கொண்டிருக்கும் கோபம் அரசாங்கத்திற்கு எதிரான கலவரமொன்றாக மாறும் என்ற பயம் தலைவர்களுக்கு இருந்த தாகவும், அதனை வேறு திசையில் திருபுவதற்காக அதனைச் செயற்படுத்திய தாகவும், இருந்தாலும் அது இவ்வளவு தூரம் செல்லுமென அரசாங்கம் எதிர் பார்க்க வில்லை எனவும் கூறினார்.

ஜூலைச் சம்பங்கள் தொடர்பாக கணேசலிங்கம் கூறிய இந்தத் தகவல்கள் எனக்கு ஆச்சரியத்தைஏற்படுத்தியதோடு நான் ஓரளவு கோப சுபாவத் தோடு, நீர் ஒரு தமிழனாக இருந்து கொண்டு உமது இனத்துக்கு விரோதமான இந்தச் சதிக்கு நீர் எவ்வாறு தொடர்பு கொண்டீர்? என்ற கேள்வியைக் கேட்டமையினால், அவரிட மிருந்து மேலும் தகவல்களை அறியக் கூடிய சந்தர்ப்பத்தினை இழந்து விட்டேன். அப்போது கணேசலிங்கம் ஓரளவு போதையோடு இருந்தாலும் எனது கேள்வியின் காரணமாக அது ஓரளவு குறைந்ததாகவே தெரிந்தது. அத்தோடு அவர் பேச்சை நிறுத்திவிட்டு தான் கூறியவற்றை எங்கும் குறிப்பிட வேண்டாமென திரும்பத் திரும்ப வேண்டிக் கொண்டார். பல வருடங்களாக இவைகள் பற்றி எதுவும் குறிப்பிடாமல் இருந்தது அவரது வேண்டுகோளுக் கிணங்கியேயாகும். இருந்தாலும் தற்போது அவைபற்றி எழுதுவதின் காரணமாக அவருக்கு மனத்தாக்கங்கள் ஏற்படின் வருந்துகிறேன்.

இருந்தாலும் அவருக்கு ஏற்படும் மனத்தளர்வுகளையும் விட இந்த நாட்டின் தலைவிதியை முழுமையாகவே மாற்றிய இந்தச் சம்பவங்களின் உண்மையை நாட்டுமக்கள் அறிந்து கொள்வது மிக முக்கியமானதாகும்.

எமது தலைவர்கள் நாட்டுக்குச் செய்த துரோகங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அதிகாரத்தைவிட நாட்டு மக்கள் அவர்களுக்கு முக்கியமானவையல்ல. இதுவரை யில் இரண்டு பக்கத்தாலும் ஆயிரக்காணக்கான உயிர்கள் பலியானதும் இலட்சக்கணக்கான மக்கள் அனாதைகளாக்கப் பட்டதும் இவர்களது அதிகார ஆசையின் காரணத்தினாலே யாகும். இந்தமிலேச்சத்தனமான யுத்தத்திற்கு தீர்வினை எதிர்பார்ப்பது இவர்களின் மூலமேயாயின் எமது நாட்டுமக்களுக்கு ஆண்டவனே துணை.














கௌதமன்

# யாழில் அதிகரித்து வரும் போர் நடவடிக்கைகள்

நாட்டில் தேர்தல் களம் சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளதால் யுத்தகளத்திலும் மோதல்கள் அதிகரித்துள்ளன. வடக்கு-கிழக்கின் பல்வேறு பகுதிகளிலும் கடந்த வாரம் கடும் மோதல்கள் நடைபெற்றுள்ளன. யாழ். குடா நாட்டில் புலிகளுக்கு எதிராக படையினர் பாரிய நகர்வொன்றை மேற்கொண்ட போது அதற்கு கடும் பதிலடி கொடுத்த புலிகள், வவுனியாவிலும் திருகோணமலையிலும் படையினருக்கு எதிராக தாக்குதல்களை நடத்தியுள்ளனர். குடாநாட்டில் கொழும்புத்துறை மற்றும் அரியாலைப் பகுதியில் மோதல்கள் நடைபெற்றன. இதைத் தொடர்ந்து வவுனியா பூவரசங்குளம் பகுதியில் படையினர் சென்ற கவசவாகனம் மீது கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது. அதே தினம் திருகோணமலை வில்கம் கிராமத்தில் படைமுகாம் மீதும் புலிகள் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

குடாநாட்டில் தங்கள் தீவிர கவனத்தை செலுத்தியிருக்கும் அதேநேரம் குடாநாட்டிற்கு வெளியிலும் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளனர். குடாநாட்டில் மரபுவழிச் சமரிலும் ஏனைய பகுதிகளிலும் கெரில்லாத் தாக்குதல்களையும் தீவிரப்படுத்தியுள்ளனர். கொழும்புத்துறை மற்றும் அரியாலைப் பகுதியில் புலிகள் வசமிருக்கும் பகுதிகளை நோக்கி கடந்த 10ம் திகதி அதிகாலை படையினர் பாரிய நகர்வொன்றை மேற்கொண்டிருந்தனர். கவச வாகனங்கள், யுத்த டாங்கிகள் சகிதம் முன்னேறிய படையினருக்கு உதவியாக ஆட்லறிகளும் பல குழல் றொக்கட்டுகளும் குண்டுகளைப் பொழிய குண்டுவீச்சு விமானங்களும் தாக்குதல் ஹெலிகொப்டர்களும் கடும் தாக்குதல்களை நடத்த இந்தப் படைநகர்வை இராணுவத்தினர் ஆரம்பித்தனர். குடாநாட்டில் படையினர் வசம் வந்து சேர்ந்த பாரிய கனரக ஆயுதங்களை பயன்படுத்தியே இந்தப் படைநகர்வு மேற்கொள்ளப் பட்டது. எனினும் படையினரின் நகர்வுத் திட்டத்தை அறிந்திருந்த புலிகளும் அதற்கேற்ப தங்களின் பதில்தாக்குதலை மேற்கொண்டனர்.

குடாநாட்டினுள் வலிகாமம், வடமராட்சி, தென்மராட்சி மற்றும் தீவுப் பகுதியென நான்குமுக்கிய பகுதிகளுள்ளன. அதில் தென்மராட்சியின் பெரும் பகுதி புலிகள் வசமுள்ளது. இதைவிட யாழ்.மாநகர சபை எல்லைக்குள் தென்புற எல்லையான அரியாலை, கொழும்புத்துறை பகுதியில் குறிப்பிடத்தக்களவு நிலப்பரப்பு புலிகள் வசமுள்ளது. இப்பகுதிகளிலிருந்து புலிகளை அப்புறப்படுத்திவிட்டால் படையினர் அரியாலையின் எல்லைப்புறமாகவிருக்கும் செம்மணி எல்லைக்குச் சென்றுவிடலாம். அத்துடன் புலிகளை அரியாலை கிழக்கு, மணியந் தோட்டத்திற்குள் தள்ளிவிடுவதன் மூலம் அவர்களை முற்றாகத் தனிமைப்படுத்தி மேலும் பலவீனப்படுத்தி விடலாம் எனவும் படையினர் கருதினர். அத்துடன் அரியாலை கிழக்கு கடல் நீரேரியூடாக புலிகள் குடாநாட்டினுள் வந்து செல்வதை தடுத்து விடலாமென கருதினர். இதைவிட, அரியாலை மற்றும் கொழும்புத்துறை பகுதிகளில் நிலைகொண்டிருக்கும் புலிகளுக்கு தென்மாட்சியிலிருந்து கண்டி வீதியூடாக விநியோகப் பாதை உள்ளதால் இவர்கள் மூலம் யாழ் நகருக்கும் ஆபத்து ஏற்படும் வாய்ப்பு மிக அதிகமாயுள்ளது.

யாழ்ப்பாண நகரத்தை புலிகளின் தாக்குதல் அச்சுறுத்தலிலிருந்து விடுவிப்பதாயின் யாழ். மாநகர சபை எல்லைக்குள் மேற்படி பகுதிகளிலிருக்கும் புலிகளை அந்தப் பகுதிகளிலிருந்து அப்புறப்படுத்துவதும் அவசியம். இதனையும் கருத்தில் கொண்டே கொழும்புத்துறை மற்றும் அரியாலைப் பகுதியில் புலிகளுக்கு எதிராக கடந்தவாரம் படையினர் பாரிய படை நடவடிக்கையொன்றை ஆரம்பித்தனர். எனினும் சுமார் 7 மணிக்கு நேர மோதலுடன் இந்த நகர்வு முயற்சி முடிவுக்கு வந்தது. படையினருக்கு எதிராக புலிகள் மிகக்கடுமையான எதிர்தாக்குதலை நடத்தினர். படையினர் நர்ந்த பகுதிகளில் புலிகள் பெருமளவு கண்ணி வெடிகளையும், மிதிவெடிகளையும் புதைத்திருந்ததால் அவற்றை அகற்றிக் கொண்டு படையினர் முன்னேறிய போது புலிகள் நடத்திய தாக்குதலில் தங்களுக்கு இழப்புகள் ஏற்பட்டதாக படையினர் கூறினர். தங்கள் தாக்குதலில் 60க்கும் மேற்பட்ட புலிகள் உயிரிழந்து நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் படையினர் கூறினர். எனினும் தங்கள் தரப்பில் எண்மர் மட்டுமே உயிரிழந்ததுடன், படையினர் தரப்பில் 40 பேர் கொல்லப் பட்டும் 200க்கும் மேற்பட்டோர் காயமடைந்ததாகவும் புலிகள் கூறியுள்ளனர்.

கடந்த 5ம் திகதி வடமராட்சி கிழக்கில் நாகர்கோவில் பகுதியிலும் இதுபோன்றதொரு பாரிய படைநகர்வு மேற்கொள்ளப்பட்டது. அந்த முயற்சியும் புலிகளின் கடும் எதிர்ப்பால் பின்னர் கைவிடப்பட்டது. வடமராட்சி கிழக்கில் நாகர்கோவிலுக்கு தெற்கேயுள்ள பகுதிகள் அனைத்தும் புலிகள் வசமிருப்பதால், நாகர்கோவில் படைமுகாமிற்கும் கடல் போக்குவரத்திற்கும் புலிகளால் ஆபத்து ஏற்படும் வாய்ப்புகள் அதிகம். அத்துடன் நாகர்கோவில் படைமுகாமை புலிகள் கைப்பற்றும் பட்சத்தில் அவர்கள் பருத்தித்துறை நகருக்குள் நுழைந்து விடலாம் என்பதாலும், வடமராட்சி கிழக்கில் புலிகளின் நடவடிக்கைகளை முடக்கி அவர்களை அப்பகுதிகளிலிருந்து அப்புறப்படுத்த வேண்டிய அவசியம் படையினருக்கு ஏற்பட்டுள்ளது. பருத்தித்துறை பகுதிக்குள் புலிகள் நுழையும் நிலை ஏற்பட்டால் தற்போது பல்வேறு தேவைகளுக்காகவும் பயன்படுத்தப்பட்டு வரும் பருத்தித்துறை துறைமுகத்திற்கும் அச்சுறுத்தல் ஏற்படலாம். ஏற்கனவே பலாலி விமானத் தளம் மீதும் காங்கேசன் துறை துறைமுகம் மீதும் புலிகள் ஆட்லறி ஷெல் தாக்குதல்களை நடத்தியதால் பருத்தித்துறை துறைமுகத்தின் முக்கியத்துவம் பெருமளவில் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் பருத்தித்துறை மற்றும் அதற்கப்பாலுள்ள, பலாலி மற்றும் காங்கேசன்துறை தளங்களை பாதுகாக்க வட மராட்சி கிழக்கில் நாகர்கோவில் பகுதியில் பாரிய படை நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டது போன்று யாழ். நகரப் பகுதியை பாதுகாக்கும் நடிவடிக்கையாக கொழும்புத் துறை மற்றும் அரியாலைப் பகுதியில் பாரிய படை நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டதாக இராணுவ ஆய்வாளர்கள் கருதுகின்றனர். யாழ் நகரும், வடமராட்சிப் பகுதியுமே தற்போது அதி முக்கிய பகுதிகளாக விளங்குகின்றன. தென்மராட்சி பகுதியில் கிளாலி முதல் கொடிகாமம் வரையும் கொடிகர்மத்திலிருந்து வடமராட்சி செல்லும் பகுதியும் படையின் வசமுள்ள பகுதிகளில் பாரிய தாக்குதல்ளைத் தொடுக்கும் வாய்ப்புகளிருப்பதாக படையினர் கருதுகின்றனர். எனினும் இப்பகுதிகளில் பலகுழல் றொக்கட் செலுத்திகள் மற்றும் ஆட்லறிகள் போன்ற பாரிய ரக ஆயுதங்களை நிறுத்தி தாக்குதல்களை நடத்த முடியாததொரு சூழ்நிலையும் தென்படுகிறது.





> **தலைநகரில் இடம்பெறும் களியாட்டங்கள், கோலாகலக் கொண்டாட்டங்கள், கிரிக்கெட் போட்டிகள் யுத்த முனைப் படையினரின் மனோ நிலையை பெரிதும் பாதித்து வருவதாகவே படை அதிகாரிகள் கூறுகின்றனர். நாட்டைக் காக்கும் யுத்தமென்பது, நகர்புறம் சாராத ஏழை வாலிபர்களுக்குரியதாகவே மேல் தட்டு வர்க்கத்தினரால் கருப்படுவதால், தொடர்ந்தும் உயிரிழக்க விரும்பாத ஏழை வாலிபர்கள் படைகளிலிருந்து தப்பியோடுவதுடன் படைகளில் சேர்வதற்கும் முன்வருவதில்லை.**

யாழ். குடா நாட்டை 1996ல் முழுமையாக படையினர் கைப்பற்றிய பின்னரே புலிகள் வன்னியிலும் வேறு பகுதிகளிலும் பாரிய தாக்குதல்களைத் தொடுத்து ஆட்லறிகள் போன்ற கனரக ஆயுதங்களை கைப்பற்றியிருந்தனர். ஒவ்வொரு படைத்தளங்கள் மீதும் புலிகள் பெரும் தாக்குதல் அச்சுறுத்தலை ஏற்படுத்தும் போது அந்த முகாம்களில் பாதுகாப்பிற்காக பாரிய கனரக ஆயுதங்கள் அங்கு குவிக்கப்பட்டு பாரிய ஏற பாடுகள் மேற்கொள்ளப்படும். இந்த நேரத்தில் அந்த முகாம்கள் மீது திடீரெனப்பாரிய தாக்குதலை தொடுத்து முடிந்தளவு கனரக ஆயுதங்களை கைப்பற்றுவதே அவர்களது நோக்கம். இதற்காக அவர்கள் நாட்கணக்கிலும், சில வேளைகளில் மாதக்கணக்கிலும் அடுத்த தாக்குதலுக்காக காத்திருப்பார்கள். புலிகளின் இந்த நோக்கத்தை படையினர் நன்கு அறிந்திருந்து அதற்கேற்ப தங்களின் தாக்குதல் வியூகங்களை வகுத்தும் வந்துள்ளனர். எனினும் புலிகள் பல முகாம்கள் மீது தாக்குதல்களை நடத்தி முக்கிய ஆயுதங்களைக் கைப்பற்றியுள் ளனர். தற்போது நவீனபடைக் கலங்களை நகர்த்தும் நடிவடிக்கைகளில் படையினர் மிகுந்த அவதானமாகவே உள்ளனர் இதனை புலிகளும் உணர்ந்து அதற்கேற்ப தங்கள் நடவடிக்கைகளை மேற்கொள்ள திட்டமிட்டு வருவதாகவே இராணுவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

நாட்டில் போரின் தீவிரம் நாளுக்கு நாள் அதிகரித்தே வருகிறது. ஆயுதக்குவிப்புகள், ஆட்சேர்ப்புகள், யுத்த நிலைப் பிரகடனமென கடும் மோதல்களுக்கான தயாரிப்புகள் தொடர்ந்தும் தீவிரமடைந்து வருகின்றன. படைகளுக்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கைகள் எதிர்பார்த்த பலன்களைத் தராததால், படைகளிலுமிருந்து தப்பியோடி தலைமறைவாக இருப்போரை தேடிப்பிடிக்கும் பணிகள் தீவிரமடைந்துள்ளன தலைநகரில் புலிகளைத்தேடும் படையினர் தலைநகருக்கு அப்பாலுள்ள பகுதிகளிலும் முப்படைகளிலுமிருந்து தப்பியோடியவர்களை தேடுகின்றனர். தலைநகரில் இடம்பெறும் களியாட்டங்கள், கோலாகலக் கொண்டாட்டங்கள், கிரிக்கெட் போட்டிகள் யுத்த முனைப் படையினரின் மனோ நிலையை பெரிதும் பாதித்து வருவதாகவே படை அதிகாரிகள் கூறுகின்றனர். நாட்டைக் காக்கும் யுத்தமென்பது, நகர்புறம் சாராத ஏழை வாலிபர்களுக்குரியதாகவே மேல் தட்டு வர்க்கத்தினரால் கருப்படுவதால் தொடர்ந்தும் உயிரிழக்க விரும்பாத ஏழை வாலிபர்கள் படைகளிலிருந்து தப்பியோடுவதுடன் படைகளில் சேர்வதற்கும் முன்வருவதில்லை. இதனால் யுத்த முனைகளில் ஆட்பற்றாக்குறை பெருமளவில் நிலவுகிறது.

ஆனையிறவு படைத்தள வீழ்ச்சியைத் தொடர்ந்து தீவிர மடைந்த போர் தற்போது சற்றுத் தணிந்திருந்தாலும் இடையிடையே கடும் மோதல்கள் நடைபெற்றே வருகின்றன. இந்த மோதல்கள் எதிர்வரும் தேர்தல் நேரத்தில் மேலும் தீவிர மடையலாமெனவும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். கடந்த வருட பிற்பகுதியில் ஜனாதிபதித் தேர்தல் காலத்திலும் கடும் மோதல்கள் நடைபெற்றிருந்தன. அதே போன்று இந்தத் தேர்தலின் போதும் வடக்கு- கிழக்கு யுத்தமுனை அதிரக்கூடிய வாய்ப்புகள் இருப்பதாகவே அந்த ஆய்வாளர்கள் கூறுகின்ற னர். யாழ். மாநகர சபை எல்லைக்குள் நுழைந்து விட்ட புலிகள் தற்போது தங்கள் தாக்குதல்களை நிறுத்தியுள்ளனர். ஆனையிறவுப் படைத்தளம் மீதான தாக்குதலைத் தொடர்ந்து குடா நாட்டில் தற்காப்புச் சமரில் ஈடுபட்டு வந்த படையினர் தற்போது இடையிடையே தாக்குதல் சமரை யும் தொடுத்து வருகின்றனர். நாகர்கோவில் மற்றும் கொழும்புத்துறை, அரியாலைப் பகுதிகளில் படையினர் தாக்குதல் சமரையே மேற்கொண்டிருந்தனர். இந்த மோதல்களில் புலிகள் தற்காப்புச் சமரில் ஈடுபட்டிருந்தனர்.

இன்னும் ஓரிரு மாதங்களில் வடக்கு - கிழக்கில் மாரிமழை ஆரம்பமாகி விடும் என்பதால் அதற்கு முன்னர் முக்கிய வெற்றிகளைப் பெற இருதர ப்பும் முயல்வார்களென்றே ஆய்வாளர்கள் எதிர்பார்க்கின் றனர். இதனால் தேர்தல் சூடுபிடித்து களத்தில் வேட்பாளர்கள் குதிக்கும் போதுவடக்கு கிழக்கு போர்க் களத்திலும் கடும் மோதல்கள் நடைபெறுமென்றே எதிர்பார்க்கப்படுகிறது.




# "இலங்கை இந்தியர் வரலாறு"

## நூல் கூறும் வரலாற்றுத் தகவல்கள்


இலங்கையில் வாழும் இந்திய மரபுவழி மக்கள் பற்றி குறிப்பாக மலையக மக்களின் வரலாறு பற்றி ஆங்கில மொழியில் ஏராளமான ஆய்வு நூல்கள் உள்நாட்டவர்களாலும் வெளிநாட்டவர்களாலும் எழுதப்பட்டுள்ளன. ஆனால் அந்தளவுக்கு தமிழில் எழுதப்படவில்லை. சிலர் எழுதியிருந்தாலும் கூட அவை பூரணத்துவமுடையவை என்று கூறுவதற்கில்லை. இந்நிலையில் கொழும்பு பல்கலைக்கழக கல்வியியற்றுறை பேராசிரியர் சோ.சந்திரசேகரம் அவர்கள் 1989 ஆம் ஆண்டு எழுதி வெளியிட்டுள்ள இலங்கை இந்தியர் வரலாறு என்ற நூலினை அண்மையில் காணும் சந்தர்ப்பம் கிடைத்தது.ஆய்வு ரீதியில் ஆதாரபூர்வமான தகவல்களுடன் எழுதபட்டுள்ள இந்நூலிலுள்ள சில பகுதிகள் மட்டும் இங்கு தொகுத்துத் தரப்படுகின்றது. இவற்றினைத் தொகுத்துத் தருவதற்கான பிரதான காரணம் ஓரினத்தின் இளையமுறை தமது வரலாற்றின் மூலத்தை அறிந்திருக்க வேண்டும் என்பதற்காகவேயாகும்.

இன்று மலையக இளைய தலைமுறையினரிடையே ஒரு தவறான கருத்தோட்டமும், பிழையான போக்கும்அண்மைக்காலமாக அதிகரித்து வருவதைக் காணமுடிகிறது. அதாவது இலங்கையில் தாம் தமது இன அடையாளத்தை மறைத்து வாழ்ந்தால் கௌரவமாகவும், பாதுகாப்பாகவும் வாழமுடியும் என்ற போக்கு வளர்ந்து வருகிறது. இதன் காரணமாக இன அடையாளமாகத் தெரியும் தமது பெயரை இனம் காண முடியாத வகையிலே மாற்றிக் கொள்வது அல்லது பிற இனத்துவ பெயர்களை சூடிக்கொள்வது, மதம் மாறி பெயரையும்மாற்றிக் கொள்வது, கலப்புத் திருமணம் மூலம் மத, இன மாற்றத்துக் குள்ளாவது போன்ற அம்சங்கள் பெருகி வருகின்றன. இதற்கான பிரதான காரணம் மலையக மக்கள் என்று தம்மை இனங்காட்டிக் கொள்வது எதிர்காலத்தில் பாதுகாப்பில்லை என்று இவர்கள் கருதுவதனாலேயேயாகும். சிலர் இதனை நாகரிகமாக கூட நினைக்கக்கூடும். ஆனால் இது ஒரு தவறான கருத்தும், நடைமுறையுமாகும்.

உலகம் பல கண்டங்களாக, நாடுகளாக, இன, மத, மொழி, நிற, வேறுபாடுகளைக் கொண்ட குழுமங்களாகப் பிரிவுண்டு காணப்பட்ட போதும் உலகம் இன்று ஒரு கிராமமாகக் கொண்டு வரப்பட்டுள்ளது. வேற்றுமைகளுக்குள்ளும் ஒற்றுமை பேணப்பட்டு வருகிறது. உலகம் ஒரு பன்மைத்தன்மை கொண்ட அமைப்புடையதென்றும், பல்லினச் சமூகங்களைக் கொண்ட கூட்டமைப்பே உலகம் என்பதும் இன்று ஏ்றுக்கொள்ளப்பட்டுள்ளது. பல்லின சமூக அமைப்பில் ஒவ்வொரு சமூகமும் தத்தமது இருப்பை நிலை நிறுத்தவும் தமது தனித்துவ அடையாளங்களைப் பேணவும் உரித்துடையனவாகத் திகழ்கின்றன. 1980களில் யுனெஸ்கோ சமவாயங்களில் இவ்விடயங்களில் கூடுதல் கவனம் ஈர்க்கப்பட்டது. ஒவ்வொரு இனத்தினதும் கலாசாரமும் உலக நாகரிகத்தைச் செழுமைப்படுத்த பங்களிப்பு செய்துள்ளன என்பது உலகிலுள்ள எல்லா இனங்களினதும் கலாசார அம்சங்களைக் கொண்டமைந்ததே என்பது உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. இந்த வகையிலே இலங்கையில் மலையக மக்களது வரலாறு, கலை, கலாசார, பண்பாட்டு அம்சங்களும் உலக நாகரிகத்தின் ஒரு அம்சமே. மலையக மக்கள் நாகரிகமும் உலக நாகரிகத்தோடு ஒன்றிணைந்ததும், பங்களிப்பு செய்ததுமாகும்.



பெருந்தோட்ட மக்கள் இலங்கை நோக்கி வந்தபோது வெறும் கூலிகளாக மட்டும் வரவில்லை. உலக நாகரிகங்களின் தோற்றுவாய்களில் ஒன்றான இந்திய துணைக கண்டத்திலிருந்து, திராவிட நாகரித்தின் வாரிசுகளாக, ஒரு உன்னத கலாசாரத்தையும் காவி வந்தவர்களாகத் திகழ்கின்றனர். ஒரு கலாசார நகர்வு இங்கு இவர்களுக்கூடாகவே நிகழ்ந்துள்ளது. அதுமட்டுமல்லாது இலங்யின் பொருளாதாரத்துறை இவர்களின் வருகையுடனேயே உலகப் பொருளாதார துறையோடிணைந்தநவீன பொருளாதாரத்துறையுள் காலடி எடுத்து வைத்தது. இலங்கையில் பெருந்தோட்டத்துறையின் அறிமுகத்தோடிணைந்த வகையிலே பெருந்தெருக்கள், புகையிரதப்பாதைகள், கப்பற் போக்குவத்து, துறைமுக வளர்ச்சி, ஏற்றுமதி வர்த்தகம், வங்கித்துறை, வாணிகத்துறை, நிர்வாகக் கட்டமைப்பு, ஆகிய அனைத்துத்துறைகளும் வளர்ச்சியடையத் தொடங்கின. பெருந்தோட்டத்துறையிலிருந்து பெறப்பட்ட இலாபத்தைக் கொண்டே இந்நாட்டில் இலவச மருத்துவ சேவை, இலவச கல்வி, மானிய உதவிகள் யாவும் வழங்கப்பட்டன



மலேசியாவில் சென்று குடியேறிய இந்திய மரபு வழி மக்கள் அந்நாட்டிற்கு செய்துள்ள பங்களிப்புக்காக அம்மக்களை கௌரவிக்குமுகமாக அம்மக்களின் மொழியும் தேசிய மொழி அந்தஸ்து வழங்கப்பட்டு, வீட்டுவசதிகள் போன்ற பல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் மாறாக இலங்கையில் இம்மக்களின் குடியுரிமை, வாக்குரிமை என்பன பறிக்கப்பட்டு நாடற்றவர்கள் என்ற பட்டமும் சூட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இலங்கையில் வந்து குடியேறிய தமிழரில் ஒரு பிரிவினர் களுத்துறை போன்ற பகுதிகளிலும், கரையோரப் பகுதிகளிலும் குடியேறி, கிறிஸ்த்தவர்களாக மதம் மாறியும் , சிங்களப்பெண்களை மணமுடித்தும் சிங்களவர்களாகவே மாறிய போதும் அவர்களை சாதி குறைந்தவர்களாகவும் , தமிழினத்திலிருந்து வந்தவர்களாகவுமே இன்றும் பெரும்பான்மை சமூகம் ஒதுக்கி வைத்துள்ளது. சலாகம, துரவா என்ற சிங்கள சாதிப் பெயர்கள் இத்தகையவர்களையே குறிப்பது குறிப்பிடத் தக்கது. இன்றைய இளைய மலையக சமூகத்தில் சிலர் தமது இன அடையாளத்தை மறைத்து இரட்டை வேடம் பூண்டு வாழ்வதன் மூலம் முழு மலையக சமூக வரலாற்றையும் மாற்றி விடவோ, மறைத்துவிடவோ முடியாது. அவர்கள் பிறரை ஏமாற்றும் செயல் அவர்கள் தங்களையே ஏமாற்றிக் கொள்வதிலேயே சென்று முடியும். கடந்து வந்த வரலாற்றை நடந்து வந்த பாதையை பின்னோக்கிப் பார்த்து முன்னோக்கிச் செல்ல வேண்டும். இத்தகைய வரலாற்றுப் பதிவுகள் மானிடவியல் ஆய்வுக்கு எதிர்காலத்தில் தேவைப்படும். எனவே தான் "இலங்கை இந்தியர் வரலாறு" என்ற நூல் இன்று எளிதில் கிடைக்க முடியாத நிலையில் இந்நூலிலுள்ள சில அம்சங்களையாவது இன்றைய இளைய மலையக தலைமுறையினர் அறிந்துகொள்வது காலத்தின் தேவையென கருதி சுருக்கித் தரப்படுகின்றது.

> இலங்கையில் வந்து குடியேறிய தமிழரில் ஒரு பிரிவினர் களுத்துறை போன்ற பகுதிகளிலும், கரையோரப் பகுதிகளிலும் குடியேறி, கிறிஸ்த்தவர்களாக மதம் மாறியும் , சிங்களப்பெண்களை மணமுடித்தும் சிங்களவர்களாகவே மாறிய போதும் அவர்களை சாதி குறைந்தவர்களாகவும் , தமிழினத்திலிருந்து வந்தவர்களாகவுமே இன்றும் பெரும்பான்மை சமூகம் ஒதுக்கி வைத்துள்ளது.

**வே.சண்முகராஜா B.A**

## குற்ற உணர்வு

பாபரி மஸ்ஜித் சிதைவுகளிலிருந்த
விஸ்வ ஹிந்து பரிசத்தை நோக்கியும்
பஃதாதத், பஸ்ரா சிதறல்களிலிருந்து
பெண்டங்கனை நோக்கியும்...
நீளத் தயங்கும் என் சுட்டு விரல்

எனது அங்க ஆக்ரோஷத்தில்
டூமா தேவாலயம் சிதைந்தது
என் அபூ ஸாய்யாயஃப் பரமேந்திய
துப்பாக்கி முனையில்
உறுத்தப்பட அப்பாவி உயிர்களின்
பதைபதைப்பில்
ஜிஹாதின் வரைவிக்கணம்
படபடத்தது
நம்மை பயங்கரவாதிகளாய்
முழங்கும் பறை வாய்களுக்கு
நமது அவலிடுகை

வரலாற்று வெளிச்சத்திற்கு முன்
என் அங்கம் விழி பொத்த
நலுங்கும் நான்

தூர்ந்து போகாமல் சுவடுகளிருக்க
துயரமறுப்பதேன் என் பாதங்கள்?

**இப்னு ஜிஃப்ரி**



**இலங்கை தொழிலாளர் காங்கிரசின் இன்றைய தலைவரும் அமைச்சருமான ஆறுமுகம் தொண்டமானுக்கு எதிராக உபதலைவர்களான வி.பி. தேவராஜ், ஏ.எம்.சி ராஜன், டி.வி. சென்னன், எஸ். ராஜரட்ணம், எஸ்.சதாசிவம் ஆகிய பாராளுமன்ற அங்கத்தவர்கள் விடுத்திருக்கும் சவால் பெரும் பிரச்சினையை எழுப்பியுள்ளது.**

# இ.தோ.கா வை பிரிக்க ஐந்து பேரால் முடியாது.

## ஆறுமுகம் தொண்டமான்

**தெற்காசியாவில் கூடுதலான தொழிலாளர்களைக் கொண்ட தொழிற்சங்கமான இலங்கைத் தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் இன்று உங்கள் தலைமையிலும், ஐந்து உப தலைவர்கள் தலைமையிலுமாக இரண்டாக பிரியும் ஆபத்து ஏற பட்டிருக்கிறது. தங்களுக்கும் உப தலைவர்களுக்கும் இடையில் இன்று தோன்றியுள்ள நெருக்கடி நிலைமை என்ன?**

எவ்வித பிரச்சினையும் இல்லை. நெருக்கடியும் இல்லை. உபதலை வர்கள் அதிகாரத்திற்கான நெருக்கடி நிலையையே தோற்றுவித்துள்ளனர். சௌமிய மூர்த்தி தொண்டமான் (பாட்டனார்) இறப்பதற்கு 2-3 மாதத்திற்கு முன்பே இவர்கள் கட்சிக்குள் நெருக்கடி நிலையை தோற்றுவிக்க முயற்சி செய்தனர். இன்று அதிகார வேட்கையால் இது வெடித்துள்ளது. காங்கிரஸ் ஐந்து பேருக்காக இரண்டாக பிரியும் கட்சி அல்ல.

**காங்கிரஸ் பிரச்சினையோ அல்லது நெருக்கடியோ இல்லையென்றால் ஐந்து உபதலைவர்களும் தங்கள் மீது சுமத்தியுள்ள நிதிக் குற்றச்சாட்டை நிரூபித்தால், தாங்கள் கட்சி தலைமைத்துவதிலிருந்தும் அமைச்சர் பதவியிலிருந்தும் இராஜினாமா செய்வதாக கூறியது ஏன்?**

இல்லை. நான் அப்படி கூறவில்லை. அவர்கள் முன்வைக்கும் குற்றச்சாட்டை நிரூபிக்கட்டும். சௌமிய மூர்த்தி தொண்டமான் கட்சிக்கு வரும் பொழுது கட்சியின் சொத்து எவ்வளவு, மரணமாகும் போது எவ்வளவு, நான் தலைவராகும் போது எவ்வளவு இப்பொழுது எவ்வளவு?

**உபதலைவர்கள் கட்சியின் சொத்துக்கள் ஒழுங்கீனமற்ற முறையில் பாவிக்கப்பட்டுள்ளதாக கூறுகின்றனர். இக் குற்றச்சாட்டை தாங்கள் நிராகரிக்கின்றீர்களா?**

இவ்விடத்தில் அதிகாரம் யாருக்கு எனும் நெருக்கடியே எழுந்துள்ளது. இப்பொழுது

> **மக்களிடையே போட்டிக்கு நான் தயார். செல்லச்சாமிக்கும் ஐந்து உப தலைவர்களையும் வழக்கை வாபஸ் வாங்கி வரச் சொல்லுங்கள். நாம் தேசிய சபையில் தேர்தலை நடத்துவோம். அதன்பின் தீர்மானிப்போம்.**

இவர்கள் ஐந்து வருட வரவு செலவுத் திட்டத்தை கோருகின்றனர். 98 மகா நாட்டில் கணக்கு விபரங்கள் காட்டப்பட்டன. அப்போது அவர்கள் மேலே பார்த்துக் கொண்டிருந்தார்களோ தெரியாது. எங்களது செயலாளர் இருக்கின்றார். அவர்கள் உபதலைவர்கள். இவற்றை தேடிப்பார்க்க முடியும். அப்படி அல்லாது வீதியில் இறங்கியது வெட்கம்.

**உபதலைவர்கள் வரவுசெலவு அறிக்கையை பார்க்கவில்லை எனக்கூறும் நீங்கள், நிதி துஷ்ப்பிரயோகம் செய்யப்படுள்ளதை ஏற்றுக்கொள்கின்றீர்களா?**

அவர்கள் இதைப் பார்க்காமல் தான் இந்தப் பிரச்சினை எழுந்துள்ளது. தனிப்பட்ட சில விடயங்களை அவர்கள் எதிர்பார்த்திருந்தனர் அவை கிடைக்காதது தான் பிரச்சினை. எனது வயது 36, என்னுடைய வயதும் அவர்களுக்கு பிரச்சினை. கட்சியின் மூத்தவர்கள் என் போன்ற இள வயதினர் கீழ் எப்படி இருப்பது. நாம் பழக்கப்பட்டவர்கள், புதியவர்கள். இன்று கட்சியின் முக்கிய பங்கினை வகிக்கின்றார்கள். இதனை அவர்களால் தாங்க முடியாமல் இருக்கிறது.

**கட்சித் தலைமைத்துவத்தையும், அமைச்சர் பதவியையும் பாதுகாக்கும் நோக்குடனா இவ்வாறு கூறுகின்றீர்கள்?**

இல்லை.. இல்லை.. மக்களின் தயவினால் தான் நான் இந்த இடத்திற்கு வந்தேன். மக்களைத் தவிர வேறு எவருக்கும் இதனை மாற்ற முடியாது. மக்கள் வேண்டாம் என்று கூறினால் நான் இதை விட்டு போகத்தயார். நான் ஒரு அடியை முன்வைக்க நினைத்தால் எக்காரணம் கொண்டும் பின் வைக்க மாட்டேன்.

எனது அதிகாரங்களை பகிர்ந்து கொண்டு செல்கின்றேன். கட்சிக்குள் சர்வாதிகாரிக்கு போட்டி எதற்கு. ஆனால் நான் இன்னும் கூறுகின்றேன் மக்கள் மத்தியில் நான் போட்டிக்கு தயார். செல்லச்சாமியும் உப தலைவர்கள் ஐந்து பெரும் வழக்கை வாபஸ் வாங்கி வரச் சொல்லுங்கள், நாம் தேசிய சபையில் தேர்தலை நாடாத்துவோம். அதன் பின்பு தீர்மானிப்போம்.

**காங்கிரசில் நிதி அறிக்கையை எவ்வாறு யார் வெளியிடுகின்றீர்கள்?**

நிதிச் செயலாளர் என்ற ரீதியில் முத்துலிங்கமும் செயலாளர் என்ற வகையில் நானும் இதற்கு பொறுப்பு கூற வேண்டும். காங்கிரசின் தேசிய மகாநாட்டில் நிதி அறிக்கை வெளி யிடப்படும்.

**காங்கிரசில் தேசிய மகாநாட்டைத் தவிர வேறு எந்தச் சந்தர்ப்பத்திலும் நிதி அறிக்கை வெளியிடுவதில்லையா?**

இல்லை. தேசிய மகா நாட்டை தவிர்த்து இதனை செய்யப் போனால் எமது தொழிற்சங்க நடைமுறைக்கு எதிரான விபரங்கள் வெளியிடப்படும். எனவே தேசிய மகாநாட்டிற்குள் இவற்றை வரையறுத்துக் கொள்கின்றேன்.

**எச்.எஸ். செல்லச்சாமி 94இல் காங்கிரசில் இருந்து விலகி 96.06.11 (கொழும்பு மாவட்ட நீதி மன்றத்தில் 4093 விசேட வழக்கில்) தங்களின் பாட்டாளருக்கு எதிராக நீதி மன்றம் சென்றது முதல் இன்று வரை தேசிய மகாநாடு நடத்துவதற்கு அனுமதி கிடைக்கவில்லையா?**

ஆம்.

**அப்படியானால் நான்கு வருடங்களாக தேசிய மகாநாடு நடத்தப்படவில்லையா?**

ஆம்.

தங்களின் பாட்டனாரின் மரணத்தின் பின்பு வெற்றிடமான அமைச்சர் பதவி தங்களுக்கு கிடைக்கவிருந்த தறுவாயில் ஜனாதிபதியை உப தலைவர்கள் சந்தித்து அமைச்சரவை பதவிக்கு பதிலாக பிரதி அமைச்சர் பதவிகள் இரண்டினைக் கோரினர்.

ஆம், இது முற்றிலும் உண்மை. நான் அவுஸ்திரேலியாவிற்கு சென்றிருந்த பொழுது ஜனாதிபதியை சந்தித்து பிரதி அமைச்சர் பதவியை கோரினர். இது இவர்களுக்கு கிடைக்கவில்லை.

நான் அமைச்சர் பதவியை இழந்து நாளை இரண்டு பிரதி அமைச்சர் பதவி தருவோம் எனக் கூறினால் இந்த நிதிப்பிரச்சினை எல்லாம் இல்லை.

**தங்களின் அமைச்சு அதிகாரத்தைப் போல் அமைச்சின் வாகனங்களையும் காங்கிரசில் தங்களை எதிர்ப்பவர்களுக்கு எதிராக உபயோகிக்கின்றீர்கள் எனும் குற்றச்சாட்டு உள்ளது?**

அது பொய்.

ஆனால் புசல்லாவையில் ராஜரட்ணம் வீட்டை தாக்கியதற்கு பின்புலத்தில் உங்களைப் போல் தங்களின் ஆதவரவாளர்கள் மீதும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

நீதி மன்றத்தில் தீர்ப்பு கிடைக்கும். ஒரு கல்லேனும் படவில்லை கண்ணாடிகள் உடையவில்லை.

**தங்களை சந்தித்து பிரச்சினைகளை கதைக்க வந்த ஐந்து உபதலைவர்களுக்கும் 5 புளட், 5 மலர்வளையம் என கூறியுள்ளதின் அர்த்தம் என்ன?**

அவர்கள் அரசியல் ரீதியாக வீழ்ச்சியுறப் போகின்றார்கள் எனும் அர்த்தத்திலேயே கூறினேன். அவர்கள் அதை தவறாத புரிந்து கொண்டமைக்கு எனக்கு ஒன்றும் செய்ய முடியாது.

**இந்தப் பிரச்சினை நீண்டு கொண்டே போவதைதவிர தீர்வு கிடைக்குமென தெரியவில்லை. இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவர் என்ற ரீதியில் தாங்கள் கூறும் ஆலோசனை என்ன?**

நான் போட்டியிடத்தயார். சரி பிழையை மக்கள் தீர்மானிப்பார்கள். C.W.C. யை விட்டுச் சென்றவர்களையும் வரச்சொல்லுங்கள், நாம் போட்டியிடுவோம். நான் செயலாளராக இருப்பது அவர்களுக்கு சந்தேகம். பதவி விலகியேனும் போட்டியிடத் தயார்.

மொழி பெயர்ப்பு
**ஏ.எஸ்.ஞானம்.**

## மறைந்திடாக் கறுப்பு ஜூலை!

உயர்வுறு மாடமும் உணர்வுறு மாக்களும்
வியர்வுறு உழைப்பும் அயர்வுறாக் களிப்பும்
தீந்தமிழ் சிங்கள மாங்கிலம் போல்பல மொழிகளும்
தந்து நின்றனை மாநகர் கொழும்பினில்!

எண்ணிய பொழுதினில் சொல்லிய செய்கைகள்
மண்ணினில் பொழிந்திட வசதிகள் நிறைந்தனை!
புன்னகை புரியும் விரிமலர் முகங்களும்
பேதமை தெரிந்திடா நெருங்கியே வாழ்ந்தனை!

கற்பகத் தருக்களும் பசும்பொழில் பரப்பும்
நற்பயிர் நிலங்களும் கடல்களும் பரந்துமே
அறிவினை ஆழும் யாழ்நகர் நிமிர்ந்து
ஆற்றலில் நிறைந்ததே அரும்பதங் கூட்டியே!

தென்றலும் உறங்கிடும் ராத்திரிப் பொழுதினில்
தெருக்களில் திரிந்திடும் படையினர் தொடரணி!
அன்னகர் வீதியில் எண்பத்து மூன்றதில்
கண்ணி வெடியது வைத்தனர் சிலநபர்!

வெடித்ததும் சிக்கியே சிதறின சிங்களம்!
விடிந்ததும் தெருக்களில் பலவுடல் சரிந்தன!
வீடுகள் புகைந்தன! பெரும்பகை பிறந்தன!
விம்மியே தமிழ் மனம் புன்னகை மறந்தன!

செய்திகள் பறந்தன! நாடுமே குழம்பின!
செத்த உடல்களும் தலைநகர் விரைந்தன!
அவிழ்ந்தன கலவரம்! கறுத்தது தமிழ்மனம்!
அவலமும் பிறந்தன! அகதிகள் நிறைந்தன!

தலைநகர்- யாழ்நகர் உறவுகள் பிரிந்தது!
கவலைகள் நிறைந்த உணர்வுகள் பிறந்தது!
மரண நிலவரம் எங்கும் நிறைந்தது!
மக்கள் நிலங்களில குருதி தொடருது...!

துஷிகரன்(மாணவன்)
வைத்திய ஆராச்சி தாபனம்
கொழும்பு- 8

# சிறைகளில் தமிழ் இளைஞர்கள் மீது பாலியல் பலாத்காரம்



சிறிலங்கா இரா்ணுவமும், பொலிசும் நமது போராட்டத்தின் ஆரம்ப நாட்கள் தொட்டு ஆயிரக்கணக்கில் தமிழ் ஆண்களை குறிப்பாக இளம் ஆண்களை கைது செய்து சிறையில் அடைத்து சித்திர வதைக்குள்ளாக்கி வருகின்றன. விசாரணைகளின் போதும் தடுத்து வைத்திருக்கப்படும் காலங்களிலும் மிகக் கொடூரமான மனித வதைகள் நமது ஆண்கள் மீது, இளம் சிறுவர்கள் மீது மேற்கொள்ளப் படுகின்றன. இந்த சித்திரவதைகளில் பாலியல் சித்திரவதைகளும் அடங்குகின்றன. கைது செய்யப்படும் தமிழ் இளைஞர்களில் 20 வீதமானோர் தடுப்புக் காவலில் இருக்கும் காலத்தில் வன்புணர்ச்சிக்கும், பாலியல் துன்புறுத்தல்களுக்கும் உள்ளாக்கப்படுவதாக லண்டனில் உள்ள ஆய்வு நிறுவனம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது. தமிழ் ஆண்களின் உயிர் வாழும் உரிமையை தமது கைகளுக்கு எடுத்துக்கொண்டுள்ள பொலிஸ் இராணுவம் சிறை இலாக்கா ஆகிய சிங்கள வன்முறை இயந்திரத்தின் ஆண் உறுப்பினர்களும் அதிகாரிகளும் தமிழ் இளைஞர்களின் உடலை தமது உடமையாக கருதி அத்துமீறுகின்றனர்.

நமது தேசத்தின் யுத்த நிலைமைகளின் காரணமாக ஸ்ரீலங்கா படைகளினால் கைது செய்யப்படும் நமது இளம் ஆண்களும் சிறுவர்களும் எதிர்கொள்ள நேரிடும் ஒரு பாலுறவுத் தளத்திலான பாலியல் துன்புறுத்தல்கள் மற்றும் வன்புணர்ச்சி அட்டூழியங்களை வெளிப்படுத்தப்பட முயற்சிகள் மேற்கொள்ளாது இருப்பதனால் தொடர்ந்தும் இந்த ஆக்கிரமிப்பு படைகளால் நமது ஆண்களின் உடல் அத்துமீறல்களுக்கும் துன்புறுத்தல்களுக்கும் உள்ளாவதற்கு வாய்ப்பாகின்றது. எதிர்தரப்பு ஆண்கள் நமது ஆண்களின் மீது பாலியல் துன்புறுத்தல்களை மேற்கொள்வதை நாம் இரு தளங்களில் காணமுடியும். ஒன்று தமது அதிகாரத்தின் வெளிப்படையாக, தண்டனைகளாக எமது இளைஞர்களின் உடல்களை அத்துமீறுவது மற்றையது தமது பாலியல் தேவைகளுக்காக நமது ஆண்களின் உடல்களை பயன்படுத்த முயல்வது.

இத்தகைய ஆண்கள் மீதான அத்துமீறல் ஒருபுறம் பலாத்காரத்தை பிரயோகிக்கும் குற்றமாக அமையும் அதே நேரம் ஒருவரது தெரிவாக இல்லாத பாலுறவு முறைக்குள் அவரை பலாத்காரமாக உட்படுத்துவதும் ஒரு குற்றமாகும். இராணுவ முகாம்களிலும் பொலிஸ் கொட்டடிகளிலும், சிறைகளிலும் தமிழ் இளைஞர்களுக்கும் சிறுவர்களுக்கும் எதிராக நடைபெறும் பாலியல் வன்கொடுமைகள் தொடர்பாக ஒரு தேசம் எனும் வகையில் நாம் விரிவான விழிப்புணர்வைக் கொள்ள வேண்டியவர்களாய் இருக்கிறோம். இவ்வகை பாலியல் துன்புறுத்தல்கள் அடிப்படை மனித உரிமை மீறல் ஆகும். இக்குற்றங்களை பகிரங்கப்படுத்துவதனூடாக சம்பந்தப்பட்ட குற்றவாளிகள் தண்டனைப்பெறுவதற்கான நடவடிக்கைகளில் இறங்குவோம். துன்புறுத்தல்களுக்கு உள்ளான நமது இளைஞர்களுக்கு நியாயம் கிடைப்பதற்காக போராடுவோம்.

இவ்வாறு பாதிக்கப்பட்ட நமது இளைஞர்கள் பலரும் பெருத்த உளவியல் காயங்களை சுமந்து கொண்டு தமக்குள் மௌனமாக குமுறியபடி வாழ்கின்றனர். இவர்கள் தாம் எதிர்கொண்ட துன்பங்களை வெளிப்படையாக தயக்கமற்று வெளிப்படுத்திடும் மனத்திடத்தையும் சூழலையும் உருவாக்குவோம். இவ்வாறு தமது கசப்பான அனுபவங்களை வெளிப்படுத்துவதன் மூலம் இவர்களின் மனக்காயங்கள் பெரிதும் ஆறுவதற்கான வாய்ப்புக்கள் அதிகரிக்கும். இத்தகையவர்களது உளக்காயங்களை மாற்றுவதற்கான உளவியல் ஆலோசனையை (COUNSELING) சேவைகளை வழங்குவதில் தமிழ் ஈழத்தில் செயற்பட்டு வரும் புனர்வாழ்வு நிறுவனங்கள் கரிசனை செலுத்துவது வரவேற்கத்தகதாகும். அதே போல் புலம் பெயர்ந்து வாழும் தேச அபிமானிகளும் நமது தேசம் எதிர்கொள்ளும் இந்த காயங்களை ஆற்றுவதற்கான நடவடிக்கைகளில் இறங்கவேண்டியது இன்றைய வரலாற்றுத் தேவையாக உள்ளது. நம்மைப் போல் போராடும் தேசங்கள் பலவற்றிலும் பெண்களும், ஆண்களும், சிறுவர்களும் எதிர்கொண்ட, எதிர்கொண்டு வரும் உடல் வதைகளின் விளைவான உளக்காயங்களை அவர்கள் பெரிதும் சமூகத்தின் அக்கறையுடன் கூடிய பராமரிப்பின் மூலம் ஆற்றுவதினூடாக அக்கசப்பான படிவங்களிலிருந்து சமூகமாக கடந்து செல்லும் முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். அவர்களின் அனுபவங்களில் இருந்து நாமும் நமது துயர்களை சமூகமாக களைந்து செல்லக்கற்றுக்கொள்வோம்.

எதிர்தரப்பினாலோ அல்லது சொந்தசமூகத்தை சார்ந்தவர்களினாலோ பாலியல் தளத்தில் அது பெண்ணுக்கு எதிராக என்றாலும் சரி, ஆணுக்கு எதிராக என்றாலும் சரி, பாதிக்கப்படும் நமது இளம் பிள்ளைகள் பெண்கள் ஆண்களது உளவியல் தொடர்பாக நாம் ஆழ்ந்த கரிசனையை வெளிப்படுத்திட வேண்டும். எந்த சந்தர்ப்பத்திலும் தாம் புறக்கணிக்கப்படுவதாக இழிதரமாக அணுகப்படுவதாக அவர்கள் உணராதவாறு அவர்களுக்கு சமூகமாக எமது அன்பையும் அரவணைப்பையும் வழங்கி அவர்களது சிந்தனையை புத்துயிர்ப்பிப்பது ஒரு தேசத்தின் சக மனிதர்கள் எனும் வகையில் நம் அனைவரினதும் கடமையாகும். குறிப்பாக இன்றைய விடுதலை யுத்தத்தினால் ஈடுபட்டுள்ள ஒரு தேச மக்கள் எனும் வகையில் தமது சொந்த சகோதரர்களின் உடல் உள உறுதியில் பரஸ்பர அக்கறை செலுத்தவேண்டியவர்களாக நாம் உள்ளோம்.

சியா

# புலம்பெயர்வின் புலம்பல்கள்......



தமிழ் மக்களின் புலம்பெயர்வுக்கு காரணமாக தமிழ் மக்கள் மீதான திட்டமிடப்பட்ட போரும், நிறுவனமயப்பட்ட ஒடுக்குமுறையும் கூறப்பட்டுவருகிற போதும், பெருமளவான தமிழ் மக்கள் பொருளாதார தேவையின் நிமித்தம் புலம்பெயர்வு இட்பெற்றுள்ளதை சுட்டிக்காட்டி இவர்கள் அரசியல் அகதிகளல்லர். பொருளாதார அகதிகளே என்கிற வாதம் வெளிநாடுகளில் பலமாக இருக்கிறது.

தமிழ் மக்கள் தமது பொருளாதார உரிமைகளை அனுபவிக்க முடியாதநிலவிவரும் இலங்கைக்கு வெளியில் அவர்களின் பொருளாதார தேவைகளை நிவர்த்தி செய்ய தள்ளப்பட்டுள்ளனர். இதற்கு சாதகமாக ஏலவே தமிழ் மக்களால் உருவாக்கப்பட இருந்த "வெளிநாட்டு நாட்டம்" சாதகமாக அமைந்தது எனலாம். இன்று இலங்கையில் அரச மற்றும் தனியார் துறைகளில் தமிழ் மக்களை பணிக்கமர்த்துவதில் கவனமாக இருக்கின்றனர். போலித்தனமான கைதுகளும் அதன் பின்னரான சோதனை செய்யப்பட்ட குற்றங்களும், கைதுசெய்யப்பட்டவர் தொழில்புரிந்த இடங்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவதும்,

## யாரிடம் போய் நோக யாரிடம் போய் நோக...

அவை விலாவாரியாக கதைப்புனையப்பட்டு பிரச்சாரப்படுத்தப்பட்டும் வருவதானது தமிழர்களை தொழிலுக்கு அமர்த்துவது குறித்து பயத்தை பல தனியார் நிறவனங்களுக்கு ஏற்படுத்தியிருப்பது ஒரு காரணம். வடக்கு கிழக்குப் பகுதியில் இருந்து கொழும்புக்கு இடம்பெயர்ந்து வாழும் பலர் இவ்வாறான நிலை ஒன்றில் சொந்தமாக தொழில் நடத்துவது, அல்லது எந்த தொழிலுக்கு என்றாலும் போயே தீருவது என்றாகிறது. பலருக்கு வெளிநாட்டில் உள்ள தங்களின் உறவினர்கள் பணம் அனுப்புவது என்பது சாதகமாக இருப்பதனால் இதனை ஓரளவு இலகுவாக்கிக் கொள்ளவும் முடிகிறது. கொழும்பில் தமது அடிப்படைச் செலவுகளை கவனிக்க தமது உறவினர்கள் அனுப்பும் பணம் போதுமானதாக இருக்கும் நிலையிலும் கூட எப்படிப்பட்டாவது எந்தக்கொடுமைக்கும் உள்ளாகியாவது, எந்தத் தொழிலையும் செய்வது கட்டாயமாக உள்ளது. கொழும்பில் தொழிலின்றி இருப்பதும் கைது செய்யப்படுவதற்கு நியாயமான காரணமாகிறது என்பதே இதற்கான காரணமாகிறது என்பது இதற்கான காரணம்.

கொழும்பில் சிங்களம் தெரியாததாலும், வடக்கு கிழக்கு அடையாள அட்டையுடன் இருப்பதாலும் பிரயாணங்களை மட்டுப்படுத்திக்கொள்வது அப்படித் திரிந்தாலும் பொலிஸ் அறிக்கை புதுப்பிப்பு அறிக்கை இல்லாமல் வெளியே கிளம்ப முடியாத நிலை இந்தப் பதிவுகளுக்கு கொழும்பில் அனைத்து விடயங்களுக்கும் பணம் கொடுத்துத்தான் செய்விக்க வேண்டிய நிலையும், பொதுவாக தமிழர்களை குறிப்பாக வடக்கு கிழக்குப் பகுதியினரை கண்டவுடன் குறித்த கருமத்தை ஆற்றுவதற்கு பணம் கேட்பதும் காடையர் கூட்டத்தினரிடமும் அவ்வப்போது கேட்கும் பணத்தை கொடுப்பதுமாகவே காலம் தள்ளப்படுகிறது. இத்தனையையும் சமாளிக்க கொழும்பில் ஒரு உயர் பதவித்தொழிலை வகித்தால் கூட சமாளிப்பது கடினம். வெளிநாட்டில் இருப்பவர்களின் உதவிகளும் இல்லையென்றால் கொழும்புச் சீவியம் சாத்தியப்படுவது கடினம். அல்லது தற்கொலைக்கு ஒப்பான ஒரு வாழ்க்கை.

வெளிநாடுகளில் உள்ளவர்கள் அனுப்புகின்ற பணமும் மாடாக உழைத்து அந்நியரிடம் தம்மை மிகுதியாக சுரண்ட விட்டுக் கிடைக்கும் பணத்தை தான் என்பது பல சந்தர்ப்பங்களில் பலரும் மறந்து போயுள்ளனர்.

வடக்கு கிழக்கில் இருந்து கொழும்புக்கு இடம்பெயர்ந்துள்ள பலர் தமது சொந்த மண்ணுக்கு மீண்டும் திரும்புவோம் என்கின்ற கனவை விட வெளிநாட்டுக்கு கூடிய விரைவில் போய் சேர்ந்து விடுவோம் என்று காணும் கனவுகள் இருப்பதைக் காணலாம். இதற்காக கொடுக்கப்படும் விலைகள் கூட சாதாரணமானவை அல்ல. ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட பல நாடுகளில் அகதிகள் குறித்த கொள்கை வகுப்பாளர்கள் இலங்கையில் இருந்து வரும் தமிழர்களை அவர்கள் பொருளாதார அகதிகளே என்று நிறுவி அதனை நிலைநாட்ட பலத்த முயற்சிகள் எடுத்து வருகிறார்கள். இதற்கு தமிழ் ஆய்வாளர்கள் பலரிடம் கூட பணம் கொடுத்து அறிக்கை தயாரித்து தரக் கோருகிறார்கள். சில தமிழர்களும் இதற்கேற்றாற் போல நிறுவி அறிக்கைகள் வழங்கியமுள்ளன. இவை இந்த நாடுகளின் அகதிகள் குறித்த கொள்கை வகுப்பாளர்களுக்கு பெரிதும் உதவி வருகின்றன. யுத்தத்தின் பக்க விளைவுகள் குறித்து வித அக்கறையும் காட்டாமல் வெறுமனே வடகிழக்கு யுத்தம் நடக்கும் பிரதேசம் சரி கொழும்பில் பாதுகாப்பானது என்று தான் எமக்கு கிடைக்கும் அறிக்கைகள் கூறுகின்றன என்று திட்டவட்டமாகக் கூறிவிடுகின்றனர். கொழும்பில் அரச படைகளின் கைதுகள், சித்திரவதைகள், பாதுகாப்பற்ற சூழல், வாழ்வதற்கு வாய்ப்பற்ற சூழல் என்கிற காரணங்களை கூறினால் சரி அப்படியென்றால் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு போங்கள் என்று கூறுகின்றனர். இதனாலேயே பலர் தமது அறிக்கைகளில் தமக்கு அரசால் மட்டுமல்ல புலிகளாலும் ஆபத்து என்கிற ரீதியில் தமது விண்ணப்பங்களை கொடுத்துள்ளனர். குறிப்பாக நோர்வேயை எடுத்துக்கொண்டால் இங்கு அகதி விண்ணப்பம் கோரியவர்களில் 80 சதவீதமானோர் விடுதலைப்

புலிகளாலும் ஆபத்து இருப்பதாக அறிக்கை வழங்கியிருக்கிறார்கள். நோர்வேயில் வாழும் தமிழர்களில் ஏறத்தாழ 90 சதவீதமானோர் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவானோர் என்பது குறிப்பிடத்தக்கது. இதில் உள்ள வேடிக்கை என்னவென்றால் இன்று புலிகளின் பொறுப்பாளர்களாக இருப்பவர்கள் பலர் கூட புலிகளால் தமக்கு ஆபத்து என்று விண்ணப்பித்திருந்தவர்கள் என்பது தான்.

இலங்கையின் இன ஒடுக்குமுறை எவ்வாறு தமிழர்களை ஒட்டுமொத்த அடிப்படை உரிமைகளை அனுபவிப்பதிலிருந்து அந்நியப்படுத்தி வைத்திருக்கிறது என்பது குறித்து சமீப காலமாக எந்தவித அக்கறையும் இந்த நாடுகள் கவனிப்பது இல்லையென்றே கூறலாம். தமிழ் மக்களின் புலம்பெயர்வு 85க்குப் பின்னர் அதிகரித்தது போல 1995உம் ஒரு முக்கியமான காலமாக கருதப்படுகிறது. சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையின் பின் ஏற்பட்ட தெற்கை நோக்கி இடம்பெற்ற இடப்பெயர்வுகள், அதோடு மேலும் அதிகரித்து வெளிநாடுகளை நோக்கிய இடப்பெயர்வுகள் குறிப்பிடத்தக்கவை.

வெளிநாடுகளுக்கோ அகதிகளை தவிர்ப்பது என்பது தமது ஜனநாயக முத்திரைக்கு இளக்கமாக ஆகிவிடும் என்கிற பயமும் இருக்கிற அதே வேளை அகதிகள் தமது நாடுகளுக்கு வந்து குவிவது பெரும் தொல்லையாகவும் பார்க்கப்படுகிறது. இதனை தவிர்ப்பதற்காகவே திட்டமிட்டு நியாயங்களை உருவாக்கி வருகின்றனர். அந்த நியாயங்களின்படிதான், இலங்கையின் நிலைமை இவ்வளவு மோசமாக இருந்தும் கூட திருப்பி அனுப்புவதில் அதிக அக்கறை காட்டி வருகின்றன.

ஆனால் வெளிநாடுகளுக்கு வருவதற்கும், வந்த பின் அனுபவிக்கும் கொடுமைகளுக்கும் எப்படி முகம் கொடுத்தார்கள், முகம் கொடுக்கிறர்கள் என்பது நிச்சயம் ஒரு காலத்தில் காவியமாகத் தான் ஆகும். எமது கண்ணுக்கு எட்டிய பலவற்றை உங்களுடனும் பகிர்ந்து கொள்கிறேன்.

என். சரவணன்.

# தமிழ்த்தேச உருவாக்க வளர்ச்சியைச் சிதைக்கும் யாழ்ஆதிக்கம்

ஆதிசங்கரர்

## தமிழ் தேசிய அரசியல் அன்றிலிருந்து இன்று வரை

அரசியல் தொடர் 6

சென்ற இதழில் தமிழ்மக்கள் தமது தேசப் போராட்டத்தின் நியாயப்படுத்தலுக்கு என பூர்வீகத்தை ஆதாரமாகக்காட்டக் கூடாது என்பதற்கான காரணங்களை முன்வைத்திருந்தேன் அதனைப்பார்த்த நண்பர்கள் பலர் தமிழ்த்தேசத்தின் அகமுரண்பாடுகள் பற்றியும், அம்முரண்பாடுகள் தமிழ்தேசத்தை பாதித்தவிதம் பற்றியும், தமிழ்த்தேசிய அரசியல் சக்திகள் அதனைக் கையாண்ட விதங்கள் பற்றியும் தங்களது அரசியல் வரலாற்றுத் தொடர் பேசவேண்டும் எனவற்புறுத்தியுள்ளனர். எனவே இந்த இதழில் அது பற்றிய அறிமுகத்தை கொடுத்து தொடர்நகரும் போது தமிழ்த்தேச அரசியல் அதனைக்கையாண்ட வழிமுறைகள் பற்றியும் பேசலாம். என இருக்கின்றேன்.

தமிழ்ச்சமூகம் ஒரு சமூகமாக உருவாக்கம் பெற்ற போது பல அகமுரண்பாடுகளையும் தன்னுடன் உருவாக்கிக் கொண்டது. பொதுவாக உருவாக்கங்கள் பெறுகின்ற சமூகங்கள் சமத்துவமாக இருப்பதில்லை. அதுவும் நிலமானிய சமூகங்களிலிருந்து உருவாகிய சமூகங்களைப் பொறுத்தவரை இச்சமத்துவமற்றநிலை ஒரு தொடராகவே செல்கின்றது. சமூகத்தின் தன்மைகள் மாறுகின்ற போது மேல்நிலையிலுள்ள சமூகப்பிரிவுகள் விரைவாக புதிய சமூகத்திலும் மேலானநிலையைப் பெற்றுக்கொண்டு புதியவடிவங்களின் கீழ் தமக்குக் கீழுள்ள சமூகங்களின் மீது ஆதிக்கத்தினை நிலை நிறுத்துகின்றன. இவை தொடருகின்ற போது அகமுரண்பாடுகளும் வளர்ச்சியடைய ஆரம்பிக்கின்றன. ஈழத்தமிழ்ச் சமூகத்தைப் பொறுத்தவரையும் கூட இந்நிகழ்வே நடந்துள்ளது.

தமிழ்த்தேச உருவாக்கம் என்பது வேறுவேறு வரலாறுகளைக் கொண்ட யாழ்ப்பாணம், வன்னி, கிழக்கு சமூகங்களைக் கொண்டே உருவாக்கம் பெற்றது. பின்னைய காலத்திலிருந்து வடக்கு-கிழக்கில் குடியேற்றப்பட்ட இந்தியவம்சாவழிச்சமூகமும் நான்காவது சமூகமாக தமிழ்த்தேசத்துடன் இணைந்துள்ளது. இவ் ஒவ்வொரு சமூகமும் தமக்குள்ளே அகமுரண்பாடுகளை கொண்டிருந்தன. அவை தேசமாக இணைந்த போதும் அவ்இணைவினாலும் புதிய அகமுரண்பாடுகள் மேலெழும்பின.

இன்று ஒட்டுமொத்தமாக தமிழ்த்தேசத்தைபார்க்கும் போது பல்வேறு அகமுரண்பாடுகள் கோலோச்சுவதை அவதானிக்கலாம் அவற்றில் யாழ் ஆதிக்கம், சைவ மேலாதிக்கம், ஆணாதிக்கம், சாதீய ஆதிக்கம், இந்திய வம்சாவழியினர் மீதான புறக்கணிப்பு என்பன பார தூரமான அகமுரண்பாடுகளாக உள்ளன. இவற்றில் யாழ் ஆதிக்கம் தமிழ்த்தேசத்தைப் பொறுத்தவரை மிகவும் முக்கியமானதாகும்.

பிரித்தானியரின் காலனித்துவ அரசாங்கம் இலங்கையில் காலூன்றிய போது அது வழங்கிய சலுகைகளினால் யாழ்ப்பாணச் சமூகம் ஏனைய தமிழ்ச்சமூகங்களை விட மேல் நிலைக்கு வந்தது. கிறிஸ்தவ மிஷனறிமார்களின் கல்விப் பணிகளினாலும் அதற்கு போட்டியாக எழுந்த இந்துப் பெரியார்களினாலும் கல்விப்பணிகளினாலும் ஏனைய பிரதேசங்களைவிட யாழ்ப்பாணப் பிரதேசம் கல்வியில் அபரிதமாக வளர்ச்சியடைந்தது. கீழ்மட்ட அரசாங்க உத்தியோகங்களுக்கு சுதேசிகளை சேர்த்துக் கொள்ளுதல் என காலனித்துவ அரசாங்கம் முடிவுசெய்து நடைமுறைப் படுத்தியபோது யாழ்ப்பாணச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பெருமளவில் அரசாங்க அலுவலர்களாக இணைந்து கொண்டனர். இவ்வாறு இணைந்து கொண்டவர்கள் கொழும்பிற்கு மாத்திரமல்ல வடகிழக்கில் உள்ள தமிழ்ப் பிரதேசங்களுக்கும் அரசாங்க அலுவலர்களாக சென்றனர். இவர்களில் ஆசிரியர்களும் அடங்குவர் அவர்கள் அப்பிரசேங்களில் தமது அந்தஸ்தினைப்பயன்படுத்தி ஆதிக்கத்தை நிலைநிறுத்திக் கொண்டனர் விவசாயநிலங்களினை தாமும் வாங்கி அரசாங்க வேலைக்கு புறம்பாக விவசாயச் செய்கையிலும் ஈடுபட்டனர். யாழ்ப்பாணப் பிரதேசம் ஒரு வரண்ட பிரதேசமாக இருந்தபடியாலும் கல்விக்கும், அரசபதவிக்கும் உள்ள சமூக அந்தஸ்த்தினாலும் இவ்வாறு கல்வி கற்று அரசபதவிகளுக்கு செல்லும் போக்கு வெகுவாக வளர்ச்சி கண்டது. யாழ்ப்பாணத்தின் பொருளாதாரத்தை மணிஓடர் பொருளாதாரம் என இடதுசாரிகள் வர்ணிக்கும் அளவிற்கு வளர்ச்சி கண்டிருந்தது.

இவர்களுக்கு புறம்பாக காலனித்துவ ஆட்சியின் கட்டற்ற வர்த்தகம் காரணமாகவும் நகர உருவாக்கம் காரணமாகவும் யாழ் பிரதேசத்தின் வரண்ட தன்மை காரணமாகவும் புதிய புதிய வர்த்தகர் பலர் உருவாகி வடக்கு- கிழக்கில் ஏனையநகரங்களுக்கு சென்று குடியேறினர். வடக்கு- கிழக்கில் ஏனையபிரதேசங்களில் உள்ள சாப்பாட்டுக்கடைகள், சுருட்டுக்கடைகள் என்பவற்றில் பெரும்பாலானவை யாழ்ப்பாணத்தவர்களுக்கு சொந்தமானவையாகவே இருந்தன. இவ்வர்த்தகர்கள் யாழ்ப்பாண அரசாங்க அதிகாரிகளின் செல்வாக்கினைப் பயன்படுத்தி நிலங்களைப் பெற்று வர்த்தக நடவடிக்கைகளுக்கு புறம்பாக விவசாய நடவடிக்கைகளிலும் ஈடுபட்டனர். நெல் அரைக்கும் ஆலைகளையும் உருவாக்கினர். விவசாயத்திற்கென்று தனியாகவும் சிலர் குடிபெயர்நதனர்.

இவ்வாறு குடிபெயர்ந்த அரசாங்க அலுவலர்கள் ஆசிரியர்கள் வர்த்தகர்கள் விவசாயிகள் என்போரின் பெருக்கத்தினால் வடக்கு-கிழக்கின் யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய பிரதேசங்களிலும் யாழ்ப்பாணத்தவர் எனும் சமூகப் பிரிவினர் நிலைபெறத் தொடங்கினர் தங்களுடைய பொருளாதா ஆதிக்கம் அரச நிர்வாக ஆதிக்கம், கல்வியில் மேலோங்கிய நிலை என்பவற்றினால் அங்கும் ஆதிக்கம் வாய்ந்த சக்திகளாக இவர்கள் விளங்கினர் குறிப்பாக முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை நகரப்பகுதிகளில் இவர்களின் ஆதிக்கம் அதிகமாக இருந்தது.

இவர்களுடைய இவ் ஆதிக்கத்தினால் ஏற்கனவே அச்சமூகத்தில் மேல் நிலையில் இருந்தவர்கள் இரண்டாம் நிலைக்கு செல்ல வேண்டி ஏற்பட்டது கல்வி, வர்த்தகம், விவசாயம் அரச உத்தியோகம் என்பற்றில் மேல்நிலையாக்கம் பெறுவதற்கு இவ் யாழ்ப்பாணச் சமூகத்தவர் தடையாக விளங்கினர் இவ் ஆதிக்கம் அரசியல் பிரதிநிதித்துவத்தையும் அபகரித்த போதே யாழ் ஆதிக்கத்திற்கு எதிராக போர்க்குரல் எழுப்பமுற்பட்டனர். இக்குரல் முதன் முதலாக வன்னியிலேயே ஆரம்பமானது. 1956 வரை மன்னார் தொகுதியிலும் வவுனியாதொகுதியிலும் பாராளுமன்ற உறுப்பினர்களாக யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த சி.சிற்றம்பலமும், சி.சுந்தரலிங்கமுமே வந்தனர். இவ் ஆதிகத்தை அகற்றுவதற்காக பிற்காலத்தில் தமிழர் கூட்டணியின் வவுனியா பாராளுமன்ற உறுப்பினர்ாக இருந்த ரி.சிவசிதம்பரம் யாழ் அகற்றும் சங்கம் என்ற பெயரில் ஒரு சங்கத்தையே உருவாக்கினார்.

தமிழரசுக்கட்சி இவ் யாழ் ஆதிக்கம் தொடர்பாக அவ்வப்பிர தேசங்களில் ஒரு நெகிழ்வுப் போக்கை உருவாக்கியது அவ்வப் பிரதேசங்களைப் பூர்வீகமாகக் கொண்டவர்களையே தனது வேட்பாளர்களாக நிறுத்தியது. அங்கு வாழும் யாழ்ப்பாணத்தவர்களை அவ்வேட்பாளருக்கு பின்னால் அணிதிரளுமாறு வேண்டியது இதன்படியே மன்னாரைபூர்வீகமாகக் கொண்ட வீ. அழகக்கோனும், வன்னியை பூர்வீகமாகக் கொண்ட செல்லத்தம்புவும் முறையே மன்னாரினதும் வவுனியாவினதும் பாராளுமன்ற உறுப்பினர்களாக்கப்பட்டனர்.

இவ்வாறு பிரதேசமட்டத்தில் சில சில நெகிழ்வான போக்கினைப் பின் பற்றினாலும் முழுக்கட்சியையும் பொறுத்தவரை சமத்துவமான பங்களிப்பு கொடுக்கப்பட்டதா? இல்லையென்றே கூற வேண்டும். தலைவர் பதவி பட்டிருப்பு பாராளுமன்ற உறுப்பினராக இருந்த மு.இராசமாணிக்கத்திற்கு கொடுக்கப்பட்டபோதும் கட்சியின் முக்கிய பதவியான செயலாளர் பதவியை பொறுத்தவரை ஒரு போதும் பிற பிரதேசங்களுக்கு விட்டுக்கொடுக்கவில்லை. இது தொடர்பாக மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் இராஜதுரைக்கும் அமிர்தலிங்கத் திற்கும் இடையே நீண்டகாலமாக ஒரு பனிப்போரே நடைபெற்றது.

தமிழ்த்தேசிய அரசியலின் அதிகாரம் தமிழரசுக்கட்சி, தமிழர் கூட்டணி என்பனவற்றின் கைகளிலிருந்து இயக்கங்களுக்கு மாறிய போதும் இந்நிலையே தொடர்ந்தது. எல்லா இயக்கங்களிலும் தலைவர்களாக யாழ்ப்பாணத்தவர்களே இருந்தனர். மத்தியகுழுமட்டத்திலும் பெரும்பான்மையானவர்கள் யாழ்ப்பாணத்தவர்களாகவே இருந்தனர். PLOT இயக்கம் மட்டும் இதற்கு சற்று விதிவிலக்காக ஆரம்பத்தில் இருந்தது. தலைவராக உமாமகேஸ்வரன் இருந்தபோதும் அமைப்புச் செயலாளராக மட்டக்களப்பைச்சேர்ந்த வாசுதேவா இருந்தார். அதிஉயர் பீடமாக இருந்த 5 பேரைக்கொண்ட அரசியற் குழுவிலும் மூன்று பேர் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். அதில் இருவர் முஸ்லீம்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஆனால் காலப்போக்கில் தலைமையின் அதிகாரம் முழுவதும் யாழ்பாணத்தவர்களின் கைகளுக்கே வந்தது.



“தமிழர்களைப் பொறுத்தவரை பேரினவாதத்தின் கொடூரமானது அகமுரண்பாடுகளை மறைத்து ஒரு தேசமாக இருப்பது போலக்காட்டலாம். ஆனால் பேரினவாதம் மறைகின்ற போது இவ் அகமுரண்பாடுகள் மேலெழுந்து தேசத்தை சின்னாபின்னமாக்கலாம். அதற்கு முன்னரே தேசத்தின் முழுவளத்தையும் திரட்டி எதிரிக்கு எதிராக போராடுவதையும் இவ் அகமுரண்பாடுகள் சிதைக்கின்றது”

EPRLF வை பொறுத்தவரை முதன்முதலாக மத்திய குழு உருவாக்கப்பட்ட போது ஒருவர் மட்டும் மட்டக்களப்பைச் சேர்ந்தவராக இருந்தார். வன்னியைச் சேர்ந்த எவரும் இருக்கவில்லை. இரண்டாம் முறை மத்தியகுழு உருவாக்கப்பட்டபோது மட்டக்களப்பில் இருந்து இருவரும் வன்னியில் இருந்து ஒருவரும் குழுவில் சேர்க்கப்பட்டனர். வன்னியிலிருந்து சேர்க்கப்பட்டவர்கூட வன்னியை பூர்வீகமாகக் கொண்டவரல்லர். அங்கு குடியேறிய இந்தியவம்சாவளி மக்கள் பிரிவினைச் சேர்ந்தவர்.

ஏனைய அமைப்புகளில் இந்நிலை கூட பெரியளவிற்கு இல்லை. TELO வில் மட்டும் சிறீசபாரத்தினத்திற்கு பின்னர் விடத்தல் தீவைச்சேர்ந்த அடைக்கலநாதன் சிறிது காலம் தலைவராக இருந்தார். தற்போது அவர் பாராளுமன்ற உறுப்பினராக உள்ளபோதும் தீர்மானம் எடுக்கும் செய்முறையில் பெரிய பாத்திரம் அவருக்கு இருப்பதாகத் தெரியவில்லை.

ஒரு தேசம் உருவாக்கம் சிறப்பாக வளர்வதற்கு அகமுரண்பாடுகள் தீர்க்கப்படுவது, குறைந்தபட்சம் தீர்க்கப்படுவதற்கான முயற்சிகளை முன்னெடுப்பது, தீர்க்கப்படும் என்பதற்கான நம்பிக்கைகளைக் கொடுப்பது மிகமிக அவசியம். இவை வெறுமனே வாயளவிலோ எழுத்தளவிலோ இருப்பதில் எந்தவித பிரயோசனமும் இல்லை. நடைமுறையில் அதற்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவது அவசியம். குறிப்பாக கூறுவதாயின் தமிழ்த்தேசிய அரசியலும், அதன் அமைப்புத்துறையிலும் இவை அடக்கப்பட்டிருத்தல் அவசியம் தமிழ்த்தேசிய அரசியலில் எனக் கூறும் போது அதன் அரசியல் திட்டத்தில் இவை தெளிவாக உள்ளடக்கப் பட்டிருத்தல் வேண்டும். அமைப்புத் துறையில் அகமுர ண்பாடுகளினால் பாதிக்கப்பட்டு ஓர நிலைக்கு தள்ளப்பட்ட பிரிவினர் சமத்துவமாக பங்கு பற்றுவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

தமிழ்த்தேச போராட்டத்தில் இவைபோதியளவு உள்ளடக்கப்பட்டிருக்கின்றதா? ஆம் என்று உறுதியாக கூறுவதற்கு நம்பிக்கை தரக்கூடியதாக போதியளவு இல்லை. ஒருதேசத்தில் அக முரண்பாடுகள் கூர்மையாக வளர்ச்சி பெற்று மக்கள் பிளவு பட்டிருந்தால் அவை ஒரு முழுமை பெற்ற தேசமாக வளர்ச்சியடைவது கடினம். தமிழர்களைப் பொறுத்தவரை பேரினவாதத்தின் கொடூரமானது அகமுரண்பாடுகளை மறைத்து ஒரு தேசமாக இருப்பதுபோலக்காட்டலாம். ஆனால் பேரினவாதம் மறைகின்ற போது இவ் அகமுரண்பாடுகள் மேலெழுந்து தேசத்தை சின்னா பின்னமாக்கலாம். அதற்கு முன்னரே தேசத்தின் முழுவளத்தையும் திரட்டி எதிரிக்கு எதிராக போராடுவதையும் இவ் அகமுரண்பாடுகள் சிதைக்கின்றது.

ஒரு ஒடுக்குமுறைக்கு உட்பட்ட தேசத்தைபொறுத்தவரை அதற்கு இரண்டுபாரிய கடமைகள் உள்ளன: ஒன்று தேசப்போரட்டத்தை நடாத்துவது மற்றையது தேசஅரசைக் கட்டியெழுப்புவது. இவ்விரண்டு கடமைகளை நிறைவேற்றுவதற்கும் அக முரண்பாடுகளைத் தீர்ப்பது குறைந்தபட்சம் ஒருசமநிலையைப் பேணுவது அவசியமாகும் தமிழ் ஆதிக்க சக்திகளிடம் பேரினவாதத்தின் கொடூரத்தைக் காட்டி அகமுரண்பாடுகளை உறை யவைத்து ஓரத்தில் உள்ள சக்திகளைப்பயன்படுத்துவது. பின்னர் அவர்களை அப்படியே கைவிட்டுவிட்டு தமது ஆதிக்கத்தைநலைநிறுத்துவது போன்ற கருத்துகள் மேலோங்கியுள்ளன. இதனாலேயே வியப்புணர்வுகள் அகமுரண்பாடுகள் பற்றி கேள்வியெழுப்பும் போதெல்லாம் தமிழர்கள் ஒற்றுமையைச் சிதைக்கின்றார்கள், போராட்டத்தைப் பலவீனப்படுத்துகின்றார்கள் எனக் கூக்குரலிடுகின்றனர். ஒரு கட்டத்தில் தமிழ்த்தேசத்துரோகிகள் என்ற முத்திரை கூட அவர்களை நோக்கி குத்தப்படுகின்றது.

இது மிக அபாயகரமான போக்காகும். இவர்கள் எல்லோரும் தேசவிடுதலையுடன் தேச அரசியலின் கடமை முடிந்துவிடுகின்றது எனக் கருதப்பார்க்கின்றார்கள். அதற்கப்பால் தேசஅரசைக்கட்டியெழுப்புவதற்கு கூட அகமுரண்பாடுகள் தீர்க்கப்பட வேண்டும் என இவர்கள் நினைப்பதில்லை.

இந்த வகையில் அகமுரண்பாட்டின் பிரதான கூறான யாழ் ஆதிக்கத்தை இல்லாமல் செய்தல் என்பது தேச அரசியலைப் பொறுத்தவரை மிகவும் முக்கியமானதாகின்றது. இனியாவது இதனை பரிசீலனைக்கு எடுக்கும் முயற்சிகளை தொடங்கியாக வேண்டும். தமிழ்த்தேசத்தின் அரசியல் அமைப்புத்துறை என்பன மீளாய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும். தேச அரசியலின் சகல அம்சங்களிலும் யாழ் ஆதிக்கம் இல்லாதவாறு சுத்திகரிக்கப்படவேண்டும். யாழ் ஆதிக்கத்தைநிலை நிறுத்தும் பூர்வீகநியாயப்பாடுகள் இல்லாமலாக்க வேண்டும். அமைப்புத் துறையில் சமத்துவமான பங்களிப்பு உத்தர வாதப்படுத்தப்பட வேண்டும். இதனூடாக கிரிசாந்திக்காக மட்டுமல்ல கோணேஸ்வரிக்காவும் உலகம் கிடுகிடுக்க வேண்டும்.

"சுமித்ரா ராஹுபந்த" சிங்கள பெண் இலக்கியவாதிகளில் முற்போக்கு சிந்தனைமிக்கவராவார். சிங்கள சமுகத்தில் பெண்கள் தொடர்பான பிரச்சினைகளை எழுதுகின்றார். தொலைக்காட்சி நாடகங்கள், சினிமா இவரது நாவல்களைத் தழுவி தயாரிக்கப்பட்டிருக்கின்றன. "புழுதுருனு", "இடிபஹன", "சுர அசுர", "உதாணய", "கெளிமடல" என்பன இவரால் தயாரிக்கப்பட்ட சித்திரங்களாகும். அரச நிர்வாக சேவையில் தொழில் ரீதியாக ஈடுபட்டிருந்தாலும் அவர் தொடர்ந்து எழுதிக்கொண்டே இருக்கின்றார். அவரது இலக்கிய வாழ்வும் தொடர்கின்றது...



# இலக்கியம் செழிக்க தரமான விமர்சனம் வேண்டும்

**உண்மையாகவே திறந்த பொருளாதாரக் கொள்கையால் இலக்கியத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. குழந்தை இலக்கியம் பாதிக்கப்பட்டது. குழந்தைகளிடமிருந்து சிறந்த குழந்தை இலக்கியங்கள் அன்னியப்படுத் தப்பட்டது. நாம் பாடசாலைக்குச் செல்லும் காலங்களில் மேலதிகமான நூல்களை வாசிப்போம். இதனூடாகவே வாசிப்பில் நாட்டம் ஏற்பட்டது. எங்களுடைய இளைமைக் காலத்தில் வாசிக்க எவ்வளவு நூல்கள் இருந்தன. மேல் வகுப்புகளில் மாத்திரம் அல்ல கீழ் வகுப்புகளிலும் வாசிக்க தரமான புத்தகங்கள் இருந்தன. இன்று அந்த நிலைமை முழுமையாக மாறிவிட்டது.**

**தாங்கள் இலக்கியத்துறைக்கு எவ்வாறு வந்தீர்கள்?**

நான் சோவியத் கலாச்சார நிலையத்தில் தொழில் செய்யும் காலகட்டத்திலேயே எழுதத் தொடங்கினேன். சோவியத் கலாச்சார நிலையத்தில் மொழி பெயர்ப்பாளராக கடமை புரிந்தேன். சோவியத்து இலக்கியங்களை சிங்களத்தில் மொழி பெயர்த்தேன். எனது இலக்கிய வாழ்வு இங்கிருந்தே தொடங்கியது. ஆரம்பத்தில் சிறு கதைகள் கவிதைகளும் பின்பு நாவல்களும் எழுதத் தொடங்கினேன்.

**சிங்கள இலக்கியத்தில் நாவல்கள் வெளிவருவது அதிகமாக இருந்தாலும் உள்ளடக்கத்தில் இன்னும் வளர்ச்சி பெறவில்லை எனும் கருத்து நிலவுகிறது. இக் கருத்தினை ஏற்றுக் கொள்கின்றீர்களா?**

இல்லை, நான் அந்தக் கருத்தினை நிராகரிக்கின்றேன். சிங்கள இலக்கியம் உள்ளடக்கத்திலும் உருவகத்திலும் வளர்ச்சி பெற வில்லை என்பதுதான் உண்மை. சிறந்த இலக்கியங்களை வாசிக்கும் நிலைமை இல்லை. சிறந்த முறையான விமர்சனமின்மையே இதற்கு காரணமாகும். விமர்சகர்கள் இன்றும் பழைய இலக்கியவாதிகளைப் பற்றியே கதைக்கின்றனர். எழுத்தாளர்கள் எழுதிக்கொண்டே இருக்கின்றார்கள். அதைப் பற்றி எவரும் கவனத்திலெடுப்பதில்லை. இன்றும் முதுகு சொறியும் பழக்கம் எம் எழுத்தாளர்களை விட்டுப் போகவில்லை.

**இதற்கு காரணம் என்ன?**

எங்களிடம் உள்ள பலவீனம் தான் இதற்கு காரணம். எதனையும் மதிப்பீடு செய்யும் வழக்கம் இல்லை. மதிப்பீடு செய்யாத காரணத்தால் இலக்கியம் தொடர்பாக சரியான நிலைப்பாட்டிற்கு வர முடியாமல் இருக்கின்றனர். அது மாத்திரமன்று திறந்த பொருளாதாரக் கொள்கை ஆரம்பமானதுடன் சிங்கள தரமான இலக்கியத்தில் பின்னடைவு ஏற்பட்டது.

**முன்னை நாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்தன இலக்கியத்தால் பயன் இல்லையென பிரசித்தமாக கூறியிருக்கிறார். இது தொடர்பாக தாங்கள் என்ன கருதுகின்றீர்கள்?**

உண்மையாகவே திறந்த பொருளாதாரக் கொள்கையால் இலக்கியத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. குழந்தை இலக்கியம் பாதிக்கப்பட்டது. குழந்தைகளிடமிருந்து சிறந்த குழந்தை இலக்கியங்கள் அன்னியப்படுத்தப்பட்டது. நாம் பாடசாலைக்குச் செல்லும் காலங்களில் மேலதிகமான நூல்களை வாசிப்போம். இதனூடாகவே வாசிப்பில் நாட்டம் ஏற்பட்டது. எங்களுடைய இளைமைக் காலத்தில் வாசிக்க எவ்வளவு நூல்கள் இருந்தன. மேல் வகுப்புகளில் மாத்திரம் அல்ல கீழ் வகுப்புகளிலும் வாசிக்க தரமான புத்தகங்கள் இருந்தன. இன்று அந்த நிலைமை முழுமையாக மாறிவிட்டது. மேலதிக வாசிப்பு என்பது தேவையற்ற தொன்றாகி விட்டது. இன்று பிள்ளைகள் உளவியல் ரீதியாக வளர்க்கப்படுவதில்லை. இதனால் வாசிப்பு தொடர்பான கவனமும் பிள்ளைகள் இடத்து இல்லை. திறந்த பொருளாதாரக் கொள்கை பணம் தேடும் நிலையை உருவாக்கியுள்ளது. அது ஒன்று தான் இன்று எஞ்சியுள்ளது.

**இதனை முதலாளித்துவ அரசியல் வேண்டுமென செய்தசதியெனக் கூறுகின்றனர். இது சரியா?**

எங்களுடைய அரசியல்வாதிகளுக்கு இப்படிச் சதி செய்ய மூளை இருக்கிறதா என சிந்திக்க வேண்டி இருக்கிறது.

**17 வருட ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியை மக்கள் தமது முழு சக்தியையும் பாவித்து 1994ல் கவிழ்த்து பொது சன ஐக்கிய முன்னணியை ஆட்சிபீடம் ஏற்றினர். பொதுசன ஐக்கிய முன்னணியின் வருகையின் பின் இலக்கியத்தில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டதா?**

மக்களின் எதிர்பார்ப்புகள் நிறைவேறவில்லை என்பதனை நான் ஏற்றுக் கொள்கின்றேன். இலக்கித்துறையில் வால்பிடித்த இலக்கிய வாதிகளுக்கு வாய்ப்பு அளித்ததை தவிர வேறு எதையும் செய்யவில்லை. கலை இலக்கியவாதிகளை ஊக்குவிக்க வேண்டியது அரசின் கடமையாகும். தரமான ஆக்கபூர்வமான கலை இலக்கியம் படைக்கப்பட வேண்டும். கொள்கை ரீதியாக இலக்கியம் வளர்ச்சி பெற வில்லை. தனிநபர் வளர்ச்சியே எற்பட்டிருக்கின்றது.

**இலக்கியத்தின் முக்கிய குறிக்கோளாக எதைக் கருதுகின்றீர்கள்?** மனித விழிப்புணர்ச்சியை இலக்கித்தில் ஏற்படுத்த வேண்டும். இதற்கு ரஷ்ய இலக்கித்தை முன்னுதாரணமாகக் கொள்ளலாம். இவ் விழிப்புணர்ச்சியின் கீழ் சமுக அறிவூட்டலும் நடைபெற வேண்டும். இதனால் யதார்த்தத்தையும் விளங்கி கொள்ள முடிகின்றது.

**இவ்வாறான விழிப்புணர்வு சிங்கள இலக்கிய வரலாற்றில் ஏற்படுமா?**

இவ்வாறான நிகழ்வுகள் நடைபெற்று இருக்கின்றன. பியதாச சிரிசேன போன்ற சிங்கள இலக்கிய வாதிகள் தமது வாழ்க்கையை இலக்கியத்திற்காகவே அர்ப்பணித்தனர். சமூகத்தில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த மாட்டின் விக்கிரமசிங்க பல முன் முயற்சிகளை மேற்கொண்டார். சரத் சந்திரவின் யுகம் சிறப்புமிக்கதாகும். ஈவாரண வீர. எச்.ஏ. செனவிரத்ன போன்ற எழுத்தாளர்கள் இலக்கியத்திற்காக முழுமையாக உழைத்தனர். ஆனால் இவ்விலக்கியங்கள் சமூகத்தில் உயர்ந்து நிற்க முடியவில்லை. இதற்கு காரணம் விமர் சனக்கலை வளர்ச்சி பெறாததாகும்.

**தாங்கள் எழுத்தாளருடைய வாழ்வை கருத்தில் கொண்டா அல்லது அவருடைய எழுத்தைக் கருத்தில் கொண்டா இக்கருத்தை முன்வைக் கின்றீர்கள்?**

நான் மேற்கூறியவர்களின் அனைத்து நூல்களையும் வாசித்துள்ளேன். அவர்களின் நூல்களில் வாழ்வியல், சமூக விவரணங்களையே காணக்கூடியதாய் இருக்கின்றது. ஆனால் இவ் இலக்கியங்கள் சமூக அடித்தளத்தினை எட்டவில்லை.

**சிங்கள இலக்கியத்தில் பெண்ணிலைவாதம் குறித்து பேசப்படுவது குறைவாகவே உள்ளது. அதற்கு காரணம் என்ன?**

எமது கலாசாரத் தன்மையோடு இதனை நோக்கும் போது இலக்கியத் துறையில் உள்ள சுதந்திரம் மிகக் குறைவாகும். பெண் இலக்கியவாதிகளை சமூகம் ஊக்குவிப்பதில்லை. பெண்ணிலைவாத இலக்கியம் தொடர்பாக கவனத்தில் கொள்வதும் இல்லை. குடும்பத்திற்குள்ளும் இவ்வாறான நிலைமையே இருக்கின்றது. இதனை நான் எனது அனுபவத்தில் இருந்தே கூறுகின்றேன். நான் தொழில் செய்யும் இடத்திலும் இலக்கியவாதியான என்னை மிகவும் குறைத்தே மதிப்பிடுகின்றனர். சிலர் இன்னும் நீங்கள் என்ன எழுதுகின்றீர்கள் எனக் கேட்கின்றனர். அதனால் நாம் மேலும் பின் தள்ளப்படுகின்றோம். சிலர் நீங்கள் இன்னும் எழுதுகின்றீர்களா எனக் கேட்கின்றார்கள். எழுதுவது தவறு என அவர்கள் புரிந்து கொண்டுள்ளனர். மேலும் சிலர் எமது படைப்புகளையே அவமானப்படுத்துகின்றனர். பெண் என்ற காரணத்தினால் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. பலபழிச்சொல்லுக்கு இலக்காக நேரிடுகிறது. எழுத்துலகிலும் ஆண்களின் அடக்கு முறைக்கு பெண்கள் உள்ளாக்கப்படுகின்றனர்.

**இலங்கையில் உள்ள பெண்ணிலைவாத அமைப்புகள் பற்றி என்ன கருதுகின்றீர்கள்?**

சிறு சிறு அமைப்புகளாக இயங்குகின்றன. சமூகத்தில் சில பிரச்சினைகளைத் தொட்டு பார்க்கின்றனர். சிலவற்றிற்கு தீர்வு கிடைக்கின்றது. சிலவற்றிற்கு கிடைக்காமலே போகின்றது. என்னென்ன பிரச்சினைகள் இருந்தாலும் பெண்ணிலைவாத அமைப்பிற்குள் விழிப்புணர்வு இருக்க வேண்டும். அடிமட்டத்திலிருந்து கட்டியெழுப்பக்கூடிய அமைப்புகள் உருவாக வேண்டும். எதவும் இல்லாமல் இருப்பதை விட ஏதாவது இருப்பது மேல்...

**நடைபெறும் யுத்தம் தொடர்பாக தங்களது நிலைப்பாடு?**

இதற்கு வரலாற்று ரீதியான காரணங்கள் பல உண்டு. இப்போது இதை எப்படி தீர்ப்பது என்பதே பிரச்சினை, அரசியல் ரீதியாகவே இது தீர்க்கப்பட வேண்டும்.

**இனப்பிரச்சினையை உள்ளடக்கிய ஆழ்ந்த சிங்கள இலக்கியம் உருவாக்கப்படவில்லை. தங்களின் பதில்?**

இது தொடர்பாக சரியான விமர்சனத்தை முன்வைக்க முடியாது. ஆனால் எம்மால் முடியுமானவரை இனவாதத்திற்கு எதிரான கருத்துக்களை முன்வைத்துள்ளோம். நான் "சுரஅசுர" நூலில் இப்பிரச்சினையை கருவாகக் கொண்டே எழுதினேன். ஆனால் ஒன்று சிங்கள எழுத்தாளர்கள் தென்பகுதி தமிழர்களின் பிரச்சினையை உள்ளடக்கியே அதிகம் எழுதுகின்றனர். அது எமது தவறல்ல, எமக்கு அனுபவமின்மையே இதற்கு காரணமாகும். நான் "சுர அசுர" வை எழுத முன்பு எனது நண்பரான பிரிகேடியர் திலக்பொன்னம் பெருவிடம்" ஒரு உதவி கேட்டேன். அவர் அப்பொழுது யாழ்ப்பாணத்தில் கடமையில் இருந்தார். நான் திலக்கிடம் தமிழ் மக்கள் பிரச்சினை தொடர்பாக நாவலொன்று எழுதவேண்டும். அதனால் என்னை யாழ்ப்பாணத்திற்கு அழைத்துச் செல்லுங்கள் என்றேன். திலக் பதில் தரவில்லை. சிரித்தார். வேறு எதுவும் பேசவில்லை. அன்று அவ்வளவு தான். மீண்டும் ஒருநாள் திலக்கை சந்திக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அப்போது நான் அன்று ஏன் சிரித்தீர்கள் திலக் என வினவினேன். அதற்கு அவர் அளித்த பதில் "சுமித்திரா படைப்பாளி ஒருவருக்கு விளங்கக்கூடிய அளவிற்கு இவ்யுத்தம் இலகுவானதல்ல" திலக் கூறியது சரியெனக் கருதுகின்றேன்.

நேர்காணல்
மஞ்சுல வெடிவர்தன

## காம் டேவிட் உச்சி மாநாடு

## பலஸ்தீனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக

# கிளின்டன் தலைமையில் மற்றொரு பிரயத்தனம்!

அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டனின் பதவிக் காலம் எதிர்வரும் ஜனவரியுடன் முடிவுக்கு வருகின்றது. தனது பதவிக்காலத்தில் செய்த மிகப் பெரிய சாதனையாக மத்திய- கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு கிளின்டன் பகிரதப் பிரயத்தனங்களை இப்போது மேற்கொண்டாலும் கூட, மத்திய கிழக்குச் சமாதானம் என்பது அடி ஏற முழம் சறுக்கும் விவகார மாகவே இருக்கின்றது. அவரது பதவிக் காலத்தில். அடுத்து வரப் போகும் அமெரிக்க ஜனாதிபதிகளால் கூட இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியுமா என்பது தான் இப்போது எழும் கேள்வி! அரை நூற்றாண்டு காலமாகப் பல்வேறு வடிவங்களில் வளர்ச்சியடைந்து வந்துள்ள இந்தப் பிரச்சினை, இப்போது பேச்சுவார்த்தை மேசையில் தீர்க்க முடியாத ஒரு கட்டத்துக்கு வளர்ச்சியடைந்து விட்டதாகவே வரலாற்று ஆய்வாளர்கள் பலரும் கருதுகின்றார்கள்.

பலஸ்தீனப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ஏழுவருடங்களுக்குப் பின்னர் மீண்டும் காம் டேவிட்டில் உச்சி மாநாடு கூட்டப்பட்டுள்ள அதே வேளையில், மத்திய கிழக்கில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்த முடியும் என்ற நம்பிக்கை மங்கிவருவதைத்தான் காணமுடிகின்றது. தொடர்ச்சியாக பூட்டிய அறையில் ஒருவார காலமாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் பின்னர் பேச்சுவார்த்தைகளுக்கு மத்தியஸ்த்தம் செய்யும் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் வெளியிட்டுள்ள தகவல் கூட பெருமளவுக்கு நம்பிக்கை தருவதாக இருக்கவில்லை.

"பேச்சுவார்த்தைகளில் ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஆனால் பெறுபேறுகள் எப்படி அமையும் என்பது நிச்சயமற்றதாகவே உள்ளது" என்றே கிளின்டன் தெரிவித்திருக் கின்றார்.

இது மத்திய- கிழக்கு சமாதானம் தொடர்பாக கேள்விக் குறிகளைத்தான் எழுப்பியுள்ளது. கிளின்டன் மட்டுமன்றி இந்தப் பேச்சுக்களில் சம்பந்தப்பட்டுள்ள அனைத்துத் தரப்பினருமே இதேபோன்ற சந்தேகத்தைத்தான் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். அந்தளவுக்குப் பேச்சுவார்த்தைகள் இறுகிப்போயுள்ளன. பேச்சுவார்த்தைகளில் ரகஸியத் தன்மையைப் பேணுவதற்காக பத்திரிகையாளர்கள் எவரும் இதனைப் பார்வையிடுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. பேச்சுக்களில் கலந்துகொள்ளும் பிரதிநிதிகள் கூட, அது தொடர்பாகக் கருத்து, தெரிவிப்பதற்கு தயங்கு கிறார்கள். இருந்த போதிலும் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக கசியும் தகவல்கள் உற்சாகமளிப்பதாக இல்லை.

இவ்வருட இறுதிக்குள் சுதந்திர பலஸ்தீனத்தைப் பிரகடனம் செய்வதில் பலஸ்தீன விடுதலை இயக்கம் உறுதியாக இருக்கின்றது என அவ் இயக்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்திருக்கின்றார்.

காம்டேவிட் சமாதான முயற்சிகள் பிசுபிசுத்துச் செல்லும் நிலையையே இவரது இந்த அறிவிப்பு உணர்த்தியிருக்கின்றது. இஸ்ரேலுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகள் நெருக்கடியான நிலையைச் சந்தித்துள்ளதாகவும், அதனால் பலஸ்தீனர்கள் சுதந்திர அரசைப் பிரகடனம் செய்யும் நிலைக்குச் செல்வது நிச்சயம் எனவும் இரு வாரங்களுக்கு முன்னர் பலஸ்தீன விடுதலை இயக்கத்தின் மத்திய குழு உறுப்பினர்களிடம் உரை யாற்றுகையில் அதன் தலைவர் யாசிர் அரபாத் தெரிவித்திருந்தார். இந்த அறிவிப்பை வெளியிட்ட பின்னரே அவர் காம்டேவிட்டுக்குச் சமாதானப் பேச்சுக்களுக்காக விமானமேறினார். அதாவது ஒருவித நம்பிக்கையற்ற நிலையிலேயே அரபாத் இந்தப் பேச்சுக்களில் கலந்துகொள்கின்றார் என்பதே இதன் மூலம் வெளிப்படுகின்றது.

செப்டம்பர் மாதம் 13ம் திகதிக்கு முன்னதாக பலஸ்தினப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டும். இல்லையென்றால் பலஸ்தின அரசு பிரகடனம் செய்வது தவிர்க்க முடியாததாகிவிடும் என யாசிர் அரபாத் அறிவித்திருந்ததை யடுத்தே, காம்டேவிட் உச்சிமாநாடு அவசரமாகக் கூட்டப்பட்டுள்ளது. இந்தக் கால வரையறைக்குள் இரு தரப்புக்கும் இடையே காணப்படும் பாரிய கருத்து வேறுபாடுகளுக்குத் தீர்வு காணப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியிருந்த கிளின்டன், இரு தரப்பு முரண் பாடுகளும் அதிகாரிகள் மட்டத்தில் தீர்க்கப்பட வேண்டிய கட்டத்தை கடந்துவிட்டது என்பதையும் சுட்டிக் காட்டியிருந்தார். இஸ்ரேலியப் பிரதமர் எகுட் பராக்கும், பலஸ்தீனத் தலைவர் யசிர் அரபாத்தும் மேற்கொள்ளும் நேரடிப் பேச்சுக்களின் மூலமாக மாத்திரமே வேறுபாடுகளைக் களைய முடியும் என்பதையும் அவர் சுட்டிக்காட்டியிருந்தார். கிளின்டன் குறிப்பட்டது போல இந்த இரு தரப்பினருக்கும் இடையேயான முரண்பாடுகள் தீவிரமடைந்தே காணப்படுகின்றது. கிளின்டனால் இதனைத் தீர்க்க முடியுமா என்பதே இன்று எழுகின்ற கேள்வி.

முரண்பாடுகள் தீவிரமடைந்துள்ள நிலையில், இரு தரப்பினருக்கும் உதவுவதற்காக பில் கிளின்டனும் காம்டேவிட்டில் முகாமமைத்திருந்த போதிலும், கொந்தளிப்பான ஒரு சூழ்நிலையிலேயே பேச்சுக்கள் இடம்பெறுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இரு தரப்பினருமே உள்ளூரில் எதிர்நோக்கும் பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே இந்தப் பேச்சுக்களில் கலந்துகொள்கின்றார்கள். இஸ்ரேல் பிரதமர் பராக் இப்பேச்சுக்களில் கலந்துகொள்ளப் போகின்றார் என்ற செய்தி வெளியானவுடனேயே அந்நாட்டின் உள்துறை அமைச்சர் தனது பதவியைத் துறந்தார். இவர் மட்டுமன்றி இஸ்ரேலின் ஏனைய எதிர்க் கட்சிகள் கூட பலஸ்தீனர்களுக்கு எந்தவிதமான அதிகபட்ச சலுகைகளும் வழங்கக் கூடாது என வலியுறுத்தி வருகின்றன.

அதேபோல பலஸ்தீன தலைவர்கள் கூட இந்தப் பேச்சுக்களில் கலந்துகொண்டு அரபாத் எந்தவித விட்டுக்கொடுப்புக்களையும் செய்யக் கூடாது என்பதை வலியுறுத்தியிருக்கின்றனர். அவர்களைப் பொறுத்தவரையில், இவ்வருட இறுதிக்குள் சுயாதீன பலஸ்தீனத்தைப் பிரகடனம் செய்வது ஒன்றுதான் அவர்களது குறி

ஆக இரு தரப்பினரும் நம்பிக்கையற்றவர்களாக- வெறுமனே பில் கிளின்டனில் நம்பிக்கை வைத்தவர்களாகவே பேச்சுவார்த்தை மேசைகளில் அமர்ந்திருக்கின்றார்கள். தன் மீதான இந்த நம்பிக்கையைக் காப்பாற்றுவதற்கு கிளின்டன் படாதபாடு படுகின்றார் என்பது உண்மை தான்! ஆனால் பலன்...?

காம்டேவிட்டில் நான்காவது நாள் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமான அதேவேளையில், மேற்குப் பள்ளத்தாக்கு நகரான ஹெரோனில் பலஸதீனர்களுக்கும் குடிபெயர்ந்த யூதர்களுக்கும் இடையே வன்முறைகள் வெடித்து இரு தரப்பினரும் வீதிகளில் மோதிக் கொண்டார்கள். இதனைத் தொடர்ந்து இஸ்ரேலின் ரெல்அவிவ் நகரில் பிரதமர் பராக்குக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் பெருளவுக்கு இடம்பெற்றுள்ளன. பலஸ்தீனர்களுடன் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு மக்கள் மத்தியில் காணப்படும் எதிர்ப்பைத்தான் இந்த ஆர்ப்பாட்டங்கள் வெளிப்படுத்தின.

காம்டேவிட் மாநாட்டில் ஏதாவது இணக்கம் ஏற்பட்டால் கூட அதனைச் செயற்படுத்த முடியாத சூழ்நிலை காணப்படுவதைத்தான் இச் சம்பவங்கள் உணர்த்துகின்றன. எந்த ஒரு விடயத்திலும் விட்டுக்கொடுத்துச் செல்வது என்பது இரு தரப்புக்குமே இயலாத காரியம். உள்நாட்டில் ஏற்படக் கூடிய அரசியல் பிரச்சினை களையிட்டு இரு தரப்பும் கவனமாக இருக்க வேண்டியுள்ளது. மத்திய கிழக்கில் சமாதானம் என்ற பொதுவான எண்ணக்கருவை விட உள்ளூரிலிருந்து தமக்கு வரக்கூடிய அழுத்தங்களைக் கவனத்திற் கொண்டே இரு தரப்பினரும் காய்களை நகர்த்துகின்றார்கள்.

அரை நூற்றாண்டுக்கும் மேலாகத் தொடரும் இந்தப் பிரச் சினையை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமாயின் எக்கு பராக்கும், யசிர் அர்பாத்தும் தீர்வு காணவேண்டிய பிரச்சினைகள் மிகவும் சிக்கலானவை. அவற்றில் முக்கியமானவை இவைதான்;

1.பலஸ்தீன தனிநாட்டுக் கோரிக்கை.
2. எல்லைப் பிரச்சினைக்கான தீர்வு.
3. ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காசா மற்றும்- மேற்குப் பள்ளத்தாக்கில் அமைக்கப்பட்டுள்ள யூதக் குடி யிருப்புக்களின் எதிர்காலம்.
4. பலஸ்தீன அகதிகளைத் திருப்பி அனுப்புதல்.
5. இரு தரப்பினரும் தமது எதிர்காலத் தலைநகர் என அறிவித்துள்ள ஜெரூசலத்தின் நிலை .

இரு தரப்பினரும் இடையே எவ்வகையிலும் இணக்கம் ஒன்றை ஏற்படுத்த முடியாதசர்ச்சைக்குரிய விடயங்களாக இவை உள்ளன. இவற்றில் சமாதானத்தை ஏற்படுத்துவ தென்பது அமெரிக்காவைப் பொறுத்தவரையில் ஒரு பகீரதப் பிரயத்தனமான முயற்சியாகவே இருக்கும் என்பது எதிர்பார்க்கக் கூடியதுதான். இந்த நிலையில்தான் அமெரிக்காவால் முன்வைக்கப்பட்ட யோசனை ஒன்று இஸ்ரேலுக்குச் சார்பானதாக உள்ளது எனக் கூறி யசிர் அரபாத் பேச்சுவார்த்தை களிலிருந்து வெளிநடப்புச் செய்ய முயன்றுள்ளார். இவரைச் சமாதானப் படுத்தி மீண்டும் பேச்சுவார்த்தை மேசையில் அமர்த்தும் பொறுப்பும் கிளின்டனிடமே இருந்தது.

செப்டம்பர் 13ம் திகதிக்கு முன் சமாதான உடன்படிக்கை ஒன்று ஏற்படுத்தப்படாவிட்டால் ஜெரூசலமைத் தலைநகராகக் கொண்ட பலஸ்தீனம் பிரகடனம் செய்யப்படும் என்ற அரபாத்தின் எச்சரிக்கையைத் தொடர்ந்தே காம்டேவிட் மாநாடு கிளின்டனால் அவசரமாகக் கூட்டப்பட்டது. இது பலஸ்தீனர்களால் விடுக்கப்பட்ட ஒரு எச்சரிக்கை. அதேவேளையில், அவ்வாறு பலஸ்தீனம் பிரகடனம் செய்யப்பட்டால் தம்மால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள காசா மற்றும் மேற்குப் பள்ளத்தாக்குப் பகுதிகள் தமது நாட்டுடன் பலவந்தமாக இணைக்கப்படும் என இஸ்ரேல் பதிலளித்துள்ளது.அவ்வாறு இணைக்கப்பட்டால் அப்பகுதியில் வாழ்ந்து வரும் பலஸ்தினர்களின் எதிர்காலம் மிகவும் மோசமானதாகவும் நிச்சயமற்றதாகவும் மாறிவிடும். இந்த இரு அறிவிப்பக்களும் மத்திய கிழக்கில் பெரும் பதட்ட நிலையைத் தோற்று விக்க அதனைத் தணிப்பதற்காக கிளின்டனால் எடுக்கப்பட்ட முயற்சி தான் தற்போதைய காம்டேவிட் மாநாடு.

1967ம் ஆண்டின் மேற்காசிய யுத்தத்தின் போது இஸ்ரேல் கைப்பற்றிய கிழக்கு ஜெரூசலம் உட்பட பலஸ்தீனர்கள் வசிக்கும் பகுதிகள் அனைத்துமே பலஸ்தின நாட்டுக்குள் உள்ளடக்கப்பட வேண்டும் என சமீபத்தில் கூடிய பலஸ்தின விடுதலை இயக்கத்தின் மத்திய குழு தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியிருந்தது. மத்திய கிழக்கில் அமைதியின்மையைத் தோற்று வித்துள்ள இந்தப் பலஸ்தினப் பிரச் சினைக்குஅடிப்படையாகவுள்ளது ஜெரூசலம்தான். ஆக்கிரமிக்கப்பட்ட காசா மற்றும் மேற்குப் பள்ளத்தாக்குப் பகுதிகளிலிருந்து முழுமையாகவே இஸ்ரேல் வெளியேறிவிட வேண்டும் என ஐ.நா. சபையின் தீர்மானம் ஒன்று கூட கேட்டுக்கொண்டிருந்தது. இருந்த போதிலும் கிழக்கு ஜெரூசலம் உட்பட பல பகுதிகளை தன்வசம் வைத்திருப்பதற்கே இஸ்ரேல் இணைத்துக் கொண்டுள்ளது. இது பிரச்சினைகளை மேலும் சிக்கலாக்கியது.

இந்தச் சிக்கலுக்குத் தீர்வாக அமெரிக்காவும், இஸ்ரேலும் கூட்டாக முன்வைத்துள்ள திட்டம் பலஸ்தீனர்களால் ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. இத்திட்டம் பின்வரும் அம்சங்களை உள்ளடக்கியதாக இருக்கின்றது.

1. காசாவையும் மேற்குப் பள்ளத்தாக்கின் தொண்ணூறு வீதமான பகுதியையும் உள்ளடக்கிய ஒரு பலஸ்தீன அரசு வழங்கப்படும்.

2. ஜெரூசலம் மற்றும் ஆக்கிர மிக்கப்பட்ட அரபுப் பகுதிகள் மீதான இறைமையை இஸ்ரேல் கொண்டிருக்கும்.


3. ஜெரூசலம் நகரில் அடையாளத்துக்கான பலஸ்தீனர்கள் நிலைகொண்டிருக்க அனுமதிக்கப்படுவார்கள்.

4. பலஸ்தீன அகதிகள் இஸ்ரே லிலுள்ள தமது தாயகத்துக்குத் திரும்புவதற்கான தமது உரிமையை இழப்பார்கள்.

5. புதிதாக வரையறுக்கப்படும் பகுதிகளில் சில அகதிகள் குடும்பங்களுடன் இணைவதற்காக குடியமர்வதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.

ஆனால், இந்தத் தீர்வை ஏற்பதன் மூலம் 1967ஆம் ஆண்டு இஸ்ரேல் கைப்பற்றிய அரபுப் பகுதிகள் மீதான உரிமையை யசிர் அரபாத் விட்டுக்கொடுக்க முன்வர வேண்டியிருக்கும். அத்துடன் இது ஐ.நா.வின் 242வது பிரகடனத்துக்கும் முரணானதாகும். இந்த ஐ.நா. சபையின் பிரகடனம் ஆக்கிரமிக்கப்பட்ட அரபுப் பகுதிகளிலிருந்து இஸ்ரேல் படைகள் வெறியேற வேண்டும் என கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. புதன் கிழமை ஜப்பானுக்கான தனது விஜயத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் இப்பிரச்சினைக்கு ஒரு உடன்பாட்டைக் காண்பதற்காக ஜனாதிபதி கிளின்டன் கடுமையாக உழைத்துள்ளார். ஆனால், இப் பிரச்சினை பேச்சுவார்த்தை மேசையில் தீர்த்துக் கொள்ளப்படவில்லையென்றால், பல உயிர்களைப் பலியாகக் கொடுக்கும் யுத்த களத்திலேயே தீர்த்து வைக்கப்படவேண்டியிருக்கும் என்பது மட்டும் உண்மை!

ஞானரதன்.





**முரண்பாடுகள் தீவிர மடைந்துள்ள நிலையில், இரு தரப்பினருக்கும் உதவுவதற்காக பில் கிளின்டனும் காம்டேவிட்டில் முகாமமைத்திருந்த போதிலும், கொந்தளிப்பான ஒரு சூழ்நிலையிலேயே பேச்சுக்கள் இடம்பெறுவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இரு தரப்பினருமே உள்ளூரில் எதிர்நோக்கும் பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியிலேயே இந்தப் பேச்சுக்களில் கலந்துகொள்கின்றார்கள்.**

## சிறுகதை

அப்போதுதான் அது நடந்தது. அம்மா கறையான் தின்னும் சுவரோரம் சுருண்டு படுத்திருந்தாள். வழக்கம் போல் கனவுகள்தான். அந்தக் கனவுகளில் தப்பாமல் இயமனின் காலாட்படைகளுடன் சண்டை பிடித்துக்கொண்டு மூத்த அண்ணாவை காப்பாற்ற முனைந்து கொண்டு இருப்பாள்.

பாவம் அவளால் நிஜத்தில் மூத்த அண்ணாவை காப்பாற்ற முடியாமல் போய்விட்டது.

சற்றே நரையோடிய கூந்தலுடன் மூத்தக்கா குசினிச்சாம்பல் குடி த்துக்கொண்டிருந்தாள். பெரிய ண்ணா எதிர் வீட்டு ரீவியில் கடைவாய் வழிய படம்பார்த்தபடி ரீவியில் "சுதந்திரம்" படம் ஓடிக்கொண்ருந்ததாக கேள்வி. அந்தச்சுதந்திரம் மாத்திரம் அவனுக்குப்போதும்.

இரண்டாம் வகுப்புப்படிக்கும் மாமாவின் மகள் பள்ளிக்கூடத்தில் கொடுத்த சமயப்பாடப்புத்தகத்துடன் அல்லாடிக் கொண்டிருந்தாள் புத்தகத்தின் ஒரேபக்கத்தில் இரண்டு வெவ்வேறு வகையான ஒளவையார்கள் அதில் எந்த ஒளவையார் சரி என்று அவள் முடிவு கட்ட வேண்டும்.

எங்கள் குச்சொழுங்கையின் கடைகோடி ஒட்டு வீட்டுக்கு வந்துவிட்ட ரெலிபோனை சின்னக்கா கொஞ்சிய படி இருந்தாள்.

ஐந்தாகப் பத்தாகப் அம்மாவுக்கும் பெரிய அக்காவுக்கும் தெரியாமல் பொத்திப்பொத் சேர்ந்த காசில் சினிமாப்பாட்டுக் கேட்பது அவளுக்கு பெரு விருப்பு.

அப்போதுகாலை பத்துமணி இருக்கும். காலைச்சாப்பாட்டை கற்பனையில் சாப்பிட்டு விட்டுச்சோம்பியிருந்தோம். கூலிவேலைக்குப்போயிருந்த ஐயா சந்தி தவறணையில் முடங்கியிருப்பார். சந்தியை தப்பவிட்டிருந்தால் பள்ளிக்கூடச்சந்தியில் வீடியோக்கடை பாருக்குள் தடக்கிவிழுந்திருப்பார்.

அந்த வீடியோக்கடை பிரசித்தமானது பெரியண்ணாவின் செற் அங்குதான் நீலப்படங்களை எடுத்துபச்சை பச்சையாகப் பார்த்து பெருமைப்பட்டிருந்தார்கள்.

காக்கி உடுப்புப்போட்டு சந்தியின் சமச்சீர்குறையாமல் மண் மூட்டைகள் அடுக்கி அந்த மண்மூட்டைகளை பாதுகாக்க ஆயுதங்களை வைத்திருந்தசமாதானத்திற்கான யுத்தம் செய்பவர்களும் வேறொரு நீலப்படம் தருவதாக சொன்னதாக பெரியண்ணா பீற்றிக்கொண்டு திரிந்ததும் உண்டு.

காலம் எப்போது கிளர்ந்தெழுந்து இந்த நீலத்தையும் பச்சையையும் காவு கொள்ளப்பொகின்றதோ என ஊரில் உள்ள முற்பிறப்புடன் தொடர்புடைய எக்காலமும் உணர்ந்த பெரியவர்கள் சிலர் சொல்லிக்கொண்டிருந்தனர்.

தாங்கள் சொல்லும் விடயங்களுக்கு சான்றாதாரங்களாக அவர்கள் கிழக்குப்பக்கத்திலும் தென்பகுதியிலும் தெரிவதாகவும் வெள்ளி காலிக்கத் தொடங்கியிருப்பதாகவும், சொல்லியிருந்தார்கள்.

அம்மா திடுக்குற்று விழித்தாள். ஓடிவந்து என்னைக் கட்டிப்பிடித்தாள் அந்தச்சமயத்தில் சமாதானத்தூதுவர்கள் ஆயுதங்களைத் தீட்டியபடி உள்ளே வந்துகொண்டிருந்தார்கள். படரும் கொடியாக அவர்கள் அணிநீண்டு வளைந்து படர்ந்தது.

தாச்சி மறிக்காமலே எல்லோரும் ஒரு பக்கம் போய்ச்சேர்ந்தோம். வீடியோ பார்த்துக்கொண்டிருந்த பெரியண்ணா கும்பல் - ரெலிபோன் ஊடாக "நாங்கள் நலம் சந்தோஷமாய் வாழுறம்" என்று சொல்லிக் கொண்டிருந்த சின்னக்கா உட்பட எல்லோரும் சங்கக்கடைக்கு முன்னால் இருந்த பெரும் வெளிக்குத்தள்ளப்பட்டோம்.

முந்தியொருகாலத்தில் நெருஞ்சி முள்ளும் நாயுருவிப்பத்தையும் என்று பூரித்துக்கிடந்தஅந்த வெளி நாங்கள் அடிக்கடி வந்து போனதால் முட்களும் மாசுகளும் நீக்கப்பட்டு முத்தியடைந்திருந்தது.

எங்கள் பெரிய ஒழுங்கையின் சந்து பொந்துகளில் உள்ளவர்கள் நேற்று முன்தினம் பிறந்தவர்கள் எல்லோரும் அங்கு குப்பையாக கூட்டித்தள்ளப்பட்டு இருந்தனர்.

வெளியின் மண்ணில் உடல் புதைத்து தலையை மட்டும் வெளியில் காட்டி கைகளை நீட்டி வானத்து தேவதைகளை அழைத்துக்கொண்டு. எனக்குப்பக்கத்தில் நந்தன், கோவிந்தன், சுரேசன், அவர்களின் ஹீரோ கொண்டா மோட்டார் சைக்கிள்கள் இல்லாமல் இந்த முறை நல்லூர் திருவிழா மூட்டம் கணேசன் அங்கு செய்தஅட்டகாசங்கள் கின்னஸ் புத்தகத்தில் பதியலாம்போல-

இரவு ஏழரை மணிக்கு பிறகு நல்லூர் கோயிலடியில் ஹீரோ கொண்டாவில் மீதேறி கோகுலத்து கிருஷ்ணர்களாக இரைந்து சப்தமெழுப்பி தேவ கன்னிகைகள் மத்தியில் அவர்களின் தோள்களின் வழியே ஏறி விழுந்து விழிகளைப் பந்தாடி விரல்களால் கீச்சு கீச்சு மூட்டி ஆகா அற்புதம்.

அத்தோடு விட்டார்களா- தீர்த்தத்தன்று கேணியடியில் சுவாமி தீர்த்தம் ஆட இவர்களும் தீர்த்தம் ஆடிசேற்றை தண்ணீரை பக்தகோடிகளுக்கு அள்ளி விசிறி பக்தியில் திளைத்து ஐயகோ அதை என்னவென்று சொல்வது.

இப்போது இந்தக் காலத்தில் எலிகளை விழுங்கிய சாரைப் பாம்புகளாக என் பக்கங்களில் கிடந்தார்கள்.

"ஏன்டாப்பா- என்ன நடந்தது பிரச்சினையாய் ஒண்டும் நடக்கேல்லை பிறகேன் றவுண்ட் அப்" என்று கணேசன் கேட்க-

இரவில் படம்பார்த்தநித்திரை மயக்கத்தில் கிடந்தபெரிய அண்ணை மண்ணை சுவாசித்தபடி நித்திரையாகிப் போயிருந்தான்.

இரவோ-அதிகாலையோ- இடிஇடிக்கவில்லை. மின்னவில்லை- அதனால் சத்தம் ஒன்றும் கேட்கவில்லை கடைசி யாருடைய சைக்கிள் ரியூப்பாவது வெடித்துச் சத்தம் எழும்பவில்லை- பிறகேன் சுற்றிவளைப்பு என்று புரியவில்லை.

காரணம்சொல்லியா இங்கு எல்லாம் நடக்கிறது என்று யாரும் யோசிக்காமல் இருக்க வெளியைச் சுற்றி ஊராட்கள் திரண்டு கொண்டிருந்தனர்.

அது விடுப்புப் பார்க்கும் கூட்டம் மாத்திரம் அல்ல. அம்மாவைப் போல பிள்ளைகளுக்காக, கணவர்களுக்காக, சகோதரர் களுக்காக கலங்கியபடி இருந்தனர்.

சங்கக் கடை முன்னால் வாகனங்கள் வந்து நின்றன. கோல உடை அணிந்தஅதிகாரிகள் இறங்கி புழுதி கிளம்ப நடந்து சங்கக் கடையின் முன் தாழ்வாரத்து கதிரைகளில் அமர்ந்தார்கள்.

வெளியில் முடங்கிப்போய் இருந்த எல்லோரையும் எழுந்து நிற்கச் செய்து- அணிவகுக்க வைத்தார்கள் ஒருவர் பின் ஒரு வராக ஒருவர் பிரடிப் பகுதியை மற்றவர் முகர்ந்து கொண்டு பவ்வியமாய் நடந்துஅமர்ந்திருந்தவர்கள் முன்னால் போய் நின்றோம். அதிகாரிகள் மூன்றுபேர் எழுந்து வந்தார்கள் ஒவ்வொருவராக பார்த்தனர்.

சுயம்வர மாலையா? யாருடைய கழுத்தில் விழப்போகின்றதோ என்ன செய்யப்போகின் றார்களோ...... முதுகில் முதுகெலும்பு இருக்கின்றதா? பின்னால் இருந்த சுரேசிடம் கேட்டேன்.

"மச்சான் என்ரை முதுகெலும்பு இருக்கடா"

"எடமடையா-என்ன விசர்க்கதை கதைக்கிறாய்-அது எங்கையடா இருக்கு"

சட்டென்று உண்மை சுட்டது. என்றைக்கு இவர்களிடம் அகப்பட்டோமோ அன்றைக்கே அதனை கழற்றி வைத்தது ஞாபகம் வந்தது என்றாலும்.

"அது தெரியும் மச்சான் - சில வேளை அது திரும்பி வந்திட்டுதோ என்று பார்க்கிறதுக்குத்தான் இந்தசெக்கிங்கோ"

வெய்யில் சரிந்தபோது எங்களில் பதினைந்து பேருக்கு கிட்டத்தட்ட ஒரு புறமாக்கிவிட்டு மிகுதிப் பேர்களை திருப்பி அனுப்பிவிட்டார்கள்.

"சரி-சரி மிச்ச ஆளுங்க போகலாம்- இவ்வளவு நேரமும் கரைச்சல் தந்ததுக்கு மன்னிக்க வேணும்" என்று சொல்லி ஆட்களை அனுப்பினான் ஒரு அதிகாரி.

வேள்விக்கு நேர்ந்துவிட்டகிடாய்களைப் பார்ப்பது போல திரும்பிப் போகும் ஆட்கள் எங்களை பார்த்தபடி போனார்கள்.

பதினைந்து பேர்களில் ஐந்து பேர்கள் பெண்கள் மலங்க மலங்க விழித்தபடி கண்ணீர் பொங்க துவண்டு போய் இருந்தனர்.

ஆண்கள் பத்துப் பேருக்கும் தலை விறைத்து இருந்தது. எனக்கு நடுக்கம் ஏற்பட்டது. என்ன நடந்தது? என்ன செய்யப் போகிறார்கள் என்ர அம்மாளே.

எனக்கு அம்மாவைப்போல பதினைந்து பேர்களின் உறவினர் களும் விம்மி வெடித்துக்கொண்டு வெய்யில் சுடர்விட்ட எரிந்து கொண்டிருக்க - பசி அடிவயிற்றைப் பிடுங்கியது. சிறு நீர் கழித்தால் சிறிது நிம்மதியாக இருக்கும் யார் தருவார் இதற்கு அனுமதி.

சங்கக்கடை தாழ்வாரத்தின் மறைவில் இருந்துகொண்டு ஒரு மொட்டைத்தலைப் பேர்வழி என்னை சைகை காட்டி அழைத்தான்.

ஏனைய அதிகாரிகள் தங்கள் தங்கள் கதிரைகளில் இருந்து எதையோ குடிக்க ஆரம்பித் திருந்தனர்.

மொட்டைத்தலையின் கண்களில் முதலில் பட்டது நானாகத்தான் இருக்க வேண்டும்.

போனேன் அவன் பார்வை வெய்யிலை விட வெக்கை குறை வாகத்தான் இருந்தது.

சகல விபரங்களையும் கேட்டான். அடையாள அட்டைகளைப் பார்த்தான். பயந்து வெளிறிய முகத்துடன் நான்.

"இது நேற்று- இது முந்தநாள்- இது அதற்கு முதல்நாள்" என்று படங்களைக் காட்டத் தொடங்கினேன். அவன் அதுகளை ஓரங்கட்டினான்.

"குறி சுட்டதா"- என்றான்

"ஓம்"

இடுப்பு எலும்பை முறிப்பது போல என்னைத் திருப்பி முதுகைப்பார்த்தான். முதுகில் இருந்த இலக்கத்தைக் குறித்துக் கொண்டான்.

"முதுகு எலும்பு இல்லைத்தானே மிச்சம் நல்லது" என்றான்.

என் படபடப்பு குறைந்தது

"சரிபோய் அங்கை நில்லு" என்று சொல்ல நான் வெளியே வந்தேன்.

ஓரமாக நின்ற அம்மா விரைந்து கதிரைகள் இருந்த இடத்தைநோக்கி நடந்தாள் நடையில் அவசரம் தெரிந்தது.

"பொறு பாக்கியம்" என்று குஞ்சியாச்சி சொன்னது கேட்டது.

கதிரைகளில் இருந்தவர்களுக்கு அம்மாவின் அவசரம் புரிந்திருக்க வேண்டும்.

"பயம் வேண்டாம் பொறுங்கோ அம்மா" என்றான் ஒரு இளநிலை அதிகாரி.

அதிகாரி எல்லாரையும் ஒன்றாக இருக்கச் சொன்னான். அம்மா ஏனையவர்களின் உறவினர்கள் எல்லோரும் எங்களோடு வந்து அமர்ந்தார்கள் வெள்ளை நீளக்கைசேட் போட்டு ரைகட்டிய மனிதர் ஒருவர் கதைக்கத் தொடங்கினார்.


"உங்களுக்குபாலம் தெரியுமா"

அம்மாவை பார்த்துக்கேட்டார் அம்மா சற்றுத்தயங்கிக் கொண்டு,

"நாவற்குழி பாலம் மாத்திரம் தெரியும்" என்றாள்.

யாரும் சிரிக்கவில்லை எனக்குப் பயமாகிப் போய்விட்ட்து.

"நாங்கள் பாலம் கட்டத்தான் இவன்களைப் பிடிச்சது. இவன்கள் எல்லாம் பிரச்சினை இல்லாத ஆட்கள் இவங்கள் எல்லாம் இஞ்சை இருந்து அங்கை போறது நாங்க பிளேனில கூட்டிப்போறது. யாராவது பிளேனில-போயிருக் கிறீங்களா? இல்லைத்தானே நாங்க பிளேனில கூட்டிப்போய் தெற்கில் எங்கடை ஆட்களோட பழகவிடுறது தங்கவைக்கிறது -சாப்பாடு தாறது. விளையாட விடுறதுஅப்ப அவங்களும் இவங்களும் ஒண்டாப் பழகி சந்தோஷமாய் இருக்கலாம். இன ஒற்றுமையை வளக்கலாம். அதுதான் நாங்கள் நட்புறவுப் பாலம் அமைக்கப்போறது. இதெல்லாம் நல்லதுதானே. உங்களுக்கும் சந்தோஷம்தானே. இப்ப பயப்படாமல் இருங்க."



# ஒரு பாலத்தின் கதை...

யாராவது பிளேனில போயிருக்கிறீங்களா? இல்லைத்தானே நாங்க பிளேனில கூட்டிப்போய் தெற்கில் எங்கடை ஆட்களோட பழகவிடுறது தங்கவைக்கிறது - சாப்பாடு தாறது. விளையாட விடுறதுஅப்ப அவங்களும் இவங்களும் ஒண்டாப் பழகி சந்தோஷமாய் இருக்கலாம். இன ஒற்றுமையை வளக்கலாம். அதுதான் நாங்கள் நட்புறவுப் பாலம் அமைக்கப்போறது.

இணுவையூர்
சிதம்பர திருச்செந்திநாதன்

# தேசிய அரசியலில் ஊடகத் துறையின் போலித்தனங்கள்



சுனந்த தேசப்பிரிய
ஊடகவியலாளர்

> **தமிழ் மக்கள் தொடர்பாக சிங்கள சமூகம் கொண்டுள்ள கருத்தையும் சந்தேகத்தையும் போக்க தமிழ் சமூகத்திற்குள் ஆழமான விவாதங்களை தமிழ் ஊடகங்கள் செய்யவில்லை**

**இலங்கையின் இனப்பிரச்சினை உக்கிரமடைந்தபின்பு பொதுசன ஊடகங்கள் எவ்வாறு செயல்பட்டு இருக்கின்றன?**

இதில் இரண்டு விதமான போக்குகளை அவதானிக்க்க கூடியதாக இருக்கின்றது. அரசாங்கத்திற்கு சம்பந்தமான விடயங்களில் அரச சார்பு ஊடகங்கள் அரசினை ஆதரித்தும் பிரச்சார படுத்தியும் செயல்படுகின்றன. தனியார் ஊடகத்துறையில் மாறுபட்ட கருத்துக்கள் இருக்கின்றன. பத்திரிகை உரிமையாளர்கள் மத்தியிலும் வேறுபட்ட போக்குகள் இருக்கின்றன. சிங்கள பத்திரிகை உரிமையாளர்களுக்கும் சிங்களம் அல்லாதபத்திரிகை உரிமையாளர்களுக்கும் இடையில் இனப்பிரச்சினை தொடர்பாக செய்திகள் வெளியிடும் விதத்தில் வித்தியாசங்கள் இருக்கின்றன. இன்றைய அரசாங்கம் சிங்கள பெரும்பான்மை பிரதிநிதிகளைக் கொண்டது ஆகும். அதனால் அரச ஊடகங்களும் சிங்கள ஊடகங்களும் இதனையே செய்கின்றன. தமிழ் மக்களின் எதிர்பார்ப்பு, அபிலாசைகள் அவர்களது பிரச்சினைகள் பற்றி சிங்கள சமூகத்திற்குள் எடுத்துக் கூறி கருத்தப்பரிமாற்றத்தை ஏற்படுத்த இவ்வூடகங்கள் தவறிவிட்டன. சிங்கள அரசியல் வாதிகள் தமிழ்மக்கள், தமிழ் சமூகம் தொடர்பாக என்ன கருத்தினை கொண்டிருக்கின்றார்களோ அக்கருத்தையே சிங்களப்பத்திரிகைகள் வெளிப்படுத்தின.

அதேபோல் தமிழ் ஊடகங்களும் சிங்கள ஊடகங்களைப்போல் நடந்து கொள்கின்றன. தமிழ் மக்கள் தொடர்பாக சிங்கள சமூகம் கொண்டுள்ள கருத்தையும் சந்தேகத்தையும் போக்க தமிழ் சமூகத்திற்குள் ஆழமான விவாதங்களை தமிழ் ஊடகங்கள் செய்யவில்லை எனவே இந்த நாட்டின் பெரும்பாலான ஊடகங்கள் இனவாத ரீதியாகவே செயற்படுகின்றன.

**இந்நிலைக்கு ஊடக உரிமையாளர்கள் காரணமா? அத்துடன் இனப்பிரச்சினை தொடர்பாக தமிழ் சிங்கள ஊடகத்தினுடைய கருத்துப் பரிமாற்றம் இல்லாமை ஒரு காரணமாக இருக்கலாம் இல்லையா?**

இது உண்மையாகவே கலந்துரையாடப்பட வேண்டிய பிரச்சினையாகும். பத்திரிகை ஆசிரிய தலையங்க கொள்கையை தீர்மானிக்கும் முடிவு பத்திரிகை ஆசிரியரிடம் இல்லை. பத்திரிகை, உரிமையாளரின் நோக்கத்தை சார்ந்தே இருக்கின்றது. இலங்கைப் பத்திரிகை ஆசிரியர்களுக்கு கருத்துச் சுதந்திரம் என்பது கிடையாது. ஆசிரியருக்கும் பத்திரிகை உரிமையாளருக்கும் இடையில் உடன்பாட்டுக்கோவை நம்நாட்டில் இல்லை. ஏன் பத்திரிகை சம்பிரதாயமும் இல்லை. பத்திரிகையாசிரியர்களும் தங்களுடைய ஆசாபாசங்களுக்கு ஏற்பவே நடந்து கொள்கின்றனர். தமது சமூகத்தில் இருக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஒரு வரையறைக்குள் நின்று செயல்பட முடியுமென நான் கருதுகின்றேன். ஆனால் தாம் செயல்படக்கூடிய வரையரைக் குள் நின்று செயல்படக்கூடிய தெளிவு அனேகமான பத்திரிகை ஆசிரியர்களிடம் இல்லை. இன்று இந்நாட்டில் அரசாங்கத்ததிடமிருந்து ஊடக சுதந்திர உரிமைகளை வென்றெடுப்பதற்கான போராட்டங்கள் நடைபெறுகின்றன. ஆனால் பத்திரிகைகளில் தமது கருத்தைதெரிவிப்பதற்கான உரிமைக்கு போராட முடியாமல் இருக்கின்றது. இந்நாட்டிலுள்ள பத்திரிகையாளர்கள் தமது கருத்தினை வலியுறுத்தாமல், பத்திரிகையாசிரியர் உரிமையாளர்களை திருப்திப்படுத்தவும் அவர்களது கருத்திற்கு ஏற்பவும் எழுதுகின்றார்கள். இனப்பிரச்சினை தொடர்பாக நடுநிலை எழுத்துக்களை காணவேண்டுமேயானால் இப்போக்குகளில் மாற்றம் ஏற்பட வேண்டும்.

**தாங்கள் குறிபிடுவது போல் ஊடகவியலாளர்கள் ஒரு வட்டத்திற்குள் நின்று செயல்படுகின்றனர் அதன் விளைவுகள் பற்றி?**

சிங்கள, தமிழ் ஊடகவியலாளர்கள் தங்களின் நோக்கங்களில் இருந்து கொண்டே செயல்படுகின்றனர். ஒவ்வொருவரும் மற்றவர்களை தங்களது எதிரியாகவும் பலமுள்ள எதிரி எம்மை சூழ்ந்துள்ளான் என காட்டவுமே முன்நிற்கின்றன. எமது இனத்தை மற்றைய இனம் தாழ்த்தி நடத்துகின்றது. எமது மக்கள் மற்றைய இனத்தால் அழிக்கப்பட்டு விடுவார்கள் என கூறுகின்றனர். இவர்களது செய்திகளை நோக்கும் போது ஏனைய இனத்தை பயமுறுத்துவதாகவே உள்ளது. இதனால் நாட்டு மக்கள் சுயபாதுகாப்பினை நாட வேண்டியுள்ளது. இவை இனப்பிரச்சினை தொடர்பாக எழுதும் போது தீர்க்கக் கூடிய பிரச்சினை என்னும் நம்பிக்கையை வளர்ப்தில்லை மக்கள் அஞ்சக் கூடிய விதத்தில் எழுதுகின்றனர் தங்கள் இனம் பலம் பெறும் விதத்தில் கருத்துக்களை முன்வைக்கின்றனர் இதைவியாபாரமாக்கி விட்டார்கள். பயந்த மனிதன் எதையும் கேட்பான் இந்நாட்டின் இராணுவம் தமிழ்ப்பெண்களை பாலியல் வல்லுறவு கொள்வதாக தமிழ்ப்பத்திரிகைகளில் எழுதும்போது தமிழரெல்லாம் புலிகள் என சிங்களப் பத்திரிகைகள் கூறுகின்றன. இதனால் இரு சமூகமும் அச்சம் கொள்கின்றது. சமாதானத்திற்கான கருத்துப்பரிமாற்றங்களை பத்திரிகைகள் நடத்துவதில்லை. தமிழ் எழுத்தாளர்களின் கட்டுரைகள் கட்டுரைகள் சிங்களப் பத்திரிகைகளிலும் சிங்கள எழுத்தாளர்களின் தமிழ் பத்திரிகைகளிலும் மிக சொற்பமாகவே வெளிவருகின்றன.

**இனப்பிரச்சினைக்கான தீர்வு விடயத்தில் பிரதான பத்திரிகைகள் எவ்வாறு நடந்து கொள்கின்றன?**

பத்திரிகைகள் இப்பிரச்சினை தீர்வு விடயத்தில் சமூகத்திற்குள் கருத்துப் பரிமாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என செயல்பட வில்லை. முன்வைக்கப்பட்டுள்ள தீர்வு நல்லதா அல்லது கூடாததா என்பது போன்ற விவாதத்தளத்தையேனும் ஏற்படுத்தவில்லை. நான் அறிந்தவிதத்தில் முக்கியமாக பிரதான சிங்கள தமிழ் பத்திரிகைகள் ஆயுதக் கலாசாரத்திற்கு தலைகுனிந்தே செயல்படுகின்றது. தமிழ்ப் பத்திரிகைகளை விடுதலைப் புலிகள் மாத்திரம் கட்டுப்படுத்தவில்லை ஏனைய தமிழ் அமைப்புக்களான ஈபிடிபி, புளொட், ஈ.பி.ஆர்எல்எவ்,டெலோ போன்ற அமைப்புகளும் கட்டுப்படுத்துகின்றன. சிங்கள பத்திரிகைகள் அரசிற்கும் அரசு அல்லாத பலமான அமைப்புகளுக்கும் கட்டுப்படுகின்றன. எந்தப் பத்திரிகையும் பொது மக்களின் குரலுக்கு சார்பாக செயல்பட தயாராக இல்லை சமாதான விடயத்திலும் அரசாங்கத்தின் கருத்தையே வலியுறுத்துகின்றது. பொது மக்களின் கருத்தை வலியுறுத்த மறுதலிக்கின்றது. நோர்வே நாட்டின் சமாதான முயற்சிகளை அரசு சார்பான பத்திரிகைகளை தவிர்த்து ஏனைய பத்திரிகைகளில் சில வற்றை தவிர நடுநிலை நின்று எழுதியது கிடையாது. அனேகமான சிங்களப் பத்திரிகைகள் நோர்வே மத்தியத்துவம் தேவையற்றது எனும் கருத்துத்தொனிக்கவே செய்திகளை வெளியிட்டது விடுதலைப்பலிகள் ஆனையிறவு முகாமைக் கைப்பற்றி யாழ்ப்பாணத்தை சுற்றி வளைத்தபோது இப்பத்திரிகைகள் இந்தியாவின் வருகையையும் தலையீட்டையும் வேண்டி ஆசிரிய தலையங்கம் எழுதின.அப்போது இது நாட்டின் உள்பிரச்சினை இறமைக்கு அச்சுறுத்தல் என்பதை மறந்து விட்டனர். இது மாத்திரமல்ல இந்திய இராணு வம் இலங்கைக்கு உடனடியாக வர வேண்டும் என இவர்கள் கூறினர். இஸ்ரேல் ஆயுதங்கள் பெற்றது தொடர்பாகவும் பெருமையோடு இப்பத்திரிகைகளில் எழுதினர். நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு முதன் முறை வந்த போது தேவையற்ற தலையீடு என கருத்து தெரிவித்த பத்திரிகைகள் விடுதலை புலிகள் யாழ்நகரை சுற்றிவளைத்தபோது இந்திய இராணுவத்தை அழைத்தமை அச்சுறுத்தலாக இவர்களுக்கு தெரியவில்லை. தமிழ் பத்திரிகைகளும் இவ்வாறே செயல்பட்டன. யாழ்ப்பாணத்தை இராணுவம் கைப்பற்றிய போது வெளிநாட்டு மத்தியத்துவத்தை கோரிய தமிழ்ப்பத்திரிகைகள் விடுதலை புலிகள் நிலப்பரப்பை கைப்பற்றிய போது அது தொடர்பாக எதுவும் பேசவில்லை. இலங்கை பத்திரிகைகளுக்கு கொள்கை இல்லை என்பதற்கு இது நல்ல உதாரணங்களாகும்.

**இனப்பிரச்சனை உருவாக்கத்திற்கு தமிழ் அரசியல் வாதிகளின் பங்கினை தாங்கள் எவ்வாறு நோக்குகின்றீர்கள்?**

70களின் நடுப்பகுதிவரை இலங்கை எனும் வரையரைக்குள் இருந்தேஇனப்பிரச்சினைக்கு தீர்வு காண தமிழ் அரசியல் வாதிகள் முயற்சித்தனர். அரசியல்வாதிகளின் கருத்துக்களில் இருந்து முடிவெடுப்பது கடினமான விடயமாகும். ஐ.தே.க ஆட்சிக்காலத்தில் தென்மாகாண சபைத் தெர்தலில் பொது ஜன முன்னணி வெற்றி பெற்றவுடன் அதிகாரங்கள் அவர்களிடம் கையளிக்கப்பட வில்லை. அதனால் முதல்வர் அமரசிரி தொடங்கொட மாகாணசைப ஆட்சி அதிகாரத்தை தர மறுத்தால் தெற்கில் தனி இராச்சியம் ஒன்றை உருவாக்குவோம் என கூறினார். ஐம்பதிற்கு ஐம்பது, தனிநாட்டு கோட்பாடுகள் என்பனவற்றை தமிழ் அரசியல்வாதிகள் முன்வைத்தாலும் இலங்கைக் குள்ளேயே இதனைதீர்க்க முயற்சி செய்தனர். ஆனால் இவர்களின் நடைமுறையில் இருந்தே இவர்களை விளங்கிக் கொள்ள வேண்டும். தமிழ் அரசியல் வாதிகளிலும் பெருங்குறையொன்று உள்ளது. விடுதலைப் புலிகளை ஜனநாயக நீரோட்டத்திற்குள் கொண்டு வர இவர்களால் முடியவில்லை அல்லது விடுதலை புலிகளுக்கு எதிராக வலுவான மாற்று அமைப்பை உருவாக்கவும் இவர்களால் முடியவில்லை.

**இனப்பிரச்சினையின் தீர்வுக்கான பொறுப்பை சிங்கள ஊடகவியலாளரான நீங்கள் எவ்வாறு நோக்குகின்றீர்கள்?**

இன்று தமிழ் அரசியல் வெற்றிடமாகவே உள்ளது. எனவே முதலில் தமிழ் அரசியல் வாதிகள் அதனை நிரப்ப வேண்டும். தென் பகுதியில் அடக்கு முறையிருந்தகாலத்தில் ஜெ.வி.பியினரே அரசாங்கத்திற்கு அடிபணிந்து போகாதபடி அரசியல் அமைப்புகள் தென் இலங்கையில் இருந்தன. அனால் வடக்கு கிழக்கில் அரசும் இராணுவமும் ஆயுதமேந்திய தமிழ் குழுக்களும் இருக்கின்றன. தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்க எவரும் இல்லை. எனவே தமிழ் மக்களுக்காக முதலில் குரல் எழுப்பக் கூடிய முறையினை ஏற்படுத்த வேண்டும். இதற்கு அரசியல் கட்சிகள் கலாசார அமைப்புகள் எல்லாம் முகங் கொடுக்க வேண்டிய சவாலாகும். கடந்த காலங்களில் யாழ் பல்கலைக்கழக மனிதஉரிமைகள் அமைப்பு சுதந்திரமாக செயல்பட்டது. ஆனால் அண்மைக் காலமாக அரசு சார்பாக இயங்குவதுடன் அரசின் தேவைக்காக அறிக்கைகளும் விடுகின்றனர். இது மிகவும் கவலை தரும் விடயமாகும். சுதந்திரமாக செயல்பட்டவர்கள் இன்று அரசின் கைப்பொம்மையாக மாறியுள்ளனர். யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இருபாலாரும் தமிழ் மக்களை தங்கள் கரங்களிற்குள் அடக்கியே வைத்திருக்கின்றனர்

நேர்காணல்
■ சுனில் ஜயசேகர

தொடர் 5

# அவன் விதி

காலையில் வேலைக்குப் போவதற்கு இரண்டு மணி நேரத்திற்கு முன்னேயே என்னை எழுப்பி விடுவாள். என் மயக்கம் தெளிவதற்கு நேரம் வேண்டுமல்லவா! இரவு குடித்தால் மறு நாள்வரை காலை நான் எதுவும் தின்ன மாட்டேன் என்று அவளுக்குத் தெரியும். ஆகையால் வெள்ளரிக்காய் ஊறுகாயோ அதைப் போன்ற வேறு ஏதேனுமோ எனக்குத் தின்னத் தந்து, குடித்த மறு நாள் ஏற்படும் சோர்வைப் போக்குவதற்காக



எனக்கு ஒரு மடக்கு வோட்கா ஊற்றிக் கொடுப்பாள். "இந்தா, அந்திரேய். இனிமேல் ஒரு போதும் இப்படிக் குடிக்காதே, என் அன்பல்லவா!" என்பாள். இவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கும் ஒருத்திக்கு எப்படித் துரோகம் செய்ய முடியும்? வோட்காவைக் குடிப்பேன். பேசாமலேயே அவளுக்கு நன்றி செலுத்துவேன். ஒரு பார்வை. ஒரு முத்தம். அவ்வளவு தான். அடக்க ஒடுக்கமாக வேலைக்கு போவேன். ஆனால் அவள் மட்டும் நான் குடி வெறியிலிருந்த போது ஏறுமாறாக ஒரு பேச்சுப் பேசியிருந்தாளே யானால், என்னைத் திட்டவோ அதட்டவோ தொடங்கி யிருந்தாளேயானால் நான் மறுபடியும் குடித்துவிட்டுத் தான் வீட்டுக்கு வந்திருப்பேன். கடவுள் ஆணையாகச் சொல்லு கிறேன், அப்படித்தான் செய்திருப்பேன். பெண்டாட்டி கூர் கெட்டவளாயிருக்கும் குடும்பங்களில் அப்படித்தான் நடக்கிறது. அந்த மாதிரி எத்தனையோ குடும்பங்களைப் பார்த்திருக்கிறேன். எனக்கும் தெரியும்.

"ஆயிற்றா? விரைவில் குழந்தைகள் பிறக்கத் தொடங்கின. முதலில் பையன் பிறந்தான். பிறகு இரண்டு பெண்கள்... அப்போது தான் கூட்டாளிகளின் உறவைக் கத்தரித்துக் கொண்டேன். சம்பளப் பணம் முழுவதையும் வீட்டிற்குக் கொண்டுபோய் மனைவியிடம் கொடுக்கத் தொடங்கினேன். குடும்பம் பெரிதாகிவிட்டதே; இனிக் குடிப்பதற்குப் பொழுது ஏது? விடுமுறை நாளன்று ஒரு குவளை பீர் குடிப்பதோடு சரி. அதற்குமேல் போக மாட்டேன்.

"1929இல் மோட்டார்களில் எனக்கு நாட்டம் விழுந்தது. மோட்டார் ஓட்டக் கற்றுக்கொண்டு ஒரு லாரியில் வேலை செய்தேன். அதில் நன்றாகப் பழகியவுடன் மறுபடியும் தொழிற் சாலைக்குச் செல்ல எனக்கு விருப்பமில்லை. லாரி ஓட்டுவது எனது மனத்திற்கு மிகவும் பிடித்திருந்தது. இப்படியே பத்து ஆண்டுகள் வாழ்ந்தேன். பொழுது கழிந்ததே தெரியவில்லை எனக்கு. கனவு போல் இருந்தது. ஆனால் பத்து ஆண்டுகள் எம்மாத்திரம்? என்று கேட்டுப் பாருங்கள். துளி கூட அவன் கவனிக்கவில்லை என்று தெரிந்துகொள்வீர்கள். கழிந்து போன வாழ்க்கையும் ஒன்று, அதோ அங்கே மங்கிய பனிப்படலத்தில் தொலைவில் ஸ்டேப்பி வழி தெரிகிறதே, அதுவும் ஒன்று. இன்று காலையில் நான் அந்த ஸ்டெப்பியைக் கடந்து வந்தபோது சுற்றிலும் தெளிவாக இருந்தது. ஆனால் இப்போது இருபது கிலோமீட்டர்கள் கடந்துவந்தபின் பார்த்தாலோ ஒரே மங்கலாகத் தென்படுகிறது. மரம் எது புல் எது என்றோ, புல்வெளி எது, வயல் எது என்றோ தெளிவாகத் தெரியவில்லை...

"அந்தப் பத்த ஆண்டுகளும் இரவு பகலாக உழைத்தேன். நிறையச் சம்பாதித்தேன். பிற மக்களை விட ஒரு குறைச்சலும் இல்லாமல் வாழ்ந்தோம். குழந்தைகள் தான் எங்கள் இன்பம் எல்லாம். மூன்று பேரும் பள்ளியில் நன்றாகப் படித்தார்கள். மூத்தவன் அனத்தோலிய் கணக்கில் கெட்டிக்காரன். மாஸ்கோ செய்தித்தாள் ஒன்றில் கூட அவன் பெயர் வந்தது. இவ்வளவு சமர்த்து அவனுக்கு எங்கிருந்து வந்தது என்று என்னால் சொல்ல முடியாது, அண்ணே. ஆனால் அது எனக்கு இன்பமாயிருந்தது. அவனைப் பற்றி எனக்கு ஒரே பெருமை. ஆமாம்... ரொம்ப ரொம்பப் பெருமை!

"பத்து ஆண்டுகளில் கொஞ்சம் பணம் மிச்சம் பிடித்தோம். போருக்கு முன்பு ஒரு சிறு வீடு கட்டினோம். இரண்டு அறை, ஒரு கூடம், ஒரு முகப்புடன். இரீனா இரண்டு வெள்ளாடுகள் வாங்கினாள். இதற்கு மேல் எங்களுக்கு என்ன வேண்டும்? குழந்தைகளின் கஞ்சிக்குப் பாலிருந்தது; குடியிருக்க வீடு இருந்தது. இடுப்புக்கு உடை, காலிலே காலணி, ஆக எல்லாமே நல்லபடி தான் இருந்தது. வீடு கட்ட நான் பிடித்த இடம் அவ்வளவு நல்லதாயில்லை. அது ஒன்று தான் குறை. விமானத் தொழிற்சாலைக்கு அருகாமையிலேயே எனக்கு மனையொன்று கொடுத்தனர். அதில் தான் கட்டினேன். வேறு எங்கேனும் மனை கிடைத்திருக்குமானால், ஒரு வேளை என் வாழ்வு வேறு மாதிரித் திரும்பியிருக்கலாம்....

**"இந்தா, அந்திரேய். இனிமேல் ஒரு போதும் இப்படிக் குடிக்காதே, என் அன்பல்லவா!" என்பாள். இவ்வளவு நம்பிக்கை வைத்திருக்கும் ஒருத்திக்கு எப்படித் துரோகம் செய்ய முடியும்? வோட்காவைக் குடிப்பேன். பேசாமலேயே அவளுக்கு நன்றி செலுத்துவேன். ஒரு பார்வை. ஒரு முத்தம். அவ்வளவு தான்.**

மீண்டும் சந்திப்போம்.......

# சேத்தனார் பதில்கள்



அன்பின் சேத்தனார்!
மனிதன் பகுதத்தறிவை எப்போது இழக்கிறான்?

மு. இராமசாமி
டெல்வின் ஏ இறக்குவானை

**மனிதன் என்கின்ற நிலையை மறக்கும்போது**

சுதந்திரம் கிடைத்து 53 ஆண்டுகள் ஆகிவிட்டது இன்னும் சாலையோரம் வாழ்க்கை நடத்தும் மக்கள் பற்றி?

நஸீம் ரூமி
26 ஏ வெட்டுக்குளம் வீதி புத்தளம்.

**சுதந்திரம் யாருக்கு கிடைத்தது!**

சேத்தனரே!
எமது நாட்டைப் பற்றி நாமே அறிய முடியாதுள்ளதே இது நியாயமா?

ப.இரவீந்திரகுமார்
புளியங்கூடல் ஊர்காவற்துறை

**அறியாமல் இருப்பது நல்லது ஏன் என்றால் பாதாள உலகமும் ஏமாற்றுக்காரர்களும் இங்கு ஆட்சி செய்கின்றனர்.**

தேசிய அரசு ஒன்றை எதிர்காலத்தில் எதிர்பார்க்கலாமா சார்?

ஏ.என்.எம்.ஜவாத்
புத்தளம்

**முதலாளித்துவம் சிதையத் தொடங்கினால் மூலதனத்தைகாக்க தேசிய அரசு அமைக்கலாம்**

கடி ஜோக் ஒன்று கூற முடியுமா சேத்தனாரே?

ரா.க.லலிதா
டெல்வின் இறக்குவானை

**அந்த வயதைக் கடந்து விட்டேன் மகளே!**

எமது நாட்டு ஜனநாயகம் பற்றி?

என்.கிரிஜா
வாழைச்சேனை

**அது பற்றி பேசாதீர்கள் எமக்கு ஜனநாயகம் பற்றி பேச உரிமை கிடையாது.**

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் முஸ்லிம் மக்களின் பிரச்சினை தொடர்பாக உண்மையாக செயல்படுகின்றதா?

முகமட் அலி
மெயின் வீதி காத்தான் குடி

**மு.கா. தனது வரலாற்று கடமையை மறந்து செயல் படுகின்றது நிச்சயம் எதிர் காலம் பதில் சொல்லும். ஆனால் முஸ்லிம் மக்களுக்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசை தவிர வேறு மாற்று வழியில்லை.**


பாராளுமன்ற தமிழ் கட்சிகள் எங்கே செல்கின்றன?

செ.தவராசா
சாமிமலை அட்டன்

**தாங்கள் வந்த வழியை மறந்து எங்கோ செல்கின்றது.**

# பயோடேட்டா

| | |
|---|---|
| செல்லப் பெயர் | : பொக்கெற் ராஜா |
| பழைய தொழில் | : பிக் பொக்கெற் அடிப்பது |
| சமீபத்திய தொழில் | : பஸ் கொண்டக்டர் |
| தகுதி | : பல முறை சிறைக் கம்பிகளை எண்ணியது |
| பிடித்த வாக்கியம் | : சில்லறை இல்லை... |
| பிடிக்காதது | : சரியான பணத்தைக் கொடுப்பதை |
| சந்தோஷப்படுவது | : பஸ் நிறைந்து வழிவதை |
| வெறுப்பது | : முதலாளி கலெக்‌ஷன் கேட்பதை |
| எரிச்சல்படுவது | : மிகுதி பணத்தை கேட்கும் போது |
| நண்பர்கள் | : பஸ் ஓட்டுனர்கள் |
| பொழுது போக்கு | : நெரிசலில் ஒளித்து விளையாடுவது |
| பலவீனம் | : பெண்களிடம் அழுது வடிவது |
| பலம் | : நண்பனைப் போல் நடிப்பது. |



- கௌதமன்

# பாதாள விஜயபாலாவின் படுகொலை மர்மமென்ன...?



தலைநகர் கொழும்பில் தேடப்பட்டு வந்த மிக முக்கிய பாதாள உலகத் தலைவர்களில் ஒருவரான நடராஜா விஜயபாலன் என்றழைக்கப்படும் விஜயபாலா கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை மாளிகாவத்தை பொலிஸ் நிலையை சோதனைச் சாவடியின் முன்பாக சுட்டுக் கொல்லப்பட்டார் என்று வந்த தகவலில் பெரும் மர்மம் நிலவுவதாகவே தெரியவருகிறது.

கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 2.30 மணியளவில் மாளிகாவத்தை பொலிஸ் சோதனைச் சாவடியருகே வந்து கொண்டிருந்த காரொன்றை சந்தேகத்தின் பேரில் மறித்த போது அது நிற்காமல் செல்லவே சந்தேகம் கொண்ட பொலிசார் துப்பாக்கி பிரயோகம் செய்ததில் காரில் இருந்த இரு பெண்களும் விஜயபாலாவும் கொல்லப்பட்டதாக மாளிகாவத்தை பொலிசார் தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவத்தில் காரில் இருந்த துஷாகா சில்வா (வயது 28) ரேணுகா (வயது 30) ஆகிய இரு பெண்களும் கொல்லப் பட்டுள்ளனர். இவர்களில் துஷாகா நுகேகொடைப் பகுதியில் வெளிநாட்டு முகவராக தொழில் நடத்தி வருபவர் என்றும் தெரிய வருகிறது.

இதேவேளை இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட பாதாள உலகத்தை சேர்ந்த விஜயபாலா கடந்த மூன்று மாதங்களாக குற்றப் புலனாய்வு பணியக பொலிசா ரினால் தீவிரமாக தேடப்பட்டு வந்தவர் என்றும் தெரிய வருகிறது.

ஆனால் இச்சம்பவம் நடப்பதற்கு முதல் நாள் விஜயபாலா கொச்சிக்கடை விவேகானந்தா மேட்டில் உள்ள இரகசிய இடமொன்றில் வைத்து கைது செய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டதை அப்பகுதியில் உள்ள பலர் பார்த்துள்ளதாக தெரியவருகிறது.

இதேவேளை தலைநகர் கொழும்பில் உள்ள முக்கிய பாதாள உலக ஜாம்பவான்களில் குறிப்பிடத்தக்க இந்த விஜயபாலா பம்பலப்பிட்டி மெஜஸ்டிக் சிட்டி அருகே ரெலோ இயக்க முக்கியஸ் தர்களான தாஸ், குகன் மற்றும் வவுனியா வர்த்தகரான கோடீஸ்வரர் ஜெயக்கொடி ஆகியோரின் கொலைச்சம்பவம் உட்பட பல ஆட்கடத்தல்கள் கொலைச்சம்பவங்களில் குற்றம் சாட்டப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

வளர்ந்துவரும் எழுத்தாளர்களை ஊக்குவிப்பதற்கான

## சிறுகதைப் போட்டி-2

நாட்டின் யுத்த நிகழ்வுகளின் பாதிப்புகளை தொனிப்பொருளாகக் கொண்ட சிறுகதை ஆக்கங்கள் வாசகரிடம் இருந்து எதிர் பார்க்கப்படுகின்றது.

1. ஆக்கம் 500 சொற்களுக்குட்பட்டதாக இருத்தல் வேண்டும்.
2. ஆசிரியரின் தீர்ப்பே இறுதியானது.
3. தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த சிறுகதைக்கான பரிசாக ஈழத்து பிரபல நாவலாசிரியனரின் ஆக்கங்கள் பரிசாக அனுப்பி வைக்கப்படும்.

முடிவுத்திகதி- 10.8.2000

அனுப்ப வேண்டிய முகவரி
ஆதவன்,
83, பிலியன்தல வீதி, மஹரகம.




# நாம் தோள் கொடுக்காவிட்டால் நாடு பட்டினியில்

சுமை தூக்கும் தொழிலாளர்களின் சிவப்பு சமிக்ஞை



சுமைதூக்கும் தொழிலாளர்களின் ஒரு ரூபா போராட்டம் உக்கிரம் அடைந்துள்ளது. இவர்கள் புறக் கோட்டை வியாபாரிகளுக்கு சிகப்பு விளக்கு காட்டியுள்ளனர். ஏழு நாட்களுக்குள் தமது கோரிக் கைகளை கவனத்தில் எடுக்காவிட்டால் மாற்று நடவடிக்கைகளில் இறங்கப் போவதாக அறிவித்துள்ளனர்.

இவர்கள் கோரிக்கை தொடர்பாக மௌனம் சாதித்து வரும் புறக் கோட்டை வர்த்தகர்கள் பெரும் நெருக்கடிக்கு முகம் கொடுக்க போகின்றனர். சுமை தூக்கும் தொழிலாளர்களின் கோரிக்கை நியாயமானது, இந்த நியாயத்தன்மையை வர்த்தகர்கள் புரிந்து கொள்ள மறுக்கின்றனர். சுமை தூக்கும் தொழிலாளர்கள் இயல்பாகவே போர்க்குணம் மிக்கவர்கள் அவர்கள் தொடர்ந்து அடிமைகளாக ஒடுக்கப்பட்டு வாழ்வதற்கு தயாராக இல்லை. இவர்கள் விரக்தியின் விளிம்புக்கு தள்ளப்பட்டு உள்ளனர் சமாதானமாகவே தங்களது கூலிப்பிரச்சினையை தீர்த்துக்கொள்ள இவர்கள் விரும்புகின்றனர். ஆனால் புறக் கோட்டை வர்த்தகர்களுக்கு இது விளங்குவதாச தெரியவில்லை. அவர்கள் தங்களின் மடியை பெருக்கிக் கொள்கின்றார்களே தவிர தொழிலாளர்களின் பிரச்சினையை அணுக மறுக்கின்றனர். தங்கள் கோரிக்கைகளை இரண்டு தடவை எழுத்து மூலம் தெரிவித்து விட்டனர்.

தமது கோரிக்கையை முன்வைத்து துண்டு பிரசுரங் களையும் வெளியிட்டு புறக்கோட்டை குறுக்குத் தெருக்களிலும் சுற்றுப் புறங்களிலும் சுவரொட்டிகளையும் ஒட்டியுள்ளனர் வர்த்தகர்கள் இனியாவது விழித்தெழுவார்களா'

இன்று வாழ்க்கைச் செலவு அதிகரித்துள்ளது சுமைதூக்கும் தொழிலாளர்களுக்கும் இது பொதுவானதே. இறுதியாக தொழிற்சங்க செயலாளர் ஆர்.ஜே.எம் அனந்தப்பார்புறக் கோட்டை வர்த்தக (Pettah Traders Association) சங்கத் தலைவர் எஸ். பொன்னுசாமிக்கு தமது நிலைப்பாட்டை கடிதமூலம் தெரிவித்தள்ளார் இன்றும் ஏழு நாட்களுக்குள் நியாயமான தீர்வு கிடைக்கா விட்டால் எவ்வித அறிவித்தலுமின்றி வேலைநிறுத்தம் செய்யப்போவதாக இச் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்போது இவர்களுகது விடுதலைப்புகள் எனவும் பாதாள உலகை சார்ந்தவர்களெனவும் முத்திரை குத்தபடுகின்றன [illegible] எடுக்கப்படுகின்றன இவர்களது ஒற்றுமையை சிதைத்து கெடுபிடிகளை உருவாக்க மறைமுக முன்னெடுப்புக்கள் நடைபெறுகின்றன. சுமைதூக்கும் தொழிலாளர்களின் பிரச் சினையை பொதுப் பிரச்சினையாக கருத்தில் கொள்ளப்பட வேண்டும்.

தலைநகர் வீதிகளில் மரக்கரி வகைகள், மீன் இறச்சி, ஏற்றுவாரின்றி நாறி நாற்றம் எடுக்கும் போது அரிசி,மா,சீனி பூஞ்சனம் பிடிக்கும் போது சுமை தூக்கும் தொழிலாளர்களின் அருமையை நாடு அறியும். பாவனையாளர்களின் நலனும் இதில் தங்கியுள்ளது. இதில் அரசாங்கமும் முகங்கொடுக்க நேரிடும் வர்த்தகர்கள் தங்களின் மௌனத்தைகலைக்க வேண்டும்.

சமன் சீ.

மலையகத்தின் மூத்த எழுத்தாளரான தெளிவத்தை ஜோசப் அவர்கள் மலையகப்பிரதேசமான தெளிவத்தையைச் சேர்ந்தவர். மலையக எழுத்தாளர்களில் அதிகளவு படைப்புகளை வெளிக்கொணர்ந்தவரும் இவரே. இதுவரை காலங்கள் சாவதில்லை, குடை நிழல், நாங்கள் பாவிகளாய் இருக்கிறோம், பாலாஜி என்கின்ற நாவல்களையும், நாமிருக்கும் நாடே என்ற சிறுகதைத் தொகுதியையும், மலையகச் சிறுகதை வரலாறு என்ற ஆய்வு நூலையும் இலக்கிய உலகிற்கு தந்துள்ளார். சுமார் 45 வருடமாக இலக்கியப் பணிபுரிந்து வரும் இவரது படைப்புகள் எல்லாவற்றிலும் மலையக மணவாசனை மணம் பரப்பி நிற்கின்றது.



# எந்த அளவு கோலை வைத்து இலக்கியத்தை அளப்பது!

தெளிவத்தைஜோசப்

எந்த ஒரு அளவு கோலையும் வைத்து ஒரு படைப்பைத் தரமானது என்று நிர்ணயிக்க முடியுமா என்று தெரியவில்லை. காலமே மதியினுக்கோர் கருவி என்ற கூற்றுக் கிணங்க காலத்தால் அள்ளுண்டு போய் விடாத படைப்புக்களே தரமானவைகள் என்று கொள்ளலாம்.

நேர்காணல்
எஸ். ருக்ஷாந்தி

**உங்களுடைய இலக்கியப் பிரவேசம் பற்றிக் கூற முடியுமா?**

எனது ஆரம்பகால எழுத்துக்களை அச்சில் ஏற்றி மகிழச் செய்த ஏடு கதம்பம் என்னும் ஜன ரஞ்சகப் பத்திரிகை தான்.

என்னை ஒரு எழுத்தாளனாக இலக்கிய உலகுக்குக் காட்டிய ஏடு வீரகேசரியே!

மலையக மக்களின் எழுத்துக்களுக்கென வீர கேசரி 1960 களின் ஆரம் பத்தில் தோட்ட வட்டாரம் எனும் பகுதியை ஆரம் பித்தது. இதே தோட்ட வட்டாரம் தான் தோட்ட மஞ்சரி என்றும் பிறகு குறிஞ்சிப்பரல்கள் என்றும் பெயர் மாற்றம் கொண்டன. அறுபதுகளின் தோட்ட மஞ்சரி மலையக எழுத்துக்களின் எழுச்சிக்கும் செழுமைக்கும் ஒரு சக்தியாகத் திகழ்ந்தது. மலையத்தைச் சேர்ந்த வரான திரு. கார்மேகம் தோட்ட மஞ்சரியின் பொறுப்பாசிரியராக இருந்ததும் இதற்கான ஒரு காரணம். இந்தத் தோட்ட மஞ்சரியை என்னுடைய இலக்கியப் பயணத்துக்கான களமாக மிக நேர்த்தியான முறையில் பயன்படுத்திக் கொண்டவன் நான்.

1963ல் மலையகச் சிறுகதைப் போட்டி ஒன்றினை வீரகேசரி இந்தத் தோட்ட மஞ்சரி மூலமாக நடத்தியது. என்னுடைய "பாட்டி சொன்ன கதை" முதற் பரிசினைப் பெற்றது. இந்தப் போட்டியின் பரிசளிப்பு விழா பதுளையில் நடந்த போது "மலை நாட்டு எழுத்தாளர் மன்றம்" என்னும் அமைப்பு உருவாக்கப் பட்டது.

தோட்ட மஞ்சரியின் ஆசிரியரான கார்மேகமே மலைநாட்டு எழுத்தாளர் மன்றத்தின் செயலா ளரானார்.

1965ல் மலைநாட்டு எழுத்தாளர் மன்றம் வீரகேசரி மூலம் இரண்டாவது மலையகச் சிறுகதைப் போட்டியை நடத்தியது. "பழம் விழுந்தது" என்னும் என்னு டைய சிறுகதைக்கே இப்போட்டியிலும் முதல் பரிசு கிடைத்தது.

1966ல் மூன்றாவது மலையகச் சிறுகதைப் போட்டி அறிவிக்கப்பட்ட போது "இரா. சிவலிங்கம்; என்.எஸ்.எம். ராமையா, டைம்ஸ் ஆப் சிலோன் கிருஷ்ண மூர்த்தி ஆகியோ ருடன் தெளிவத்தை ஜோசப் என்னும் என்னுடைய பெயரும் நடுவர் குழுவில் இடம் பெற்றிருந்தது. போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பு எனக்குக் கிடைக்கவில்லை.

**உங்களுடைய ஆக்கங்கள் மலையக மக்களில் ஏற்படுத்திய பிரதிபலிப்பு பற்றி கூறமுடியுமா?**

அரசியல் ரீதியாக சட்டங்கள் வகுத்து சமூகத்தில் மாற்றங்களை ஏற்படுத்துவது போல் எழுத்துக்கள் திடீர் மாறுதல்களை ஏற்படுத்தும் என்று நான் நம்புவ தில்லை. கல்விக்கான சட்டம், உரிமைக்கான சட்டம், வாக்குரிமைக்கான சட்டம் என்று சட்டங்கள் எம்மக்களின் பால் ஏற்படுத்திய திடீர் மாற்றங்கள் அனந்தம். ஆனால் இவைகள் சமூக முன்னேற்றத்துக்கான மாற்றங்களா என்பதே பிரச்சினை.

ஆனால் எழுத்தைப் பொறுத்தவரை இலக்கியத்தைப் பொறுத்தவரை கடல் நீரில் நீலம் இருப்பதைப் போல சமூகத்தின் மீதான அதன் பாதிப்பு இரண்டறக் கலந்தே இருக்கிறது என்பதை நிச்சயமாக நம்புகின்றேன்.

ஒரு சமூகத்தின் உயர்வும் முன்னேற்றமும், அச் சமூகத்தினர் அதனை மதிக்கும் போதும், தம் சமூகக்குறைபாடுகளை தாங்களே களைய முன்வரும் போதுமே ஏற்பட முடிகின்றது. மலையக சமூகத்தின் அடிமட்டத்தில் புரை யோடிக்கிடக்கும் குறை பாடுகளைச் சுட்டிக்காட்டி அவைகளின் தீமை யுணர்ந்து அவைகளைக் களைய முயலும் ஒரு புரிதலை என்னுடைய ஆக்கங்கள் பொதுவாகவே மலையக எழுத்தாளர்களின் ஆக்கங்கள் செய்துள்ளன.

**ஈழத்து இலக்கியவாதிகள், சிந்தனாவாதிகள் பிளவுபட்டுக் கொள்வதும், ஒரு சாரார் மீது மறு சாரார் கண்டனங்களை வீசுவதும் பற்றி உங்கள் கருத்து என்ன?**

கண்டனம் என்றோ சண்டை என்றோ இதனைக் கொள்ளாமல் சிந்தனா வளர்ச்சி என்று கொள்வதே சாலவும் பொருத்தமானது.

பழையதிலிருந்து புதியதும் அல்லது பழையதை மீறும் புதியதும் தோன்றுவது இயல்பானதே.

பேராசிரியர் கைலாசபதி தமிழ்க்கல்வியாளர்கள் மற்றும் திறனாய்வாளர்கள் மத்தியில் ஒரு நட்சத்திர மதிப்புப் பெற்றவர். ஈழத்து எழுத்தாளர்களை உருவாக்கியவர்- வழி நடத்தியவர். அவருடைய மார்க்சீயக் கொள்கை களுடன் ஒத்துப் போகாத வர்கள் என்றும் பிளவு பட்டே நின்றனர் என்பது ஒன்று. அவராலேயே உருவாக்கப்பட்டவர்களும் வழி நடத்தப்பட்டவர்களும் கூட அவரையே கேள்வி கேட்கும் அளவு வளர்ந்த தன் விளைவால் ஏற்பட்டது மற்றது.

தனக்குப் பிடித்ததை அல்லது நான் சரி எனறு கருதுவதை மற்றவர்கள் மேல் திணிக்கமுயலும் போது ஒத்துக்கொண்டால் சரி. இல்லாவிட்டால் போராட்டம் தானே. இதைப் போராட்டம் என்று கொள்ளாமல் மற்ற வர்களின் வளர்ச்சி என்று ஏன் கொள்ளக் கூடாது.

**தரமான ஒரு இலக்கியப் படைப்பு எவ்வாறு இருக்க வேண்டும் என நீங்கள் கருதுகிறீர்கள்? இத்தகைய தரத்தினை உங்கள் ஆக்கங்களில் 'எவ்வளவு தூரம் பேணியிருக்கிறீர்கள்?**

எந்த ஒரு அளவு கோலையும் வைத்து ஒரு படைப்பைத் தரமானது என்று நிர்ணயிக்க முடியுமா என்று தெரியவில்லை. காலமே மதியினுக்கோர் கருவி என்ற கூற்றுக்கிணங்க காலத்தால் அள்ளுண்டு போய் விடாத படைப் புக்களே தரமானவைகள் என்று கொள்ளலாம். இது கூட எந்த அளவுக்குச் சரியானது என்று தெரியவில்லை.

**ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளின் சிறுகதை தொகுப்புக்கள் இப்போது வருகின்றன. அறுபது எழுபது ஆண்டுகளுக்கு முந்திய படைப்புகள் அவை. அவைகளின் மீள் பிரசுரம் அல்லது தேடித்தேடி எடுத்த எழுத்தாளர்கள் முயற்சியால் வரும் முதல் பிரசுரம் போன்றவைகள் தரத்தினடிப்படையிலா அல்லது நமது முன்னோடிகளை புதியவர்களுக்கு அறிமுகப்படுத்த வேண்டும் கௌரவப்படுத்த வேண்டும் என்னும் அடிப்படையிலா?**

தமிழின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரம் கூட தொண்ணூறுகளில்தான் மறு பதிப்புப் பெற்றிருக் கிறது. அது காலத்தை வெல்லும் சக்தி கொண்ட நாவல் என்பதாலா! கமலாம்பாள் சரித்திரம் (இரண்டாவது நாவல்) பிரதாப முதலியார் சரித்திரத்தை விடவும் நல்ல நாவல் என்று கூறுகின்றார். அமரர் கைலாசபதியவர்கள். ஆகவே எதைக்கொண்டு ஒரு படைப்பை தரமான படைப்பு என்று கூறலாம் என்று தெரியவில்லை.

என்னைப் பொறுத்தவரை ஒரு படைப்பின் பயன் என்பது எத்தனை பேர் அதை வாசித்தார்கள் என்பதிலும் தங்கி இருக்கிறது. இந்த வாசிப்புப் பரவலுக்கான வழிமுறைகள் எத்தனையோ உண்டு. அதில் சக்தி மிக்கதானது அந்த படைப்பைப் பற்றிய விமர்சனங்கள்.

ஒரு படைப்பு, அது வலியுறுத்தும் கருத்து, அதை சொல்லும் விதம், அதற்கான வார்த்தைகளின் சக்தி, வாசிப்பவனை தனது கருத்து நிலைக்குள் ஆட்படுத்திக் கொள்ளும் திறமை போன்றவற்றால் சிறப்புப் பெறுகின்றது. ஒரு படைப்பைப் பற்றிய அல்லது நூலைப் பற்றிய மதிப்புரைகள், அறிமுகவு ரைகள் போன்றவை அவற்றின் தர நிர்ணயம் அல்ல. ஒரு மூன்றாவது நபரை அதை வாசிக்கவும் செய்யும் முயற்சியே அது!

**ஈழத்து இலக்கியத்துறை பற்றிய உங்களது பொதுவான அபிப்பிராயம் என்ன?**

ஈழத்து இலக்கியத்துறை ஒரு செழுமையான வளர்ச்சியுடன் சரியான தடத்தில் நடைபோடுகிறது என்பதே என்னுடைய கருத்து.

தமிழ் நாவல் நூறாண் டைக் கடந்து விட்டது. தமிழ்ச் சிறுகதைநூறாண்டு நோக்கி நெருங்கிக் கொண்டிருக்கிறது. ஆனால் ஒரு நாவல் என்றால் அது இப்படி இப்படித்தான் இருக்க வேண்டும். ஒரு நல்ல சிறுகதை இவ்வாறு தான் அமைய வேண்டும் என்னும் இலக்கண வரம் புகள் ஏதும் கிடையாது. இந்த விரித்த பரப்புக் களிலும் ஈழத்துப் படைப்புக்கள் தங்களது அடையாளத்தை- இருப்பை- காட்டியே வந்துள்ளன.

தமிழ் இலக்கியம் என்றால் தமிழ் நாட்டு இலக்கியம் மட்டுமே என்றொரு காலம் இருந்தது. ஆனால் இப்போது ஈழத்து இலக்கியத்தை உள்ளடக் காமல் தமிழ் இலக்கியம் பற்றிப் பேச முடிவதில்லை.

தமிழ் இலக்கியப் பரப் பில் ஈழத்து இலக்கியமே சரியான தடம் நோக்கிப் பயணம் செய்கின்றது என்று தமிழ் நாட்டு இலக்கியவாதிகளே கருத்துக் கூறுகின்றனர். சரஸ்வதி, எழுத்து, தாமரை, சுபமங்களா, கணையாழி போன்ற இலக்கிய ஏடுகள் ஈழத்து எழுத்தாளர்களை கௌர விக்கத் தயங்கிய தில்லை. அதே நேரம் அங்குள்ள ஜனரஞ்சக ஏடுகள் அங்குள்ள நல்ல படைப்பாளிகளை எப்படிக் கனம்பண்ணுவதில்லையோ அதேபோல் நமது தரமான படைப்பாளிகளையும் கனம் பண்ணுவதில்லை. கண்டு கொள்வதில்லை.

**இலக்கியத்துறையில் தற்போது முன்வைக் கப்படும் அமைப்பியல் வாதம், பின் நவீனத்துவ சிந்தனை பற்றி யாது கூறுகிறீர்கள்?**

எனக்கே இவைகள் புரியமாட்டேன் என்கின்றன. நானும் புரிந்து கொள்ள வேண்டும் என்று ஆசைப்படவோ முயலவோ இல்லை என்பதால் உங்களுக்கு இப்போது எதுவும் அது பற்றிக் கூற முடியா துள்ளது. இது பற்றிய அ.மார்க்ஸ், அவர்களின் பின் நவீனத்துவம் அரசியல் இலக்கியம் என்னும் நூலும், ந. இரவீந்திரன் அவர்களின் பின் நவீனத்து வமும் அழகியலும் என்ற நூலும் என்னிடம் இருக்கின்றன. வாசிப் பிற்காகவும் புரிதலுக் காகவும் இன்னும் வாய்ப்பேற்படவில்லை.

**ஐந்து ஆண்டுகளுக்கு முன் புகலிடச் சூழலில் (பாரிஸில்) ஆயுத அராஜகத்திற்கு பலியாகிப்போன சபாலிங்கம் அவர்களின் ஐந்து ஆண்டு நினைவாக 1999ல் தொகுக்கப்பட்ட "தோற்றுத்தான் போவோமா" என்ற நூலிலிருந்து இத்தொகுப்பு வெளியிடப்படுகிறது.**

## உரத்த சிந்தனை

# துடைப்பானின் குறிப்புக்கள்

அசோக்

***ஒருவர் மீது செலுத்தப்படும் வன்செயல் வடிவங்களில் உச்சநிலை எதுவென நீ கருதுகின்றாய்?***

நீ இப்படி ஒரேயடியாகக் கேட்க முயலின் இக்கேள்விக்கான என் பதில் சிரமமானதே. ஆனால் இப்படிச் சொல்லலாம். உடலின் உயிர் பிரித்தலையே கடுமை என்பேன். வன்கொடுமைகளின் பல்வேறுவகைப்பட்ட பிரயோகங்களும் முடிவுகளும் உயிர் பறித்தலின் நிலையைவிட அகோரம் மிக்கதாயினும் கொலை என்ற அடையாளமே உடலின் இயங்கு நிலை என்ற பௌதீகத்தன்மைக்கு முற்றுப்புள்ளி வைத்துவிடும் உச்சநிலையை அடைகின்றது. அதற்காக உயிர்க்கொலைகளிலும் கொடுமைமிக்க உளவியல் கொலைகளை நான் நிராகரிக்கின்றேன் என்பதல்ல.

***உளவியல்கொலை என்பதன் அர்த்தம் எனக்குப் புரியவில்லை?***

நான் கொலை எனும் செயற்பாட்டை இரண்டாய் இனம் காண்பேன் ஒன்று உடல் சார்ந்த கொலை. மற்றையது உளவியல் கொலை. இவ் உளவியல் கொலை இரண்டு மையங்களில் தன் செயற்பாட்டைக் கொண்டு இயங்கும். அநேகமாய் கடந்த காலங்களில் தேசிய விடுதலை இயக்கங்கள் என சொல்லப்பட்டவற்றின்பால் நாம் நம் கவனத்தைச் செலுத்துவோமானால் இதனை நடைமுறைகளில் இருந்து விளங்கிக்கொள்ள முடியும். ஒவ்வொரு கொலையின் உயிர் அழிப்புக்கு முன்னாலும், பின்னாலும் கொலையாளிகளின் மதிநுட்பமான செயற்பாடு உயிர்பறித்தலுக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதன் மீதான குற்றச் சாட்டுக்களை, வதந்திகளை, பொய்மைகளை தங்களின் வர்க்கநலன்களுக்கேற்ப சமூகமக்கள் திரள் மீது பக்குவமாய் மூளைச்சலவை செய்வதும், அவர்களின் மனோநிலையை உளவியலை இக்கொலையின் சார்பு நிலைக்குத் தள்ளுவதும் தான். அதாவது இம்மனிதன் பற்றிய நல்எண்ணங்களை, அர்த்தங்களை அவர்களாகவே தங்கள் மனத்தில் இருந்து அகலச் செய்யத் தூண்டுதல். இதன் மூலம் இக்கொலையை நியாயம் மிக்கதாய் மனதில் கற்பித்தல். மற்றைய உளவியல் கொலையின் மையச் செயற்பாடு குற்றச்சாட்டுக்கு உள்ளாக்கப்படும் மனிதனின் மன உணர்வுகளினூடாகக் கட்டியமைக்கபடுகின்றது. இயக்கங்களினால் கைது செய்யப்படும் மனிதன் மீது இவ் இயக்க நபர்கள் கைக்கொள்ளும் உடல்/வார்த்தை சித்திரவதைகள், பாலியல் மனோவிகார குரூர துன்புறுத்தல்கள், இவைகள் ஒரு மனிதனின் உளவியலை, ஆரோக்கியமான மனஉணர்வுகளைக் கொன்று அவனை நடைப்பிணமாக்கி விடுகின்றது. கடந்த காலங்களில் ஒவ்வொரு இயக்கங்களும் தங்கள் தங்கள் உறுப்பினர்களை இங்ஙனம் கொலை புரிந்து நடைபிணமாக்கி நடுத்தெருவில் அரசியல் அநாதைகளாக்கி நடமாடவிட்டுள்ள நூற்றுக்கணக்கானவர்களை நாம் அறியமுடியும். உடலின் மீதான வன்முறையைவிட உள்ளத்தின் மீதான இக் குரூர வன்முறைகள் மிகமிகக் கொடியது. எமது தேசிய விடுதலை இயக்கங்களின் தோற்றுவாய்க் காலங்களிலிருந்து இன்றுவரை உடல் சார்ந்த, உளம் சார்ந்த இவ் வன்முறை அணுகுமுறைகள் இயக்கத்தலைமைகளின் அதிகாரத்துவ சுயநலப் போக்கிற்கு மிகவும் "ஆழமாய்" கொடியமுறையல் பயன்படுத்தப்பட்டுள்ளது. சகபோராளியின் ஆக்கபூர்வ விமர்சனங்களைக்கூட மறுக்கும் அதிகாரத்துவம் பற்றி இன்றுகூட நாம் மௌனமானவர்களாகவே இருக்கின்றோம்.

இதை நினைக்கும்போது "இட்" (விலங்கு வன் உணர்ச்சி) நம் எல்லோர் உள்ளத்திலும் இருக்கின்றது என்ற சிக்மண்ட் பிராய்டின் கூற்றே நினைவுக்கு வருகின்றது. "இட்" எனும் விலங்கு வன் உணர்ச்சிக்கும் இனவாத உணர்வுகளுக்கும் நெருங்கிய உறவு உள்ளதை நாம் பார்க்கவேண்டியுள்ளது. இந்த "இட்" செயற்பாடுபற்றி சிக்மண்ட் பிராய்டை ஆராயத் தூண்டியதே முதலாவது உலக மகாயுத்த அழிவுகள் தான். எழுபது இலட்சம் இளைஞர்கள் போர்வீரர்களாக இருந்தனர். நூற்றிஐம்பது இலட்சம் போர்வீரர்கள் அங்கம் இழந்தனர். 1923ம் ஆண்டில் சிக்மண்ட் பிராய்டினால் "ஈத்தும் ஈகோவும்" என்ற ஆய்வுநூல் வெளியிடப்பட்டது. ஆனால் இன்றுவரை அதிகாரத்தின் பெயரால் நடைபெறும் விலங்கு வன் உணர்ச்சி கொண்ட கொலைகளும், அழிவுகளும், சித்திரவதைகளும், பயங்கரங்களும் முடியவில்லை.

தேசியவாத உணர்வுகளின் வெளிப்பாடு தேசிய வெறியாகி விலங்கு வன் உணர்ச்சியோடு தம் சக தேசிய மக்களை முற்றுமுழுதாக எதிரிகளாகப் பார்க்க முனையும் போக்கை, அவர்களை அழிக்க நினைக்கும் நிலையை உருவாக்கி வருகின்றது. சிங்களத் தேசியத் தலைமைகளிலிருந்து தமிழ்த்தேசியத் தலைமைகள் வரை இந்நிலைமைகளை மக்கள் மனங்களில் உருவாக்கும் சக்திகளாக இருந்து வந்துள்ளன. காலத்திற்குக்காலம் மிகவும் கொடூரமான முறையில் தமிழீழ விடுதலைப் புலிகளினால் கொலை செய்யப்படும் சிங்கள பொதுமக்களின் மரணம், முஸ்லிம் மக்களின் மீது நடத்தப்படும் படுகொலைகள் இவற்றிலிருந்து தேசிய வாதத்தின் போக்கு எவ்வாறு எதிர்தேசிய இனங்களின் மீது விலங்கு வன் உணர்ச்சியாக கொடூரமானநிலை உணர்வுகளோடு கட்டியமைக்கப்படுகின்றது என்பதை அறியமுடியும்.

அதேநேரம் தங்களின் கருத்துக்களை ஏற்றுக்கொள்ளமுடியாத, மாறுபட்ட கருத்துக்கொண்ட மனிதர்களையெல்லாம் தங்களின் துரோகிகளாக பார்க்க முனையும் போக்கையும், மக்களின் விரோதிகளாகக் காட்ட விழையும் நிலையையும் நாம் அவதானிக்க முடியும். இவ்வாறு மாறுபட்ட கருத்துக்களை, சிந்தனைகளைக் கொண்டிருப்பவர்கள் எல்லோரையும் துரோகிககளாகப் பார்க்கும் உளவியல் கலாசார பாராம்பரியத்தின் தோற்றுவாய் தலைமைகளை, தங்களின் துரோகிகளாக பார்க்க முனையும் போக்கையும், மக்களின் விரோதிகளாகக் காட்ட விழையும் நிலையும் நாம் அவதானிக்க முடியும். இவ்வாறு மாறுபட்ட கருத்துக்களை, சிந்தனைகளைக் கொண்டிருப்பவர்கள் எல்லோரையும் துரோகிகளாகப் பார்க்கும் உளவியல் கலாசார பாரம்பரியத்தின் தோற்றுவாய் தமிழரசுக்கட்சிக் கூட்டம் ஒன்றில் அன்றைய உணர்ச்சிக் கவிஞரும் இன்றைய தமிழீழ விடுதலைப்புலிகளின பிரமுகருமான காசி ஆனந்தன் என்னும் நபர் இப்படிக் கூறுகின்றார், "…. ஆகியோர் தமிழினத்தின் எதிரிகள். அவர்கள் இயற்கை மரணத்திற்கோ அல்லது விபத்தான மரணத்திற்கோ தகுதியானவர் அல்லர். தமிழமக்கள். குறிப்பாக

> ***ஒடுக்கப்பட்ட மக்களின் கோரிக்கைகளில் தேசியவாத உணர்வை மையப்படுத்தி உணர்ச்சி ஊட்டி கொதிக்க வைக்க முயலும் பிற்போக்குவாத அரசியல் தலைமைத்துவம் தொடராய் விழிப்பாய் இருப்பதும், தேசிய இனப்பிரச்சினைகளை மார்க்சீய வழிப்பட்ட அணுகுமுறையில் இருந்து ஆராய்வதும், தலைமை கொடுப்பதும், முன்னெடுப்பதுவுமே இத்தேசியவாத பெரும் சேற்றிலிருந்து நாம் விடுபட ஏதுவாக இருக்கும் என்பதே என் கருத்தாகின்றது.***

இளைஞர்கள், அவர்கள் எப்படி மரணிக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்க வேண்டும்."

இந்த நபர் போன்றவர்களின் பிரச்சாரவாடை உணர்ச்சி ஊட்டல் என்பவற்றின் பிழைகளை நாம் கடந்த காலங்களில் பல்வேறு இயக்கங்களின் ஊடாக அறுவடை செய்துள்ளோம். இதற்கு பல்வேறு கொலைகளை நாம் உதாரணம் காட்டமுடியும். 1985ம் ஆண்டில் யாழ் பிரஜைகள் குழுவின் முக்கிய உறுப்பினரும், யாழ்/பரியோவான் கல்லூரி அதிபருமான திரு. ஆனந்தராஜா அவர்க்ள் விடுதலைப்புலிகளினால் படுகொலை செய்யப்பட்டார். இவர் படுகொலை செய்யப்படுவதற்கு புலிகளினால் வைக்கப்பட்ட பிரச்சாரம் இவர் இராணுவ அதிகாரிகளோடு நட்பு வைத்திருந்தார் என்பதே. இக்கொலை நடந்து 15 மாதங்களின் பின்னர் ஸ்ரீலங்கா தொலைக்காட்சிகளிலும் பல்வேறு நிகழ்ச்சிகளிலும் விடுதலைப்புலிகளின் தலைவர்கள் ஸ்ரீலங்கா இராணுவ அதிகாரிகளுடன் உறவுபூண்டு காட்சியளித்துக் கொண்டிருந்தார்கள். இதுதான் தேசிய சந்தர்ப்பவாத அரசியல். இதை விளங்கிக்கொள்ள முனையும் ஒவ்வொரு மனிதனின் மீதும் தேசிய சந்தர்ப்பவாதிகளின் "வெகுஜன புனைவுகள்" துரோகி என்ற பட்டத்தோடு மரணத்தை நோக்கிய "கதைக்கட்டல்களாகவே" அமைந்திருக்கின்றன.

***தேசியவாத உணர்வுகள் எப்படி கட்டியமைக்கப்படுகின்றது என்பதைபற்றி நீ எவ்வாறு விளங்கிக் கொள்ள முயலுகின்றாய்?***

தேசியம் தொடர்பாக நம்முன் பல்வேறு வகைப்பட்ட கருத்துக்கள் இருந்த போதிலும் என் பார்வை இது என்பேன். ஒரு தேசியஇனத்தின் இனப்பிரச்சினை எந்த அரசியல் கருத்தியல் கூறுகளை தன்னகத்தே கொண்டு வழி நடாத்தப்படுகின்றது என்பதே ஆதார பிரச்சினையாகும். தேசியம் என்பது ஒரு தேசிய இனம் உருவாக்கும் உளவியல்- கருத்தியல் சார்ந்த அரசியல் செயற்பாட்டு இயக்கம். ஒடுக்கப்பட்ட தேசிய இனங்களின் நியாயம் மிக்க உரிமைகளுக்கு அப்பால் ஒடுக்கப்பட்ட தேசியத் தலைமைகள் ஏனைய தேசிய இனங்களின்பால் விரோதங்களையும் வெறுப்புக்களையும் குரோதங்களையும் ஒடுக்கபட்ட தேசியஇன மக்களின் உளவியலில் ஏற்படுத்தி அதன் தாக்கமாக தேசியமாக, தேசிய வெறியாக கட்டியமைக்கும் செயலையே தேசியவாத உணர்வுநிலை உச்சமாக நான் கருதுகின்றேன். இந்த உளவியலில் ஏற்படும் தேசிய வெறித்தாக்கமே தமிழீழ விடுதலைப்புலிகளினால் படுகொலை செய்யப்படும் அப்பாவி சிங்கள பொதுமக்களின் மரணங்களை ஏற்றுக்கொள்வதும் முஸ்லிம் மக்கள் அடித்து விரட்டப்படும் போதும், கொலைசெய்யப்படும் போதும் மௌனமாய் பார்த்துக் கொண்டிருப்பதுமாகும். தேசியவாதம் எப்பொழுதும் நன்னெறிக் கோட்பாடுகளிலிருந்தோ, முற்போக்குத் தன்மையிலிருந்தோ எங்கேயும் இதுவரை உருவாக்கப்படவில்லை எனினும் கசப்பான உண்மையை நாம் ஜீரணித்துத்தான் ஆகவேண்டியுள்ளது.

***அப்படியானால் எமது போராட்டத்தை நீ ஏற்றுக்கொள்ளவில்லையா?***

எமது ஒடுக்கபட்ட தமிழ்பேசும் மக்களின் உரிமைப்போராட்டத்தை நான் என்றுமே நிராகரித்தது கிடையாது. எமது போராட்டத்தில் உயிரை ஈயும் ஒவ்வொரு சக மனிதனையும் நான் எப்பொழுதும் நேசிப்பவனாகவும் அவன்பால் மரியாதை கொண்டவனாகவுமே இருக்கின்றேன். நான் பேசுவதெல்லாம் இந்த நல்மனிதர்களின் உயிர்த்தியாகங்கள் மீது சவாரி செய்யும் பிற்போக்குவாத இராணுவத்தலைமைகள் பற்றியும் அவர்களின் அரசியல்பற்றியுமே. நானும் ஓர் தேசிய விடுதலை இயக்கம் ஒன்றில் இருந்தவன் என்ற உணர்வும் அதன் யதார்த நிலையும்தான் ஏ்ன்னை தேசியவாதம் தொடர்பாய் ஆராயத் தூண்டுகின்றது. இந் நேரத்தில் டாம் நாய்ரனின் கருத்துக்களை பார்ப்பது அவசியமாகின்றது. அவர் கூறுகின்றார்;

"நவீனத்துவம் மற்றும் உலகமுதலாளித்துவத்தின் விளைவான சமச்சீரற்ற வளர்ச்சி தர்க்க விரோதமான ஒரு கண்ணோட்டத்தை பின்தங்கிய பகுதி மக்கள் சமூகங்களின் மத்தியில் ஏற்படுத்திவிடுகின்றது. நிறைவேற்றப்படாத எதிர்பார்ப்புக்கள், உரிமைகள் இவைகள் இம்மக்களில் ஆத்திரம் வெறுப்புக்களாய் மாறி உளவியலில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. இது பின்னர் தேசியக்கருத்தியலாகவும், தேசிய இயக்கங்களாகவும் வெளிப்படுகின்றது. பின்தங்கிய பகுதிகளிலுள்ள மேல் தட்டினரே இத்தகைய உணர்வுகளுக்கு முதன்முதலில் ஆளாகுவதோடு அவர்களே தேசிய இயக்கங்களை முன்னெடுத்தும் செல்கின்றனர்."

அத்தோடு கிராம்ஷி சொல்வதையும் கேட்போம், "மேலாண்மை செலுத்தக்கூடிய வர்க்கமாக உருவாக விரும்பும் எந்த வர்க்கமும் தன்னைத் தேசியமயமாக்கிக் கொள்ளும்"

***சரி, அப்படியாயின் ஒடுக்கப்படட மக்களின் விடுதலைக்கு வழிதான் என்ன?***

ஒடுக்கப்பட்ட மக்களின் கோரிக்கைகளில் தேசியவாத உணர்வை மையப்படுத்தி உணர்ச்சி ஊட்டி கொதிக்க வைக்க முயலும் பிற்போக்குவாத அரசியல் தலைமைத்துவம் தொடர்பாய் விழிப்பாய் இருப்பதும், தேசிய இனபிரச்சினைகளை மார்க்சீய வழிப்பட்ட அணுகுமுறையில் இருந்து ஆராய்வதும், தலைமை கொடுப்பதும், முன்னெடுப்பதுவுமே இத்தேசியவாத பெரும் சேற்றிலிருந்து நாம் விடுபட ஏதுவாக இருக்கும் என்பதே என் கருத்தாகின்றது. இல்லாவிடின் ஆபிரிக்கப் புரட்சி எழுத்தாளன் பிரான்ஸ் பனான் சொல்வது போல "தேசியம் நம்மை குருட்டுச் சந்திக்கே இட்டுச் செல்லும்"



மலையாள மாந்திரிகம்

பிரிந்தவர்களை ஒன்று சேர்க்க, விட்டு சென்றவர்களை அழைத்து எடுக்க, கணவன், மனைவி தன்னை விட்டு பிரியாமல் இருக்க, கணவன் மனைவி பிணக்கு தீர, பிரயாண தடை நீங்க, தடைப்பட்ட திருமணம் கைகூட, காதல் வெற்றி பெற, வெளிநாட்டவர்களுக்கு விசேட சலுகை வழங்கப்படும். நேரடி தொடர்புகளுக்கு

T.P. 01-4662771

கருணாகரபூசணம், உலக மலையாள மாந்திரீக ஜோதிட சக்கரவர்த்தி P.K. Sammy (J.D.GN) J.P

162, Kotahena St, Mayfield Rd, Col-13 Tel: 01-342463 Fax: 0094-1-344831

E-Mail: drpksamy @ sltnet. lk Web site: www.imexpolanka.com/drpksami

வழமைபோல் நுவரெலியாவிலும் எமது சேவை நடைபெறுகிறது.


ஆதவன் சினிமா




ஜாதகம்

அருள் ஞானத்துடன் கூறப்படும் தெட்டத்தெளிவான ஜாதகங்கள் என்றுமே பிழைத்தது இல்லை. நடந்தது, நடக்கப்போவதுடன், திருமணம் எப்போது எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்கு, வாழ்வில் அதிர்ஷ்டம் எப்போது என்பதை என்னால் கூறமுடியும். தேவைகளுக்கு நேரில் வருவது சாலச்சிறந்தது. விபரங்கள் அறிய திகதி, மாதம், வருடம் போதுமானது. கைரேகை என்றால் திகதி, மாதம், வருடம் தேவையில்லை.

தொடர்புகளுக்கு மலையால மாந்திரீக சக்கரவர்த்தி தூர்க்கை சித்தர் டாக்டர் பி.கே.சாமி( J.D.G.A.N) J.Pஇல. 162, கொட்டாஞ்சேனை வீதி மேபீல்ட் ரோட், கொழும்பு- 13 தொ.பே 344883


# தமிழ்த் திரைப்படக் கதைகள்

## பாலுறவு மற்றும் வன்முறைக் கதைகள்





பாலியல் மற்றும் வன்முறை என்ற இரண்டு கூறுகளுமே மனிதனுக்குள் உறங்கிக் கொண்டிருக்கிற அடிப்படை அம்சங்கள் என்று கூறலாம். இந்த இரண்டையும் பற்றி எல்லா இலக்கிய வடிவங்களும் பேசியிருக்கின்றன. ஓவியம், கவிதை, நாவல், சிறுகதை என்று பல வடிவங்கள் பாலியல் கூறுகளை மிகைப்படுத்தியே வெளிப்படுத்தியிருக்கின்றன. சினிமாவும் இதற்கு விதிவிலக்காக அமையவில்லை. தமிழ் சினிமா பல்வேறு பரிணாம வளர்ச்சியைக் கண்ட காலகட்டத்தில் 1985-க்குப் பின்னர் பாலியலையும், வன்முறையையும் முன்நிறுத்தி பல இயக்குநர்கள் படம் எடுத்தார்கள்.

இந்த விசயங்களை முன்னிறுத்தும் போது தான் தாங்கள் போட்ட முதலீடு திரும்பக் கிடைக்கிறது என்ற அடிப்படையிலும், இலாபமும் பிரபல்யமும் கிடைக்கிறது என்பது உறுதியாகிறது என்ற நிலையிலும் இது போன்ற படங்கள் எடுக்க பலர் முன்வந்தனர். சமீப காலத்தில் பரவிக் கொண்டிருக்கும் சந்தைப் பொருளாதாரத்தில் எதெல்லாம் விலைபோகுமோ, அதெல்லாம் திரைப்படத்திற்கு கருவாக அமையும் என்ற தத்துவம் செயல்படத் துவங்கியது. இந்தச் சந்தைப் பொருளாதாராத்தைத் தொடர்ந்து இயக்கிக் கொண்டிருப்பதற்கு வெற்றிகரமான பார்முலாக்களாக அமைந்திருப்பதுதான் பாலுறவு மற்றும் வன்முறை

பாலுறவை முன்னிறுத்தி புதிய புதிய கதாநாயகிகள் வட நாட்டிலிருந்து இறக்குமதியாக்கப் படுகிறார்கள். தமிழ் தெரியாத, தமிழ் கலாசாரத்தைப் பற்றி ஒன்றுமே தெரியாத இந்த கதாநாயகிகள் தமிழ் பெண்ணின் வேடமேற்று நடிப்பது கேலிக்குரியது. இவர்களுடைய வெள்ளைத்தோலும், உடல்வாகும் சினிமாவில் நடிக்கத் தகுதிகளாக அமைகின்றன.

நக்மா, ரம்பா, ஊர்மிளா, மனீஷா, சிம்ரன் ஐஸ்வர்யா ராய், சுஸ்மிதா சென் போன்ற நடிகைகள் இந்தக் காலக்கட்டத்தில் தமிழ் சினிமாவை ஆக்கிரமிப்பு செய்ததைக் காணலாம். இவர்கள் காட்டும் கவர்ச்சி, ஆடைக்குறைப்பு, உணர்வுகளைத் தூண்டும் நடன அசைவுகள் எல்லாமே பாலுணர்வு என்ற வியாபார யுக்திக்கு பக்கபலமாய் நிற்கிறது. இந்த கவர்ச்சிக் கதாநாயகிகளுக்கு ஏற்ற கதையமைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுள்ளதால், கதையின் ஆழம், அர்த்தம் நீர்த்துப் போய்விடுகிறது. "இந்தியன்" படத்தில் வரும் நான்கு கதாநாயகிகள் வியாபார நோக்கத்தோடு கவர்ச்சிக்காகப் பயன்படுத்தப் பட்டிருக்கிறார்கள் என பதற்கு ஒரு நல்ல உதாரணம்.

தமிழ்ப் படங்களில் வன்முறை பல வடிவங்களில் விவரிக்கப்படுகிறது. போலீசுக்கும், அரசியல்வாதிக்கும் கிராமிய நாட்டாண்மைக்கும், திமிர் பிடித்தவனுக்கும் பரம்பரை பரம்பரையாக சண்டைபோட்டுக் கொள்ளும் இரண்டு கிராமங்களுக்கிடையே, - குடும்பங்களுக்கிடையே உள்ள மோதல்களை அழகியல் பூர்வமாகக் காட்டுவதுதான் வன்முறையாக அமைகிறது. இதில் இன்னும் கூர்மையாகப் பார்க்க வேண்டியது என்னவென்றால், இந்த வன்முறை நிறைந்த மோதல்களை நியாயப்படுத்தும் வகையில் கதை பின்னப்பட்டிருப்பதாகும்.

இன்னும் ஒரு சில படங்களில் நிகழ்கால அரசியல் நடப்புகள், நிகழ்கால விவாதங்கள், நிகழ்கால வாழ்க்கைப் போக்குகள் வன்முறை கலந்த கதையாக மாற்றித் தரப்படுகின்றன. ரோஜா, இந்தியன், ஜென்டில்மேன் போன்ற திரைப்படங்கள் இதற்கு நல்ல உதாரணம். தமிழ் சினிமாவில் வன்முறை என்பது ஒரு தந்திரமாகவே பயன்படுத்தப்படுகிறது.

இந்தக் காலக்கட்டத்தில் இயக்குநர்களாக இருக்கிற வர்கள் பெரும்பாலும் திரைப்படத்துறையில் படித்து பட்டம் பெற்று வருகிற இளைஞர்கள். இவர்கள் தங்களுடைய பெயரை நிலைக்க வைக்க ஏதாவது ஒரு புதிய யுக்தியைக் கையாளுகின்றனர். அதில் வன்முறையோ அல்லது பாலுணர்வோ மேலோங்கி நிற்பதைக் காணலாம். தங்களுடைய போக்கிற்கு ஒரு வரவேற்பு கிடைத்தவுடன் இன்னும் கூடுதலாகவே வியாபார ரீதியில் முயற்சி செய்கின்றனர்.

அக்கினி நட்சத்திரம், அமைதிப்படை, ரோஜா, ஜென்டில்மேன், தேவர் மகன், இந்தியன், பம்பாய், குருதிப்புனல், மகாநதி போன்ற படங்கள் இந்த காலக்கட்டத்தில் வெளிவந்தவையே.

ஆர்.கே.செல்வமணி, மணிரத்னம், ஷங்கர், சந்தான பாரதி, வாசு போன்றோர் இந்தக் காலத்தில் அதிகம் பேசப்பட்ட இயக்குநர்கள் ஆவர்.

தமிழ்த் திரைக்கதைகள் இயங்குகின்ற தளங்கள்

தமிழ்த் திரைப்படத்தில் தொடக்கம் முதல் இன்றுவரை, கதை இயங்குகின்ற தளம் கொஞ்சம் கூட மாறாமல் இருப்பது ஆச்சரியத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்துகிறது. சொல்லப்படும் விதமும், பாணியும் ஆங்காங்கே மாற்றப்பட்டிருக்கிறது. காதல் என்ற மையக் கருத்தை வைத்து நூற்றுக்கணக்கான திரைப் படங்கள் வந்து விட்டன. காதல் என்றால் என்ன? என்பது காதல் செய்பவர்களுக்கும் ஒரு சரியான புரிதல் இல்லை என்பதாலோ என்னவோ, அதைப் பற்றி என்ன பேசினாலும் புதுமையாகவும், புத்துணர்ச்சி அளிப்பதாகவும் அமைந்து விடுகிறது. இது பற்றி படம் எடுக்க முயலும் இயக்குநர் எவ்வளவு பெரிய முட்டாள் தனமான கதையைக்கூட விற்றுவிட முடியும் என்ற நிலை உருவாகியுள்ளது. காதல் என்பது ஒரு சக்திவாய்ந்த கதைக்கருஎன்பதை நன்கு புரிந்து கொண்ட, வியாபார நோக்கம் கொண்ட இயக்குநர்கள் எந்தமாதிரிக் கதையை எடுத்தாலும் அதில் காதல் இருக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை ஏற்படுத்திக் கொள் கிறார்கள். இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் பம்பாயில் ஏற்பட்ட கலவரத்தைப் பற்றிச் சொல்லி வந்த "பம்பாய்" திரைப்படம் ஒரு முழுநீள காதல் கதையை முன்னிலைப்படுத்துகிறது. ஆக, காதலும் ஒரு வியாபாரப் பொருளாகிவிட்டது.

குடும்ப உறவு என்பது கதை இயங்குகின்ற இன்னொரு தளம். கூட்டுக் குடும்பத்தில் வாழ்ந்த தமிழ்ப் பாரம்பரியமானது எல்லா உறவினர்களையும் ஒரு கூரையின் கீழ் ஒன்று சேர்த்து ஒற்றுமையாக வாழ வழி செய்தது. இந்தக் கூட்டுக் குடும்பத்தில் உள்ள அன்பு, பாசம், இரக்கம், பிரச்சினை, கண்ணீர், திருமணம், சாவு போன்ற பல்வேறு விசயங்களை திரைப்படங்கள் மையக் கருத்தாக எடுத்து எண்ணிலடங்காத திரைப்படங்களை உருவாக்கியுள்ளது. குடும்பத்தில் உள்ள பல நபர்களுக்கிடையே உள்ள புரிதலற்ற தன்மை, சண்டை, பாசம் என்ற கூறுகளை திரைப்படங்கள் இறுகப் பற்றிக் கொள்கின்றன.

தமிழ் மக்கள் இயற்கையிலேயே உணர்ச்சிவசப்பட்டுக் கிடப்பவர்கள். இதனால் இது போன்ற உறவுச் சங்கிலிக்குள் ஏற்படுகிற விரிசல் நிச்சயம் அவர்களது மனதை வருடிச் செல்கிறது என்பதில் ஐயமில்லை.

அன்று வெளிவந்த பாசமலர், பாகப்பிரிவினை முதல் இன்று வந்திருக்கின்ற சூரியவம்சம், காதலுக்கு மரியாதை போன்ற படங்கள் வரை பார்த்து நெகிழ்ந்து போகிற வர்களைப் பார்க்கிறோம்.

சமூகப் பிரச்சினைகளான பெண்ணடிமை, வரதட்சணை, சிசுக்கொலை, இலஞ்சம், கொள்ளை, தீவிரவாதம், திருட்டு, சாதிய ஏற்றத்தாழ்வு, அரசியல் பிளவு போன்ற சமூகப் பிரச்சினைகளை பலர் கையில் எடுப்பதில்லை. அப்படியே சிலர் எடுத்தாலும் சரியான பகுப்பாய்வும், விமர்சனப் பார்வையும் இல்லாத நிலையில் ஒழுங்காக கையாள முடியாமல் தோற்றுப் போய்விடு கின்றனர். இதனால் ஒரு ஆழமான பார்வையை, தீர்க்கமான நிலைப்பாட்டை அந்த பிரச்சினைக்கு மாற்றுத் திட்டத்தை இயக்குநர்களால் தர முடிவதில்லை. மொத்தத்தில் சமூகப் பிரச்சினைகளை கையாளுவது என்பது ஒரு பாணியாகவே அமைந்து விட்டது.

நகைச்சுவை, திகில், மர்மம், ஆச்சரியம் ஊட்டும் விசயங்களுக்காகவே ஒரு சில படங்கள் எடுக்கப்படுகின்றன. "மகளிர் மட்டும்" அவ்வை சண்முகி போன்ற படங்களில் நகைச்சுவைதான் கதைக்கரு. மற்றதெல்லாம் பின்னுக்குத் தள்ளப்படுவதைக் காணலாம்.

தொடரும்....